# கார்ப்பரேட் சாமியார்கள்

அதிகார வர்க்கம் ஏன் இவர்களை நம்புகிறது?
என்ன செய்கிறார்கள்? எப்படிப்பட்ட நெட்வொர்க்?



குகன்

# கார்ப்பரேட் சாமியார்கள்

குகன்

மின்னூலாக்கம் : செல்லா

மதி நிலையம்

மின்னூலாக்கம்
செல்லா

www.minnoolakam.blogspot.com

தகவல் களஞ்சியம் / Informations

கார்ப்பரேட் சாமியார்கள்
Corporate Samiyaargal
by Gugan ©

M.N. 438
First Edition December 2013
120 Pages, Price Rs.90

Printed in India.

Mathi Nilayam,
No.2/3, 4th Street,
Gopalapuram,
Chennai - 600 086.
Ph: 044-28111506

Website: www.mathinilayam.com

Email mathinilayambook@gmail.com; info@mathinilayam.com

Author's Email tmguhan@yahoo.co.in

Design / Layout N. Premkumar, JLP Designs

This book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this the rights under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book.

# உள்ளே


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 7 |
| | அறிமுகம் | 10 |
| 1. | ரஜனீஷ் ஓஷோ | 13 |
| 2. | சத்ய சாய்பாபா | 28 |
| 3. | சந்திராசாமி | 38 |
| 4. | சத்குரு ஜக்கி வாசுதேவ் | 45 |
| 5. | மாதா அமிர்தானந்தமயி தேவி | 58 |
| 6. | பங்காரு அடிகள் | 68 |
| 7. | ஜெயேந்திர சரஸ்வதி | 77 |
| 8. | பாபா ராம்தேவ் | 89 |
| 9. | ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் | 99 |
| 10. | கணபதி சச்சிதானந்தா | 107 |
| 11. | டி.ஜி.எஸ்.தினகரன் | 111 |
| 12. | சாகீர் அப்துல் கரிம் நைக் | 117 |

# முன்னுரை

கார்ப்பரேட் சாமியார்கள் - ஒன்று, கார்ப்பரேட் நிறுவனங்களோடு தொடர்பு வைத்துள்ளவர்களாக இருப்பார்கள். அல்லது இவர்களே கார்ப்பரேட் நிறுவனத்தை உருவாக்கியிருப்பார்கள்.

இந்த நூலில் இருக்கும் அனைத்து சாமியார்களும் ஆரம்பத்தில் சிறிய அளவில் தொண்டு செய்யத்தான் தொடங்கினார்கள்.

பல அரசுகள் செய்ய முடியாத நல்ல காரியங்களைத் தனியொரு சாமியாரால் இன்று செய்ய முடியும். வியாபாரிகளுக்கு, தொழில் அதிபர்களுக்குக் கூட இல்லாத வெளிநாட்டு தொடர்பு இவர்களுக்கு இருக்கிறது. எவ்வளவு பெரிய தொகை என்றாலும் இருந்த இடத்தில் இருந்தே அவர்களால் பெற்று விட முடியும். மொத்தத்தில், கோர்ட் சூட் போடாத தொழில் அதிபர்கள்.

இதைச் சொல்லும் போது சிலருக்கு கோபம் வரலாம். ஆனால், பணம் சம்பாதிக்கும் விஷயத்தை தொழில் என்று தானே சொல்ல வேண்டும். இன்றைய காலத்தில் அரசியலை, ஒரு தொண்டு செயல் என்றோ, மக்கள் சேவை என்றோ சொன்னால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியாதோ அதுபோலத்தான் சாமியார்களின் செயல்பாடுகள் ஆன்மிகத்துக்கு அப்பாற்பட்டதாகி விட்டது.

விற்பனையில் இரண்டு வகை இருக்கிறது. ஒன்று 'Product Selling'. மற்றொன்று 'Concept Selling'. இன்னும் விவரமாகச் சொல்லுவது என்றால் சோப்பு, சீப்பு, கண்ணாடி, டி.வி, ரேடியோ இதுவெல்லாம் product. இவற்றை விற்பனை செய்வது product selling என்பார்கள்.

அதுவே, இன்ஷூரன்ஸ், மியூசுவல் பன்ட் போன்ற முதலீட்டு திட்டங்கள் எல்லாம் concept பிரிவில் வரும். இத்தனை வருடங்களில் இவ்வளவு பணம் வரும் என்ற நம்பிக்கையில் அந்த கான்சப்டில் முதலீடு செய்கிறோம். அதனால், இதை 'concept selling' என்று கூறுவார்கள்.

டாடா, அம்பானி, நாராயணமூர்த்தி, விஜய் மல்லையா போன்றவர்கள் பொருள்களை விற்பனை செய்வதால் 'product selling' வியாபாரி பட்டியலில் வருகிறார்கள்.

பக்தி, யோகா, ஆரோக்கியம், வாழ்க்கை போன்ற விஷயங்கள் எல்லாம் 'கான்சப்ட்' பட்டியலில் வருகிறது. இதனால், மன அமைதி கிடைக்கும், மன அழுத்தம் குறையும், நிம்மதியாக இருப்போம் என்ற நம்பிக்கையில் சாமியார்களைத் தேடிச் செல்கிறார்கள். அதனால், சாமியார்களைப் பக்தி, ஆன்மிகம் என்ற 'கான்சப்ட்' விற்கும் concept selling வியாபாரிகள் என்று சொல்லலாம்.

டாடா, அம்பானி போன்ற பெரிய தொழிலதிபர்களால் அரசியலை எப்படி நிர்ணயம் செய்ய முடியுமோ, அதே போல் சாமியார்களாலும் அரசியல் முடிவை எடுக்க முடியும். ஒரு தொழிலதிபரால் வெளிநாட்டில் ஒரு கிளை திறப்பது போல், சாமியாராலும் ஒன்றல்ல, பல கிளைகளைத் திறக்க முடியும். திறந்திருக்கிறார்கள்.

இன்போஸிஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகள் இருபது சதவிகிதம் வீழ்ச்சியடைந்தால், பங்கு சந்தை எப்படி பாதிக்கப்படுமோ, அதுபோல ஒரு சாமியார் பாதிக்கப்பட்டால் அவர் மூலம் நடத்தப்படும் அறக்கட்டளையின் பணிகள் எல்லாம் பாதிக்கப்படும். மறைமுகமாக அவர்கள் எங்கெல்லாம் முதலீடு செய்திருக்கிறார்களோ அங்கெல்லாம் பாதிக்கப்படும்.

இந்த நூலின் நோக்கம் கார்ப்பரேட் சாமியார்களை குறை கூறுவதில்லை. அவர்களின் மறுபக்கத்தைச் சொல்வதற்காக இல்லை. இவர்களை நம்பாதீர்கள் என்று சொல்லும் பகுத்தறிவு புத்தகமில்லை. ஆனால், இவர்களைப் புரிந்துகொள்ள உதவும் புத்தகம்.

சாமியார்களைப் பக்தியோடு அணுகிய புத்தகங்கள் உண்டு. அவர்களின் கபட நாடகங்களைத் தோலுரித்துக் காட்டும் பகுத்தறிவு நூல்கள் உண்டு. ஆனால், இந்த நூல் கார்ப்பரேட் சாமியார்களை, வியாபாரிகள் என்ற கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கிறது.

சாமியார்களைப் பற்றிய புத்தகம் என்பதால் பகுத்தறிவுக்கும், அறிவியலுக்கும் சம்மந்தமில்லாத சில கதைகளைச் சொல்ல வேண்டியதாக இருக்கும். அவர்களைப் பற்றிச் சொல்லும் போது, அவர்களைப் பின்பற்றுபவர்கள் நம்பும் விஷயத்தைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அவர்களின் புகழைப் பரப்பும் உள்நோக்கமில்லை.

ஒரு தொழில் அதிபர் வாழ்க்கை வரலாறு எப்படி அலசப்படுகிறதோ அப்படியே இந்த நூலிலும் அலசப்பட்டிருக்கிறது. தொழிலதிபர்கள், மக்களை நம்பி தொழில் செய்கின்றனர். ஆனால் மக்களின் நம்பிக்கையைத் தொழிலாக மாற்றிக்கொண்டவர்கள் இந்த கார்ப்பரேட் சாமியார்கள்.

அன்புடன்,
குகன்

# அறிமுகம்

நம் நாட்டில் 'கடவுள் அவதாரம்', 'நடமாடும் தெய்வம்', 'கண் முன் தோன்றும் ஆண்டவன்' போன்ற சாமியார்களுக்குப் பஞ்சமே இல்லை. ஒவ்வொரு மாநிலத்தில், ஒவ்வொரு ஊரில் ஏதோ ஒரு சாமியார் இருக்கிறார். அவர் அருளாலும் அல்லது சித்துவிளையாட்டாலும் பல பக்தர்களை உருவாக்கியிருக்கிறார்கள். உலகத்தில் பல இடங்களில் தங்களுக்கென்று சீடர்களை உருவாக்கி இருப்பார்கள். தங்கள் பெயரைப் பரப்புவதற்கு இந்த சீடர்களைப் பயன்படுத்தியிருக் கிறார்கள்.

பெரும் பண முதலைகள் என்று சொல்பவர்கள், அதிகாரத்தில் அமர்ந்தவர்கள், அரசுப் பணியில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் என்று பாரபட்சமில்லாமல் பலரும் கார்ப்பரேட் சன்னியாசிகளைத் தேடி வருகிறார்கள். சாமியாரின் ஆசியைப் பெறுகிறார்கள். அவர்கள் மூலம் தங்களுக்குத் தொடர்பு கிடைத்து, சாமியார்கள் வளரவும் தொடங்கியிருக்கிறார்கள்.

கார்ப்பரேட் சாமியார்களைத் தேடி வரும் பக்தர்களுக்கு சிறப்புத் தகுதிகள் ஏதாவது இருக்க வேண்டுமா என்றால், இல்லை என்பதுதான் பதில். நன்கொடை கொடுக்கப்படும் பணத்தின் ரிஷிமூலத்தைப் பற்றி எப்படி ஆராயப்படுவதில்லையோ அதேபோல் பக்தர்களின் தகுதிகள் பற்றியும் ஆராயப்படுவதில்லை. சில சமயம் பிறந்த ஜாதி, சாமியார்களைச் சந்திக்கத் தடையாக இருக்கலாம். அவ்வளவுதான். பக்தர்கள் கொண்டு வரும் பணத்தை ஆய்வு செய்து தணிக்கை செய்து ஆராயப்படுவதில்லை.

ஏதாவது தொழிலில் மோசடி செய்து அபகரிக்கப்படும் பணம், கருப்புப் பணம், லஞ்சப் பணம், ஊழல் பணம், இன்னபிற

கொள்ளைப் பணங்களுக்கு உரிமையாளர்களான ஃபிராடு பேர்வழிகள் தாராளமாக கார்ப்பரேட் சாமியார்களைச் சந்திக்கிறார்கள். தங்கள் நன்கொடையையும் கொடுக்கிறார்கள். சிலருக்குத் தங்கள் கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்ற கார்ப்பரேட் சாமியார்கள் தேவைப்படுகிறார்கள்.

கார்ப்பரேட் சாமியார்கள் சிலர் செய்யும் காமலீலைகள் மற்றும் பிற அந்தரங்க விஷயங்கள் பற்றி இங்கு நாம் விவாதிக்கப் போவதில்லை. ஒரு பெண்ணின் சம்மதத்தோடு அவர்கள் உறவு கொள்வது அவர்களின் அந்தரங்கம். அதைப் பற்றி எழுதுவதற்குப் புதிதாக ஒன்றுமில்லை.

ஆனால், இந்தச் சாமியார்களை, கார்ப்பரேட் சாமியார்கள் என்ற கண்ணோட்டத்தில் யாரும் அணுகியதில்லை. இவர்கள் பெரும்பாலும் பெண் விஷயங்களில் சிக்குவதில்லை. சிக்கினாலும் வெளியே தெரியாத அளவுக்கு அரசியல் பலம் இருக்கிறது. அரசியலில் முக்கிய முடிவுகள் எடுக்கும் அதிகாரம் இந்தக் கார்ப்பரேட் சாமியார்களிடம் இருக்கிறது.

இதுபோன்ற அரசியல் பின்புலம் இல்லாததால்தான் சிலர் மாட்டிக் கொண்டார்களோ என்று எண்ணத் தோன்றும் அளவிற்கு கார்ப்பரேட் சாமியார்களின் அரசியல் தொடர்பைத் தெரிந்துகொள்ளும்போது தெரியும்.

சொந்தமாக ஆசிரமம் வைத்து, காமலீலையில் மட்டும் ஈடுபடும் சாமியார்கள் என்றாவது ஒரு நாள் பிடிபட்டு விடுவார்கள். ஆனால், தங்கள் ஆசிரமத்தின் மூலம் வரும் நிதியைக் கல்வி நிறுவனம், மருத்துவத்துறை, தொண்டு நிறுவனம், அரசியல் என்று தொடங்கி பக்கா கார்ப்பரேட் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கிய சாமியார்கள் யாரும் மாட்டியதில்லை. அப்படியே மாட்டினாலும் இவர்களுக்கு உதவ பலர் முன் வருவார்கள். காரணம், கார்ப்பரேட் சாமியார்களின் உதவி அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது.

அவர்கள் நடத்தும் பள்ளியில், கல்லூரியில் தங்கள் மகன்/மகளுக்குப் படிக்க இடம் கேட்கலாம். வெளிநாட்டு தொடர்பு வைத்திருப்பதால் அது தங்களுடைய வியாபார வளர்ச்சிக்கு உதவலாம். தொண்டு நிறுவனம் வைத்திருப்பதால் கருப்புப் பணத்தை நன்கொடையாகக் கொடுத்து வேறு வழியில் வெள்ளைப் பணமாகப் பெறலாம். மந்திரிகள் தொடர்பு வைத்துப் பதவி உயர்வு பெறலாம் என்ற லாப நோக்கமே அந்தப் பக்தர்களுக்கு இருக்கும்.

காமத்தில் மட்டும் ஈடுபடும் சாமியார்களால் யாருக்கும் எந்தப் பயனுமில்லை. ஆனால், கார்ப்பரேட் சாமியார்கள் மூலம் வரும் ஆதாயம் அதிகம். மந்திரியாக இருந்தாலும் சரி, அரசு அதிகாரியாக இருந்தாலும் சரி, பாமரனாக இருந்தாலும் சரி கார்ப்பரேட் சாமியாரின் தொடர்பு இருந்தால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். இவர்களிடம் கடவுளின் அருள் இருக்கிறதோ இல்லையோ, காரியத்தைச் சாதிக்கக் கூடிய தொடர்பு இருக்கிறது.

சாமியார்கள் இப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்தும் பாமரர்கள் எதற்காகத் தேடிப் போகிறார்கள் என்று வியப்பாக இருக்கலாம். கிரிக்கெட்டில், தென் ஆப்பிரிக்கக் கேப்டனாக இருந்த ஹன்ஸி குரோனியே, இசையில் மைக்கேல் ஜாக்சன் என்று பல பிரபலங்கள் ஊழல், சர்ச்சையில் சிக்கியவர்கள் தான். ஆனால், அவர்களின் சாதனையை, இல்லை என்று சொல்ல முடியாது. மறைக்கவும் முடியாது. அது போலத் தான் கார்ப்பரேட் சாமியார்கள்.

என்னதான் சாமியார்கள் சர்ச்சையில் சிக்கினாலும், அவர்களால் குணமடைந்ததை பக்தர்களால் மறக்க முடியாது. பக்தர்களும் நன்றியுடன், சாமியார் சர்ச்சையில் சிக்கினாலும் அவரைத் தேடி வருகிறார்கள். இவர்கள் இந்தியாவில் அங்கீகரிக்கப்படாத தொழில் அதிபர்கள். டாடா, அம்பானி, அசிம் பிரேம்ஜி, விஜய் மல்லையா அளவிற்கு வியாபாரச் சிந்தனை உடையவர்கள். எல்லாக் கட்சியினர் களுடன் நல்ல நட்பு முறையில் பழகுபவர்கள். பாமரனுக்குப் பக்தியையும், பணம் படைத்தவனிடம் பதவி ஆசையையும் வைத்து வளர்ந்தவர்கள்.

பிரபல சுயமுன்னேற்றப் பேச்சாளரான ஷிவ் கேரா செய்வதைப் போல் தான் பல சாமியார்கள் பேசுகிறார்கள். ஆனால், ஆன்மிகம் கலந்து இவர்கள் பேசுவதால் மக்களுக்கு அவர்களைப் பிடித்திருக்கிறது. அதுதான், உலகம் முழுவதும் அவர்களுக்குக் கிளைகள் வளர்வதற்கு இன்னொரு காரணம். அவர்களுக்கு எதிராக என்ன பேசினாலும், எதிராகச் செய்தாலும் அவர்களை ஒரு அடிகூட நம்மால் அசைக்க முடியாது. அது தான் ஆன்மிகம், அரசியல் இரண்டும் கலந்து இருக்கும் கார்ப்பரேட் சாமியார்கள் என்னும் வியாபாரிகள்.

இங்கே நாம் விவாதிக்கப்போவது, பணப் பலம், அரசியல் பலம் உள்ளிட்டவற்றைக் கொண்டுள்ள, கல்வி நிறுவனம், மருத்துவ நிறுவனம், தொண்டு நிறுவனம் ஆகியவற்றை நடத்திவரும் கார்ப்பரேட் சாமியார்கள் சிலரைப் பற்றித்தான்.

# 1

## ரஜனீஷ் ஓஷோ

*எந்த மதம் வாழ்க்கையை வெறுக்கக் கற்றுக் கொடுக்கிறதோ அது உண்மையான மதம் அல்ல. வாழ்க்கையை எப்படி அனுபவிப் பது என்று காட்டுவதுதான் மதம். - ஓஷோ*

*'இந்துக்களும் முகமதியர்களும் சமம் என்கிறீர்கள். பகவத்கீதையை உங்கள் தாய் என்கிறீர்கள். அப்படியானால் குரான் என்ன? அது உங்கள் தந்தையா?'*

இப்படி ஒரு கடிதத்தைப் படித்ததும் என்ன பதில் கூறுவது என்று மகாத்மா காந்திக்குத் தெரியவில்லை. 'இந்து, முஸ்லீம் பாய் பாய்' என்பவரிடம் இப்படி ஒரு கேள்வி கடிதமாக வரும்போது, உடனே காந்தி மனதில் பதில் உதித்திருக்க வேண்டும். ஆனால், காந்திக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. பக்கத்தில் அவரது மகன் ராம்தாஸ் காந்தியும் இருந்தார். கொஞ்ச நேரம் மௌனமாக இருந்த காந்தி, அந்தக் கடிதத்தை ஜன்னல் வழியாகத் தூக்கி எறிந்தார்.



அந்த நபர் கேட்கும் கேள்வியில் நியாயம் இருக்கிறது. சீதையை அம்மா என்று சொல்லும்போது, சூரானை அப்பாவென்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? குறைந்தபட்சம் ஏதாவது ஒரு உறவை நீங்கள் சொல்ல வேண்டாமா? இதற்கு நீங்கள் பதில் சொல்லவில்லை என்றால் இஸ்லாமியர்களும், இந்துக்களும் எப்படி ஒன்றாக இருக்க முடியும் என்று ராம்தாஸ் காந்தி கேட்டார்.

ஆனால், அதற்குக் காந்தி எந்தப் பதிலும் கூறவில்லை. பிறகு, ராமதாஸ், கடிதம் எழுதியவருக்குப் பதில் எழுதினார். 'உங்களுக்கு அவரிடமிருந்து எப்போதும் பதில் கிடைக்காது.'

கடிதத்தால் காந்தியைத் திக்குமுக்காடச் செய்தவர் ஓஷோ. தன் வாழ்நாள் முழுக்க மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதில் செலவிட்ட வர், கொஞ்சம் காந்தியைக் காரசாரமாக விமரிசனம் செய்து வந்தார்.

தனது சுயசரிதையில் காந்தியின் எளிமையை மிகத் தீவிரமாகச் சாடுகிறார். 'காந்தி வழக்கமாகச் சாதாரண மக்கள் செல்லும் 'மூன்றாம் வகுப்பு' ரயில் பெட்டியில்தான் பயணம் செய்வார். ஆனால், அது எந்த முதல் வகுப்புக்கும் குறைந்ததல்ல. காரணம், அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் அமரக்கூடிய அந்தப் பெட்டியில் காந்தி, அவர் செகரட்டரி, மனைவி கஸ்தூரிபா மூன்று பேர்தான் பயணம் செய்வார்கள். அது ஒரு சிறப்பு முதல் வகுப்புப் பெட்டி!' என்கிறார்.

மேலும், காந்தியை வியாபாரி என்றே விமரிசித்தார். கார்ப்பரேட் சாமியார் புத்தகத்தில் காந்தியை விமரிசித்து எழுதத் தேவையில்லை. ஆனால், இந்தியாவின் கார்ப்பரேட் சாமியார்களுக்கு வெளிநாட்டு பணம் நன்கொடையாக வாங்கக் கற்றுக் கொடுத்த சாமியாரே இவர்தான். அப்படிப்பட்டவர் காந்திக்கு எதிராக விமரிசித்து எப்படிப் பல பேரைத் தன் ஆசிரமத்துக்கு இழுத்தார்? பலர் அவரை வசைபாடியிருப்பார்களே? அரசியல் தலைவர்கள் மிரட்டியிருப் பார்களே? எல்லாம் இருந்தது, அதை விட அவரை நம்பிச் செல்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது.

தன் வாழ்நாள் முழுக்க நிராகரிப்பு, நாடு கடத்தல், சர்ச்சை என்று கழித்திருக்கிறார். இருபத்தியோரு நாடுகள் இவர் தங்குவதற்கு அனுமதிக்கவில்லை. இன்று எத்தனையோ பேர் செக்ஸ் சாமியார்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள். முதன் முதலில் 'செக்ஸ் குரு' என்ற பெயரைப் பெற்ற சாமியார் இவர்தான்.

எந்த மதத்தையும் முன்நிறுத்தி இவர் சொற்பொழிவாற்றியதில்லை. இவரே ஒரு தனி மதம் உருவாக்கினார். அந்த மதத்தின் பெயர் 'ரஜீஷியம்'. அந்தச் சாமியாரின் பெயர் 'ஸ்ரீ பகவான் ரஜனீஷ்' என்கிற ஓஷோ.

'ஓஷோ' என்ற பெயர் 'ஓஷியானிக்' என்ற சொல்லிருந்து வந்தது. கடலில் கரைந்து போவது என்று அர்த்தம்.

அந்தக் காலத்தில் மிகச் சிறந்த துறவியான ரமண மகரிஷிகூட 'பகவான்' என்றுதான் அழைக்கப்பட்டார். ஆனால், அந்தப் பெயர் பக்தர்கள் அவருக்கு வைத்த பெயர். ஆனால், இவர் தன்னைத் தானே 'பகவான்', 'நான் கடவுள்' என்றார்.

ரஜனீஷ் ஓஷோவை நன்கு அறிந்தவர்கள் சொல்வார்கள் -

'அவர் மிக மிக சிறந்தவர். அதே சமயம், மிக மிக மோசமானவர்.'

டிசம்பர் 11, 1931, மத்தியப் பிரதேசத்தில், நரசிங்கப்பூர் மாவட்டத்தில், குச்வாடா என்ற சின்னக் கிராமத்தில், ஒரு சமணக் குடும்பத்தில் அந்தக் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு 'சந்திர மோகன் ஜெயின்' என்று பெயர் வைத்தார்கள். 'ரஜனீஷ்' என்பது செல்லப் பெயர்.

சந்திர மோகனின் தந்தை தேவ்தீர் பார்தி, கடர்வார என்ற ஊரில், சிறிய ஜவுளிக் கடையைப் பார்த்துக் கொண்டிருந்தார். மிகப் பெரும் பணக்காரர்கள் இல்லை என்றாலும், நிலத்திலும் கடையிலும் கிடைக்கிற வருமானம் அந்தக் குடும்பத்துக்குப் போதுமானதாக இருந்தது.

மெட்ரிகுலேஷன் படிப்பை முடித்திருந்த சந்திரமோகனை, கல்லூரியில் படிக்க வைக்கக் குடும்பத்தில் வசதியில்லை. அதனால், தன் ஜவுளித் தொழிலைப் பார்த்துக் கொள்ளும்படி அவருடைய அப்பா கேட்டார். ஆனால், சந்திரமோகனுக்கு அதில் எல்லாம் விருப்பமில்லை. அவர் 'தத்துவ ஞானத்தை'ப் படிக்க விரும்பினார். அப்பாவின் ஜவுளித் தொழிலைத் தம்பிக்குக் கொடுத்து விடும்படி கேட்டுக் கொண்டார்.

தன்னால் கல்விக்கு எந்த உதவியும் செய்ய முடியாது என்று அவரது அப்பா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பாட்டி உதவியுடன், தான் விரும்பிய படிப்பைப் படிக்கத் தொடங்கினார். மாதம் மாதம் சந்திரமோகனுக்கு பாட்டியிடம் இருந்து பணம் வந்துவிடும்.

*சந்திரமோகன் பெரிய ஆளான பிறகும் தனது கடைசி கையிருப்புப் பணத்தைக் கூட அவருடைய பாட்டி அனுப்பி வைத்தார்.*

*1951-ம் ஆண்டு, தனது பத்தொன்பதாவது வயதில் ஜபல்பூரில் இருக்கும் ஹிட்காரினி கல்லூரியில் அவர் விரும்பிய தத்துவப் பாடத்தைப் படிக்கத் தொடங்கினார். அப்போது, அங்கு இருக்கும் பேராசிரியருக்கும், இவருக்கும் கருத்து வேறுபாடு வரக் கல்லூரியின் முதல்வர் ரஜனீஷைக் கல்லூரியை விட்டு வெளியே அனுப்பினார். பிறகு, ஜபல்பூரில் இருக்கும் டி.என். ஜெயின் கல்லூரியில் சேர்ந்து படித்தார்.*

*மார்ச் 21, 1953. அது தான் சந்திரமோகன் ரஜனீஷ் 'ஆத்ம ஞானம்' ஏற்ற நாள் என்று சொல்லப்படுகிறது. ஜபல்பூரில் பன்வர்ட்டால் பூங்காவில் அமர்ந்து இருக்கும் போது விளக்க முடியாத பரவசத்தை உணர்ந்தார். எந்த மொழியாலும் விளக்க முடியாத ஆனந்தம்.*

*பொதுவாகக் குருவில்லாமல் யாரும் ஞானமடைந்ததில்லை. ஆனால், ரஜனீஷ்க்கு பொருத்தமான குரு உலகில் யாருமில்லை என்பது தான் உண்மை. அவருக்குக் குரு அவரே தான்.*

*1955-ல் டி.என். ஜெயின் கல்லூரியில் பி.ஏ. பட்டத்தைப் பெற்றார். மேற்படிப்புக்காகச் சாகர் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். 1957-ல் எம்.ஏ. தத்துவத்தில் அதிக மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சி பெற்றார்.*

*ரெய்ப்பூர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். ஆனால் அங்கு இருந்த துணை வேந்தர், ரஜனீஷ் மிகவும் ஆபத்தானவர், மாணவர்களை மாற்றிவிடுவார் என்று கருதி வெளியே அனுப்பிவிட்டார். 1958-ல், ஜபல்பூர் பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் பாடத்திற்கு விரிவுரையாளராக வேலை கிடைத்தது. அங்கு சிறப்பாகப் பணியாற்றி 1960-ல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.*

*ரஜனீஷ் வகுப்பு எடுக்கும்போது இரண்டு மாணவர்கள் உரையாற்றுவதுபோல் இருக்கும். இந்த அணுகுமுறை மாணவர்களை ஈர்த்தது. அவர் வகுப்பென்றால், மாணவர்கள் தவறவிடாமல் வந்துவிடுவார்கள்.*

*'ஆச்சாரியா ரஜனீஷ்' என்ற பெயரில் பல சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டார். இந்தக் காலகட்டத்தில் காந்தியைக் கடுமையாக விமரிசனம் செய்து பேசினார்.*

ஒரு பக்கம் அஹிம்சையைப் போற்றிப் பேசினார். மற்றொரு பக்கம் [illegible]தையைப் போற்றினார். கீதையோ, வன்முறையை உபதேசிக்கிறது. இது எப்படி சாத்தியமாகும்?' போன்ற விமரிசனங்களை எழுப்பினார்.

1963-ம் ஆண்டு 'ஜீவன் ஜன்கிருடி கேந்திரம்' (ஆன்ம விழிப்புணர்வு மையம்) என்ற ஒரு முகாமைத் தொடங்கினார். அதில் மூன்று நாளிலிருந்து பத்து நாள் வரைக்கும் தியான முகாம் நடத்தினார். இந்தத் தியான முகாமுக்கு மக்களிடம் அதிக வரவேற்பு இருந்தது.

பம்பாயில் இருந்து வெளிவரும் 'ஜோதி சிகா' என்ற காலாண்டு பத்திரிகை ரஜனீஷ் உரைகளைப் பிரசுரித்தும், புத்தகமாகவும் கொண்டு வந்தனர்.

ஆகஸ்ட் 28,1968-ல் பம்பாய் பாரதிய வித்யா பவனில் 'அன்பு' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்ற அழைப்பு வந்தது. அந்த விழாவில் பெரிய அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் என்ற பலர் கலந்து கொண்டார்கள்.

'பாலுணர்வை அலட்சியப்படுத்த வேண்டியதில்லை. அதுவும் ஒரு வகையில் தியானம். பாலுணர்வு சக்தி தான் காதலாகவும், தியானமாகவும் நிலை மாற்றம் பெறுகிறது. கடவுள் இருப்பதை ஒப்பு கொள்வதைப் போலக் காமத்தின் புனிதத்தையும் தெய்வீகத் தன்மையையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றார்.

அந்தப் பேச்சு நிகழ்ச்சிக்கு வந்திருந்த இந்து தலைவர்களைக் கோப மூட்டியது. சிலர் அவர் பேச்சின் பாதியிலேயே எழுந்து சென்று விட்டார்கள். இன்னும் சிலர் ரஜனீஷ்க்கு எதிராக கோஷம் எழுப்பினர். அதன்பின் ரஜனீஷால் தொடர்ந்து பேச முடியவில்லை.

பிறகு செப்டம்பர் 28-ம் தேதி மீண்டும் பம்பாய்க்கு வந்து சொற்பொழிவைத் தொடர்ந்தார். அப்போது, அவரது பேச்சைக் கேட்க முன்பை விட மூன்று மடங்கு கூட்டம் கூடியது. அந்தக் கூட்டத்தில் 'காமத்திலிருந்து கடவுளுக்கு' என்ற தலைப்பில் பேசினார். பிறகு அது நூலாகவும் வெளிவந்தது. அந்த நூல், விற்பனையில் சக்கைப் போடு போட்டது மட்டுமில்லாமல், ரஜனீஷ்க்கு 'செக்ஸ் குரு' என்ற பெயர் வாங்கிக் கொடுத்தது.

1969-ல் பாட்னாவில் இரண்டாவது உலக இந்து மாநாடு நடந்தது. பல எதிர்ப்புகளைத் தாண்டித் தான் ரஜனீஷை நிகழ்ச்சியில் பேச அழைத்தனர்.

அந்த நிகழ்ச்சியில், 'எந்த மதம் வாழ்க்கையை அர்த்தமில்லாததாகவும், முழுக்க முழுக்கத் துயரம் நிரம்பியதாகவும் கருதுகிறதோ, எந்த மதம் வாழ்க்கையை வெறுக்கக் கற்றுக் கொடுக்கிறதோ அது உண்மையான மதம் அல்ல. வாழ்க்கையை எப்படி அனுபவிப்பது என்று காட்டுவதுதான் மதும்' என்று பேசினார்.

மதத் தலைவர்கள் பலருக்கு கோபம் தலைக்கேறியது. அவர் பேசுவதைத் தடுக்க முயற்சித்தனர். ஆனால், முடியவில்லை. தான் பேச வந்ததை முழுமையாகப் பேசினார்.

செப்டம்பர் 26, 1970-ல் ரஜனீஷ் இமயமலை அடிவாரத்தில் உள்ள குலு-மணாலியில் ஒரு தியான முகாமை நடத்தினார். அதுவரை தனிமனிதனாக இருந்த ரஜனீஷ் தனக்கென ஒரு கூட்டத்தை உருவாக்கினார்.

அந்தப் பயிற்சியில்தான் தன்னுடைய பக்தர்களுக்கு புதுவிதமான சன்னியாசத்தை வழங்கினார். அதுவரை, 'சன்னியாசம்' என்றால் ஒரு மனிதன் மீது திணிக்கப்பட்ட அனைத்திலிருந்தும் விடுபட்டு, ஒரு புதிய நிலைக்குச் செல்வது என்ற அர்த்தத்தில் பயன்படுத்தினர். ஆனால், ரஜனீஷின் சன்னியாசம் அப்படியில்லை.

எந்த மதத்தையும் சாராமல், மத பழக்க வழக்கங்கள், புனித நூல்களில் இருந்து விடுபடுவது தான் ரஜனீஷ் வழங்கிய சன்னியாசம். முந்தைய ஆன்மிக பழக்கத்தில் இருந்து அடியோடு துறந்துவிடுவது 'இவர்' அறிமுகப்படுத்திய துறவறம். இங்கு, பெண் சன்னியாசிகள், 'மா' என்று அழைக்கப்பட்டார்கள். ஆண் சன்னியாசிகள் 'சுவாமி' என்று அழைக்கப்பட்டார்கள்.

தனக்காக ஒரு பெண் செகரட்டரியை நியமித்தார். அவரின் பெயர் யோகா லட்சுமி. இவர் ரஜனீஷுடன் சேர்ந்த பிறகு, ரஜனீஷ் கார்ப்பரேட் சாமியாராக மாற ஆரம்பித்தார். அதுவரை, ரஜனீஷ்க்கு வராத உதவியெல்லாம் வரத் தொடங்கியது. எதிர்பாராத தொகை நன்கொடையாக வந்தது. குறிப்பாக வெளிநாட்டில் இருந்து அவரைக் காணப் படையெடுத்தார்கள். எல்லாம் யோகா லட்சுமி மயமானது.

டிசம்பர் 1970-ல் ரஜனீஷ் பம்பாயில் இருக்கும் 'உட்லண்ட்ஸ் அபார்ட்மெண்ட்' என்கிற அடுக்குமாடி கட்டடத்தில் குடிப் புகுந்தார். நாளுக்கு நாள் ரஜனீஷைத் தேடி வரும் கூட்டம் அதிகமானது. தியானம் பற்றிப் பேச வேண்டிய நேரமும் அதிகமானது. இந்தக்

காலகட்டத்தில்தான் ரஜனீஷ் தன்னை 'பகவான் ரஜனீஷ்' என்று அழைத்துக்கொண்டார்.

தன்னைக் கடவுள் என்று சாமியார்கள் அழைத்துக்கொள்வதில் இவர்தான் முன்னோடி. பலர் அசந்துபோனார்கள். 'என்னை பகவான் என்று அழைப்பதால், நான் கடவுளை பூமிக்கு அழைத்து வரப்போவதில்லை, உங்களை ஒரு உயர்ந்த பயணத்துக்கு அழைத்துச் செல்வேன்' என்றார்.

வெளிநாட்டிலிருந்து ரஜனீஷைக் காண வருபவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வந்தது. அடுக்குமாடி குடியிருப்பு அவருக்கு வசதிப்படவில்லை. மும்பை சீதோஷ்ணநிலையும் அவர் உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால், வேறு இடம் பார்க்கத் தொடங்கினார்.

செகரட்டரி யோகா லட்சுமி, இடம் தேடி அலைந்ததில் பூனாவில் கோரேகான் பார்க் என்ற இடத்தில் ஆறு ஏக்கர் நிலத்தை சொந்தமாக வாங்கினார். அந்த இடத்தை கிரேக்க கப்பல் வியாபாரியின் வாரிசான, கேத்ரின் வெனிசெலோஸ் என்ற பெண் சன்னியாசியின் உதவியோடு வாங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னாளில், இவர் 'மா யோமா முக்தா' என்று அழைக்கப்பட்டார்.

ரஜனீஷ் ஆத்ம ஞானம் அடைந்த 21-வது ஆண்டை மிக விமரிசையாகக் கொண்டாடினர். அவருடன் சேர்ந்து அவரது பக்தர்களும் பூனாவுக்கு குடி புகுந்தனர். இந்த இடத்தில் ரஜனீஷ் ஆசிரமம் உருவானது. 1981 வரை ரஜனீஷ் தன்னைத் தேடி வரும் பக்தருக்கு ஆசி வழங்குவது, சொற்பொழிவு ஆற்றியதும் இங்கு தான் நடந்தது.

பக்தர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாக, ஆசிரமம் விரிவடையத் தொடங்கியது. நகைகள், துணிகள், மூலிகைகள் விற்பனை நடந்தது. நடனம், நாடகம் அரங்கேறியது. பக்தர்களுடன் உரையாற்று வதற்குத் தனிக் குழு அமைத்தனர். அதற்கு ஒரு தலைவர் 'தெரபிஸ்ட்' என்ற பெயரில் நியமித்தனர். பெரும்பாலும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பக்தர்களுக்கு சிகிச்சை வழங்கினர்.

தெரபிஸ்ட் வழங்கிய சிகிச்சைகளுக்கு பக்தர்களிடையே பெரிய வரவேற்பு இருந்தது. ரஜனீஷின் பூனா ஆசிரமம் கொண்டாடும் இடமாக மாறியது. இந்தச் சிகிச்சைக்காக வரும் வருமானம் அதிகமாகியது.

தன்னைத் தேடி வருபவர்களுக்கு ‘சன்னியாசம்’ கொடுக்கத் தொடங்கினார். மதங்களைப் பின்பற்றாத ஒரு மதத்தை உருவாக்கினாலும், தனது சொற்பொழிவின் போது மற்ற மதங்களில் இருக்கும் நல்ல விஷயங்களை மேற்கோள் காட்டாமல் இருக்கமாட்டார்.

நன்றாகப் போய்க்கொண்டிருந்த ரஜனீஷ் ஆசிரமத்தின் அஸ்திவாரத்தையே அசைக்கக் கூடிய ஒரு குழுவைத் தெரியாமல் அவரே உருவாக்கினார்.

**‘என்கவுண்டர் குரூப்’**

என்கவுண்டர் குரூப் என்பது ரஜனீஷ் ஆசிரமத்தில் கட்டற்ற சிகிச்சை வழங்கும் குழு. மன அழுத்தத்தோடு ஆசிரமத்தில் வருபவர்களுக்கு குழு சிகிச்சையை வழங்கும். கேட்க நல்ல விஷயமாகத் தெரியலாம். ஆனால், அவர்கள் சிகிச்சை அளிக்கும் முறை பல சர்ச்சைகளைக் கிளப்பியது.

சிகிச்சையின் போது அடிப்பார்கள், உதைப்பார்கள். நிர்வாண சிகிச்சை என்ற ஒன்றும் இருந்தது. சிகிச்சையின் பெயரில் பாலியல் உறவுகள் நடந்தது. இப்படி இவர்களின் சிகிச்சை ஒவ்வொரு நாளும் செய்தித்தாளில் பூகம்பமாக வெடிக்கத் தொடங்கியது.

ரிச்சர்ட், பிரைஸ், பெர்னார்ட் குந்தர் என்ற வெளிநாட்டுக்காரர்கள் ஆசிரம சிகிச்சையைப் பற்றி ‘டையிங் ஃபார் என்லைன்மெண்ட்’ என்ற புத்தகத்தை வெளியிட்டு நாறடித்தார்கள். அதில் அவர்கள் அளிக்கும் சிகிச்சை முறைகளைப் படங்களோடு வெளியிட்டனர். இவர்களது லீலைகளை மக்கள் தினமும் வாசிக்கும் அளவிற்கு பத்திரிகைகளும் வெளியிட்டன.

ஒரு ஜெர்மன் குழு, டாக்குமென்டரி படம் எடுக்கிறோம் என்று ரஜனீஷ் ஆசிரமத்துக்கு வந்தனர். அங்கு இருக்கும் ‘என்கவுண்டர் குரூப்’ பற்றி அவர்களுக்கே தெரியாமல் படம் எடுத்தார்கள். ரஜனீஷ் புகழை தகர்ப்பதற்கான படம் அது.

அதில், ஆசிரமத்தில் இருப்பவர்கள் போதைப் பொருள் உட்கொள்கிறார்கள். விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள் போன்ற செய்திகள் இருந்தது. பெரும்பாலும் இதையெல்லாம் செய்பவர்கள் வெளிநாட்டுக்காரர்கள்தான். இதில் ரஜனீஷ்க்கு நேரடி தொடர்பு இல்லையென்றாலும், அவருக்குத் தெரிந்து தான் நடந்தது.

ரஜனீஷ் தனது ஆசிரமத்தை விரிவுபடுத்த புதுக் கட்டடம் கட்டுவதாக முடிவெடுத்தார். இந்தியா முழுக்க மூன்று கிளைகளை உருவாக்கத் திட்டமிட்டார். இப்போதைய சாமியார்களைப் போல் அரசியல்வாதிகளோடு ரஜனீஷ் சமரசமாக இருக்கவில்லை. அவர்களைக் கடுமையாக விமரிசித்து வந்தார். ரஜனீஷ்க்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நினைத்த இந்திய அரசு, புதுக் கட்டடம் கட்ட அனுமதி தரவில்லை.

கோடிக் கோடியாக ஆசிரமத்துக்கு நன்கொடை வசூலாவதைப் பார்த்து அவர்களுக்கு அளித்த வருமான வரிச் சலுகையையும் ரத்து செய்தனர். இதற்கெல்லாம் ரஜனீஷ் அசரவில்லை. ஆனால், ஆசிரமத்தில் இருப்பவர்கள் எல்லோரும் பயப்படும் அளவிற்கு ஒரு சம்பவம் நடந்தது.

**ரஜனீஷ் மீது கொலை முயற்சி**

மே 22, 1980. காலை 8 மணி.

வழக்கமாகத் தன் பக்தர்களிடம் அருள் வழங்கியபடி பேசினார். எங்கும் அமைதி நிலவியிருந்தது. சிறு சத்தம் கூட இல்லை. அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவன் ரஜனீஷ் மீது கத்தியை வீசினான். ரஜனீஷின் நல்ல நேரமோ, வீசியவனின் கெட்ட நேரமோ கத்தி அவர் மீது படவில்லை.

அங்கிருந்த போலீஸ்காரர்கள் அவனைக் கைது செய்து விசாரித்தனர். அவன் பெயர் விலாஸ் துபே. இந்து மத அடிப்படைவாதி குழுவைச் சேர்ந்தவன்.

தன்மேல் தொடுக்கப்பட்ட கொலை முயற்சியை ரஜனீஷ் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எந்த இடத்தில் பேச்சு விடப்பட்டதோ அந்த இடத்தில் இருந்து தொடங்கினார். ஆனால், இதையே காரணம் காட்டி நடந்தது கொலை முயற்சி அல்ல என்று சொல்லி அந்த நபர் விடுதலை செய்யப்பட்டார்.

1981-ல் ரஜனீஷைத் தேடி வரும் கூட்டம் அதிகரித்தது. குறிப்பாக ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் அவரைப் பார்க்க அதிகமாக வந்தனர். தன்னுடைய சொற்பொழிவில் மெருகேற்ற குட்டிக் கதைகள், நகைச்சுவை துணுக்குகள் சேர்க்கத் தொடங்கினார்.

அப்போது, மிக முக்கியமான திட்டத்தை அமல்படுத்தினார். தன்னைத் தேடி வரும் புதிய சன்னியாசிகளிடம் தனது ஆசிரமக் கிளையை

உங்கள் பகுதியில் தொடங்குங்கள் என்றார். அதற்காக முதல் கட்டமாக லண்டனில் இரண்டு தியானம் முகாம் நடத்தி விளம்பரம் செய்தனர்.

15 வருடங்களுக்கு மேல் பேசிவிட்ட ரஜனீஷ் கொஞ்சம் ஓய்வெடுக்கப் போவதாக முடிவெடுத்தார். இனி இந்த உலகத்தோடு நான் மௌனமாக உரையாற்றப் போகிறேன் என்றார். அந்த முடிவு எடுக்க அவரின் உடல்நிலையும் இன்னொரு காரணம். இதனால், தினமும் நடக்கும் கூட்டம் பாதிக்கப்படவில்லை.

பலவிதமான அலர்ஜியால் ரஜனீஷ் உடல்நிலை பாதிப்படைந் திருந்தது. ரஜனீஷ் சிகிச்சை செய்ய செல்ல வேண்டியதாக இருந்தது. இந்தச் சமயத்தில்தான் தனது பக்தை, செகரட்டரி மா யோகா லக்ஷ்மியை நீக்கிவிட்டு மா ஆனந்த் ஷீலாவை நியமித்தார்.

இந்திய அளவில் இருந்த பிரச்னை உலகளவில் வளரத் தொடங்கியது.

ஜூன் 1, 1981 அன்று ரஜனீஷ், முக்கியமான சில சீடர்களையும், டாக்டர்களையும், ஷீலாவையும் அழைத்துக்கொண்டு டூரிஸ்ட் விசாவில் அமெரிக்காவுக்குக் கிளம்பினார். மருத்துவச் சிகிச்சைக்காக அவருக்கு விசா அளிக்கப்பட்டிருந்தது. நியூ ஜெர்சியில், மாண்ட் க்ளேர் போன்ற இடங்களில் ரஜனீஷ் தங்கியிருந்தார்.

நாளாக நாளாக ரஜனீஷ் உடல்நலத்திற்காகத்தான் அமெரிக்காவுக்கு சென்றாரா என்ற சந்தேகம் எழுந்தது. காரணம், தனது கம்யூனுக்கான இடத்தை அவர் தேடிக் கொண்டு இருந்தார். இந்தியாவில் கிடைக்காத ஆதரவு அமெரிக்காவில் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். இந்திய மதத் தலைவர்கள் தலையீடு அதிகம் இருக்காது, அமைதியாகத் தனது கம்யூனை விரிவுபடுத்தும் முயற்சியில் இறங்கினார்.

அமெரிக்காவில் தங்கிவிட என்னென்ன வழிகள் இருக்கிறதோ, அத்தனையும் கையாண்டார்.

ஜூன் 13, 1981 அன்று. அமெரிக்கா, ஆரிகன் மாகாணத்தின் கிழக்குப் பகுதியில், கால்நடை மிருகங்களை வளர்க்கும் நிலமாக இருந்த வறண்ட நிலத்தை ஷீலாவின் கணவர் விலைக்கு வாங்கினார்.

கொஞ்ச நஞ்ச இடமல்ல. 64,229 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம். 260 சதுர கி.மீட்டருக்கு ஒரு ஊரையே விலைக்கு வாங்கிவிட்டனர். அந்த இடத்தின் பெயர் 'பிக் மட்டி ரேஞ்ச்'.

நிலம் வாங்கிய கையோடு அதை சீர்படுத்தத் தொடங்கினர். கால்நடைகள் நடந்து போகக் கூடிய குண்டும், குழியுமாக இருந்த ரோட்டில் நல்ல சாலைகள் போட வேண்டும். ஐயாயிரம் பேர் தங்கக் கூடிய வீடுகள் கட்ட வேண்டும். ரஜனீஷ் பேச்சுகளைத் தொகுத்துப் புத்தகமாகக் கொண்டு வர வேண்டும் என்ற பல திட்டங்களைச் செயல்படுத்தினர்.

மே, 1982-ல் அந்த இடத்துக்கு 'ரஜனீஷ்புரம்' என்ற பெயர் வைத்தனர். அவரைத் தேடி பக்தர்கள் அலை அலையாக வந்தார்கள். திரும்பிச் செல்ல மனமில்லாதவர்கள் அங்கேயே கூடாரம் அமைத்து தங்கினார்கள்.

இந்தச் சமயத்தில் அக்கம்பக்கத்தில் இருக்கும் ஊர்க்காரர்களுடன் நிலம் சம்பந்தமான பிரச்னைகள் வந்தது. புதியவர்களைப் பார்த்தால் எரிச்சலுடன் வெளியேற்றினர். ஒரு கட்டத்தில் 'ரஜனீஷ்புரம்' என்ற நகரமே இருக்கக் கூடாது என்று கோஷம் எழுப்பினர். அதற்காக அவரை எதிர்த்து வழக்கு பதிவானது.

கிறிஸ்தவ அடிப்படைவாதிகள், 'ரஜனீஷ் ஒரு கிறிஸ்தவ எதிர்ப்பாளர்' என்று கூறினர். அமெரிக்காவில் தங்குவதை உறுதி செய்திக் கொள்ள விண்ணப்பம் போட்டார். முதலில் மறுக்கப்பட்டு, பிறகு அனுமதி வாங்கினார்.

ரஜனீஷ், ரோல்ஸ் ராய்ஸ் காரில் ஏறிக்கொண்டு மெதுவாக ஓட்டி தனது பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்தார். அவர் ரோல்ஸ் ராய்ஸ் காரில் வருவதைப் பார்ப்பதற்காகவே பக்தர்கள் கூட்டம் கூடியது. பக்தர்களுக்கு வித விதமான ரோல்ஸ் ராய்ஸ் காரில் தரிசனம் கொடுக்க விரும்பிய ரஜனீஷ் தொண்ணூற்று மூன்று ரோல்ஸ் ராய்ஸ் கார்களை வாங்கினார்.

பத்திரிகைகள் அவரை 'ரோல்ஸ் ராய்ஸ் குரு' என்று கிண்டலாக எழுதியது. ரஜனீஷ் ரோல்ஸ் ராய்ஸ் காரில், தன்னால் தியானம் செய்ய முடிகிறது. மற்ற வண்டியில் என்னால் தியானம் செய்ய முடியவில்லை என்று கூறினார்.

கம்யூன் நடவடிக்கைகள், நிர்வாகப் பொறுப்புகள் என்று இரண்டையும் ரஜனீஷால் கவனித்துக்கொள்ள முடியவில்லை. அதனால், நிர்வாக அதிகாரத்தை செகரட்டரி ஷீலாவிடம் கொடுத்தார்.

1982-ல் முழு அதிகாரம் மா யோகா ஷீலா கையில் வந்தது. ரஜனீஷின் இறங்கு முகமும் தொடங்கியது.

தன்னிச்சையான செயல்பாடு. கட்டுப்பாடு இல்லாத அதிகாரம். யாரும் கேள்வி கேட்க முடியாது. கையில் அதிகாரம் கிடைத்ததும் ஷீலா தலைகால் தெரியாமல் ஆடினார்.

1983-ல் ஷீலா ஒரு அறிவிப்பு விடுத்து, எல்லா பக்தர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

'இனிமேல் ரஜனீஷ் தன்னைத் தவிர யாரிடமும் பேச மாட்டார்' என்பதுதான் அந்த அறிவிப்பு.

ரஜனீஷ் பேசவில்லை என்றால் எப்படி ரஜனீஷ்புரம் இயங்க முடியும்? இது ரஜனீஷின் முடிவா? உண்மையிலே ஷீலா, ரஜனீஷின் பிரதிநிதியா? போன்ற கேள்விகள் பக்தர்கள் மத்தியில் எழும்பத் தொடங்கியது. பலர் ரஜனீஷ்புரத்தை விட்டு வெளியேற முடிவு செய்தார்கள்.

அப்போது உலகமே எய்ட்ஸ் நோய்க்குப் பயந்த காலம். முத்தம் கொடுத்தாலோ, தொட்டாலோ நோய் பரவிவிடும் என்று பயந்தனர். அப்போது, 'ரஜனீஷ், உலகில் மூன்றில் இரண்டு பங்கு ஜனத்தொகை எய்ட்ஸால் இறக்கப்போவதா ரஜனீஷ் கூறினார்' என்று சொன்னார். இது அந்த நோய் குறித்த பீதியை மேலும் அதிகரித்தது.

1984-ல் ரஜனீஷ்புர இரண்டு நிர்வாகிகள் 'பையோ வார்' சம்பந்தப்பட்டதாகக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொடுத்த சில மருந்துகள் மூலம் ஓரிகான் மக்கள் 45 பேருக்கு உடல் உபாதை ஏற்பட்டது. இதில், ரஜனீஷ்க்கு நேரடி சம்பந்தமில்லை. ஆனால், இது அவருக்கு நெருக்கடி கொடுத்தது.

ஷீலாவின் அதிகாரம் எல்லையில்லாமல் செல்வதை உணர்ந்த ரஜனீஷ் தனது மௌன விரதத்தை முடித்துக்கொண்டு பேசினார். செகரட்டரி ஷீலா மீது சரமாரியாகக் குற்றம் கூறினார். செப்டம்பர் 14, 1985 அன்று ஷீலாவும், அவரது ஆதரவாளர்களும் ஆசிரமத்தை விட்டுச் சென்றார்கள்.

அத்தோடு பிரச்னை முடியவில்லை. குடியேற்றச் சட்ட விதிகளை மீறியதற்காக ரஜனீஷ் கைது செய்யப்படலாம் என்று பேசிக் கொண்டனர். அங்கிருப்பது பாதுகாப்பு இல்லை என்று நினைத்த ரஜனீஷ் கரோலினாவுக்குச் சென்றார். அங்கு அவரைக் கைது செய்தனர்.

கிட்டத்தட்ட பன்னிரண்டு நாட்கள் ஆறு சிறைகளுக்கு மாற்றினர். ஏற்கனவே உடல்நிலை பாதிக்கப்பட்ட ரஜனீஷ்க்கு மேலும்

உடல்நிலையை பாதிக்கத் தொடங்கியது. வேறு வழியில்லாமல் ரஜனீஷ் அமெரிக்காவை விட்டுப் போக முடிவு எடுக்க வேண்டியதாக இருந்தது. அதற்கு அவர் கொடுத்த அபராதத் தொகை 4,00,000 டாலர்!!

நவம்பர் 17, 1985-ல் டெல்லியில் வந்து இறங்கினார் ரஜனீஷ். அங்கிருந்து இமயமலை, காத்மாண்டு போன்ற இடங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அதன் பிறகு வேறு நாடுகளுக்கும் சென்றார். ஆனால், ஏதாவது ஒரு காரணம் காட்டி அவரை நாட்டை விட்டு வெளியேற்றுவதில் பல நாடுகள் செயல்பட்டன.

மொத்தம் இருபத்தோரு நாடுகள் ரஜனீஷ்க்கு அனுமதி அளிக்க மறுத்தன. வேறு வழியில்லாமல் இந்தியாவுக்கே திரும்பினார். ஜனவரி, 1987-ல் இருந்து பூனா ஆசிரமத்திலே தங்கத் தொடங்கினார். அங்கும், அவர் தங்குவதில் பிரச்னை இருந்தது. எப்படியோ அவர் சமாளித்துக்கொண்டார்.

1988-ல் இருந்து ஜென் தத்துவங்களை மையப்படுத்தி உரையாற்றினார். அந்தச் சமயத்தில் தன் பக்தர்களிடம் 'இனி என்னை யாரும் பகவான் ரஜனீஷ்' என்று அழைக்காதீர்கள் என்றார். பிறகு எப்படி அழைப்பது என்று பக்தர்கள் புரியாமல் இருக்கும்போது இரண்டு மாதத்தில் இன்னொரு அறிவிப்பு விடுத்தார்.

பிப்ரவரி, 1989-ல் 'இனி என் பெயர் ஓஷோ ரஜனீஷ். சுருக்கமாக 'ஓஷோ' என்று அழையுங்கள்' என்றார்.

தன் இறந்த காலம் ஓஷோவுக்குத் தெரிந்திருந்தது. தான் இறந்த பிறகு தன் சமாதி எப்படி இருக்க வேண்டும்? அடுத்த குழுவை நிர்வகிக்கப்போகிறவர் யார்? இவரது ஆசிரமம் எப்படி செயல்பட வேண்டும்? போன்ற விபரங்களைக் கூறியிருந்தார்.

ஜனவரி 19, 1990 அன்று 'இதயக் கோளாறு' காரணமாக ஓஷோ இறந்தார்.

அமெரிக்காவில் ஓஷோ சிறையில் இருக்கும்போது அவருக்கு விஷம் வைத்ததாகக் கூறப்படுகிறது. அதனால்தான் அவர் உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், ஓஷோவை விட்டு வெளிவந்த ஆனந்த் ஷீலா, 'ரஜனீஷ் ஒரு நாளைக்கு 60 மில்லி கிராம் வேலியம் சாப்பிட்டதால் அவர் உடல் நிலை பாதிக்கப்பட்டது. நைட்ரஸ் ஆக்ஸைட் மருந்துக்கு அவர் அடிமையாக இருந்தார்' என்று கூறினார். இதை ஓஷோ உயிருடன் இருக்கும் போதே மறுத்தார்.

இன்றைய காலத்தில் ஓஷோவைப் போல் செல்வாக்கு படைத்த ஒரு சாமியாரை அலைக்கழிக்க முடியாது. அமெரிக்காவில் அவருக்கு ஏற்பட்ட அவமானம் இந்தியாவுக்கு ஏற்பட்ட அவமானமாகப் பார்க்கப்பட்டிருக்கும். அரசியல் தலைவர்கள் பலர் பக்க பலமாக இருந்திருப்பார்கள். எந்தத் தொழிலிலும் முன்னோடியாக இருப்பவர் கள் பாதிக்கப்பட வேண்டியதாக இருக்கும்.

சாமியார்களின் முன்னோடியான ஓஷோ வழியைப் பின்பற்றிய பல சாமியார்கள், அவர் செய்த தவறுகளைச் செய்யாமல் அசைக்க முடியாத சக்தியாக வளர்ந்திருக்கிறார்கள்.

'ஓஷோ இறக்கவும் இல்லை. பிறக்கவும் இல்லை. இந்த பூமி கிரகத்துக்கு டிசம்பர் 11, 1931-க்கும், ஜனவரி 19, 1990-க்கும் இடைப்பட்ட காலத்தில் வந்து போனார்.'

இந்தக் கல்லறை வாசகம்கூட ஓஷோ சொல்லித்தான் பொறிக்கப் பட்டது.

**இவர் கீழ் முக்கியமாக இயங்கியவை**

ஓஷோ இண்டர்நேஷனல்
ரஜனீஷ்புரம் என்கிற நகரம்

# 2

## சத்ய சாய்பாபா


'நான் கடவுள். நீயும் கடவுள். உனக்கும் எனக்கும் இருக்கும் ஒரே வித்தியாசம். நான் கடவுள் என்று அறிந்து வைத்திருக் கிறேன். நீ அறியாமல் இருக்கிறாய்'' சத்ய சாய்பாபா.

'ஆண்டவனைக் கொலைச் செய்ய எப்படி இவர்களுக்கு மனம் வந்தது.'

'தாங்கள் பாவம் செய்யப்போகிறோம் என்பது கூடவா இவர்களுக்குத் தெரிய வில்லை.'

'பகவானைக் கொல்ல நினைத்தவர்கள் நரகத்துக்குத் தான் போவார்கள்'. 'கடவுளைக் கொல்ல நினைச்சாங்களாம் அதனால் கடவுளே தண்டித்து விட்டார்...'

புட்டபர்த்தி சாய்பாபாவை கொல்ல வந்த நான்கு பேர் கொல்லப்பட்ட போது பாபாவின் பக்தர்கள் இப்படித்தான் பேசியிருப்பார்கள்.



சத்ய சாய்பாபாவின் ஆசி பெறுவதற்காகவும், அவருடைய நல்வழியை எதிர்பார்த்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புட்டபர்த்தியில் கூடுவார்கள். வாயில் இருந்து லிங்கம் வர வைப்பதையும், தங்கம் வர வைப்பதையும் காண நூறு கண்கள் வேண்டும் என்று சாய்பாபாவையே பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

சத்ய சாய்பாபா மக்களிடமிருந்து ஒதுங்கி வாழும் சராசரி துறவி அல்ல. ஏக்கர் கணக்கான இடத்தில் பள்ளிகளும், கல்லூரிகளும், மருத்துவ மனைகளும் அமைத்த பெரிய சாம்ராஜ்ஜியத்துக்கே அதிபர். அரசியல்வாதிகளும், சினிமாக்காரர்களும், தொழில் அதிபர்களும் அவரைத் தேடி, காத்திருந்து பார்த்துவிட்டுச் செல்லும் அளவிற்குச் செல்வாக்கு உடையவர். அப்படிப்பட்டவர் மீது கொலை முயற்சி என்பது எளிதாக எடுத்துக்கொள்ள முடியாத ஒன்று.

'பாபா மீதான கொலை முயற்சி குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும். கொலைக்குத் திட்டம் போட்டவர்களைக் கைது செய்யும் வரை பாபாவின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை' என்று அவரது பக்தர்கள் கூறினர்.

'இந்த விஷயத்தை பெரிது படுத்த வேண்டாம். இனிமேல் பாபா மீது இப்படி தாக்குதல் நடக்காது. அப்படியே விட்டுவிடுங்கள்' என்று ஆசிரமத்தில் இருப்பவர்கள் கூறினார்கள்.

அந்த நான்கு பேர் யார், எதற்காக அவரை கொல்ல வர வேண்டும் என்பது தொடரும் மர்மமாகவே இருக்கிறது.

சத்ய சாய்பாபா, சாமியார்களில் சூப்பர் ஸ்டார். ஓஷோ எப்படி வெளிநாட்டில் இருந்து நன்கொடைகளை வர வைப்பதில் முன்னோடியோ, அதேபோல் சத்ய சாய்பாபா, இருந்த இடத்திலேயே நன்கொடைகளை வர வைப்பதில் முன்னோடி.

இவரது அறக்கட்டளையின் கீழ் இருக்கும் சொத்தின் மதிப்பை அளவிட முடியாது. மக்கள் இவர் மீது வைத்திருக்கும் அன்பு, பக்தி அதைவிட அதிகமானது.

எத்தனை சர்ச்சைகள் அவருக்கு எதிராக இருந்தாலும் அவர் மீது அபிமானம் வைத்தவர்களின் நம்பிக்கை துளிகூடக் குறையவில்லை.

1940-ல், சாய்பாபாவுக்கு பதினான்கு வயது இருக்கும். தனது பெரிய சகோதரன் வீட்டில் தங்கி இருந்தார். அப்போது, தேள் ஒன்று கடிக்க, அப்படியே உறைந்து போய் நின்றார். மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்று காப்பாற்றிவிட்டார்கள். ஆனால், அடுத்த கொஞ்ச நாட்கள் இவர் நடவடிக்கைகளில் சில மாற்றங்கள் தெரியத் தொடங்கியன. ஏதோ பேசுவார். குறிப்பாக தனக்குப் பரிச்சயமில்லாத சமஸ்கிருத மொழியில் பேசினார். மருத்துவம் செய்து பார்த்தனர் பலனில்லை. பில்லி சூனியம் ஏதாவது வைத்திருப்பார்களா என்று மந்திரித்துப் பார்த்தார்கள். சத்யா அமைதியாக இருந்தார்.

தன் மகனை சாத்தான் பிடித்திருக்கிறது என்று கையில் குச்சி எடுத்து அடிக்க ஓங்கும் போது, சத்யா அமைதியாகக் கூறினார் 'நான் தான் சாய் பாபா'. தன்னை ஷீர்டி சாய் பாபாவின் அவதாரம் என்று சத்யா கூற அவரின் பெற்றோர்கள் வாயடைத்து நின்றனர். சத்யா பிறக்கும் எட்டு வருடம் முன்புதான் மகாராஷ்டிர மாநிலம் ஷீர்டியில் சாய்பாபா இறந்தார். அதனால், என்ன பேசுவதே என்று பெற்றோருக்குப் புரியவில்லை.

ஷீர்டி சாய்பாபாவின் மறு அவதாரம் சத்யா என்று, அல்ல 'சத்ய சாய்பாபா' என்று நம்பினர்.

1944-ல் முதன் முதலாகப் புட்டபர்த்தியில் சத்ய சாய்பாபாவுக்கு ஆலயம் கட்டினர். இதனை 'பழைய கோயில்' என்று அழைத்தனர்.

சாய்பாபாவின் தலைமை பீடம் புட்டபர்த்தியில்தான் இருக்கிறது. அந்த ஊரின் மக்கள் தொகையே 10 ஆயிரம்தான் இருக்கும். ஆனால், இங்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து சென்றுகொண்டு இருக்கிறார்கள். கிராமம் என்றாலும் கூட சொகுசு ஹோட்டல்களும், வில்லாக்களும், பல்வேறு கடைகளும் இருக்கின்றன.

அன்னியச் செலாவணி, இசை விற்பனையகங்கள், இத்தாலி, பிரெஞ்ச், சைனீஸ் உணவகங்கள் என்று ஒரு நகரத்துக்குத் தேவையான எல்லா அம்சங்களும் புட்டபர்த்தியில் உள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு பேசும் மக்களைப் பார்க்கலாம். இன்று, இப்படி ஒரு கிராமம் வளர்ந்திருக் கிறது என்றால் ஒரு அரசின் முயற்சி அல்ல. சத்ய சாய்பாபா பிறந்த இடம். அவரது தலைமை பீடம் அங்கு இருப்பதால் தான் இந்த வளர்ச்சி.

புட்டபர்த்தியில் தினமும் பஜனை நடக்கும். 'நாராயண நாராயண ஓம் சத்ய நாராயண நாராயண ஓம்' என்ற பாடல் உச்சஸ்தாயியில் கேட்டுக்கொண்டே இருக்கும். வேலை நிமித்தமாக வந்தவர்கள் கூட தங்கள் வாழ்க்கையில் பெரிய புண்ணியம் செய்ததாக நினைத்தார்கள்.

பாபா ஒரு கற்பூர தீப ஆராதனை செய்யும்போது, அதுவரை அமைதியாக உட்கார்ந்து பஜனைப் பாடல்களைக் கேட்டுக்கொண்டு

இருந்தவர்கள் கண்களில் நீர்வர, பலர் பிரார்த்தித்துக்கொள்ளத் தொடங்குவார்கள்.

குறிப்பாக, வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் அதிக அளவில் உட்கார்ந்து பஜனை செய்வார்கள்.

அந்த பஜனை ஹாலில் முழுக்க தங்கம் பூசப்பட்டிருக்கும். பல லட்சம் பேர் கூடி இருக்கும் அந்த இடத்தில் இரவு ஏழு மணிக்கு மேல் ஒரு பொட்டு சத்தம் இருக்காது. சுவர்களின் 'ஓம்' என்ற ரீங்காரம் மட்டும் கேட்கும். அந்த அளவுக்கு அமைதியாக பகவானை வழிபடுவார்கள்.

பஜனைக்கு வருபவர்கள் எல்லோருக்கும் சாப்பாடு இலவசம். வீட்டில் வேலை செய்யாத பெரிய இடத்துப் பெண்கள் கூட இங்கு வேலை செய்வதை மகா புண்ணியமாக நினைத்தனர். மற்றவர் உண்ட எச்சில் தட்டை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போலீசார், ஜட்ஜ் மனைவிகள், பெரும்பணக்காரர்கள் மனைவிகள் என்று எல்லோரும் கழுவுவார்கள். உணவு பரிமாறுவார்கள்.

ஒரு சிலரைக் காட்டி அவர் யார் மகள் தெரியுமா? என்று கேட்டு, பதில் தெரியும் போது மிரட்சியாய் இருக்கும். இவர்களும் பாபாவின் பக்தர்களாக என்று வியப்பு வரும்.

ஹோட்டல், பேஷன் கடைகளில் விற்பனையாகும் விலையுயர்ந்த பொருட்கள் எல்லாம் சத்ய சாய் பாபா டிரஸ்டின் பஜனை அரங்குக்கு வெளியில் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும். பிரசாந்தி நிலையத்தைச் சுற்றி இருக்கும் பொருள் அங்காடியில் இப்படித் தான் விற்பார்கள். இவர்களுக்கு லாபம் தேவையில்லையா என்று வியக்கும் அளவுக்கு மலிவான விலையில் எல்லாம் இருக்கும்.

தற்போதைய பிரசாந்தி நிலையம் 1948-ல் கட்டத் தொடங்கப்பட்டு 1950-ல் முடிவடைந்தது.

1954-ல் சத்ய சாய்பாபா புட்டபர்த்தியில் முதன்முதலாக இலவச மருத்துவமனையைத் தொடங்கினார். 1957-ல் வட இந்திய பகுதிகளுக்கு சென்று தனது ஆன்மிக பிரசாரங்களைச் செய்தார். அவருடைய மந்திரச் செயல்களைப் பார்த்து மக்கள் மயங்கினர். பலர் அவருடைய பக்தர்களாக மாறினர்.

1963-ல் மாரடைப்பும், பக்கவாதமும் சேர்ந்து வந்தது. எப்பேர்பட்ட மனிதர் என்றாலும் மீண்டும் எழுந்து இயல்பு வாழ்க்கை வாழ்வது என்பது மிகக் கடினமான விஷயம். அவர் நலம் பெற ஆயிரக்

கணக்கானவர்கள் பிரார்த்தனை செய்தனர். அவர்கள் பிரார்த்தனை வீண் போகவில்லை. உடல்நலம் தேறி மக்களுக்குத் தரிசனம் வழங்கத் தொடங்கினார், உரையாற்றினார்.

'நான் பிரேம சாய்பாபாவின் அவதாரம். மக்கள் இன்னல்களைப் போக்க மீண்டும் பிறந்து வந்திருக்கிறேன். நானே சிவன். நானே சக்தி' என்றார். இன்றைய காலத்தில் ஒருவர் இப்படிச் சொன்னால் அவரை வேறு மாதிரியாகப் பார்ப்பார்கள். ஆனால், சத்ய சாய்பாபா பேசப் பேச மக்கள் மகுடிக்கு ஆடும் பாம்பாகத்தான் இருந்தார்கள்.

யோகம், தியானம் என்று பேசும் சாமியார் எல்லாம் உலகம் முழுக்க வலம் வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், சத்ய சாய்பாபா தன் வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே வெளிநாட்டு பயணம் மேற்கொண்டு இருக்கிறார். 1968-ல் கென்யா, உகாண்டாவுக்குச் சென்று உரையாற்றி இருக்கிறார். ஆனால் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் அவருக்குப் பக்தர்கள் உள்ளனர்.

'நான் ஒரு மதத்தின் பிரதிநிதியாக வரவில்லை. என்னுடைய விளம்பரத்திற்காக வரவில்லை. உங்களின் மனதுக்குள் அன்பை விதைப்பதற்காகவே வந்திருக்கிறேன். மனதில் அன்பு தீபம் ஏற்றுவதற்காக வந்திருக்கிறேன்' என்றார்.

இன்று, 1200-க்கும் மேற்பட்ட கிளைகள் சத்ய சாய்பாபா அறக்கட்டளையின் கீழ் இயங்குகிறது. உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் அவரை தரிசிப்பதற்காக வந்தனர். எவ்வளவு செலவு செய்தாவது அவரை பார்த்து விடவேண்டும் என்று தீர்க்கமாக இருந்திருக்கிறார்கள். இப்போதும் புட்டபர்த்திக்கு வருவோரின் எண்ணிக்கை குறையவில்லை.

1968-ல் மும்பையில் சத்யம் கோயில், 1973-ல் ஐதராபாத்தில் சிவம் கோயில், 1981-ல் சென்னையில் சுந்தரம் கோயில், 1999-ல் மதுரையில் ஆனந்த நிலையக் கோயில் என்று இந்தியாவில் முக்கிய நகரங்களில் கோயில்களைத் தொடங்கினார்.

இவை எல்லாம் சராசரி சாமியார்கள் தங்கள் ஆசிரமத்தை வளர்க்கும் முயற்சிகள். தன் பேரைப் பரப்பும் செயல்கள்தான். சந்தேகமில்லை. ஆனால், எந்தச் சாமியார்களும், ஆன்மிகவாதிகளும் செய்யாத காரியத்தை இவர் செய்தார். எந்த காலத்திலும் தனது பெயரை அழிக்க முடியாதபடி ஒரு விஷயம் செய்தார். இன்னும் முப்பது வருடங்கள் கழித்து இவர் மேல் இருக்கும் சர்ச்சைகள் எல்லாம் மறைந்து, அந்த

நல்ல காரியங்கள் மட்டுமே பேசும் அளவிற்கு செய்திருக்கிறார். ஒரு அரசு எடுத்து நடத்த வேண்டிய காரியத்தை சத்ய சாய்பாபா முடித்திருக்கிறார்.

**குடிநீர் - பாசனத் திட்டம்**

ஆந்திராவின் ராயலசீமா பகுதியில் இருக்கும் அனந்தபூர் மாவட்டத்தில் வறண்ட நிலங்களுக்கு குடிநீர் வசதி கொண்டு வர புதிய குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால், அங்கு வசிக்கும் 12 லட்சம் மக்கள் பயனடைவார்கள் என்று கூறப்பட்டது. ஆந்திராவில் இருக்கும் மேடக், மஹ்பூப்நகர் போன்ற மாவட்டங்களில் குடிநீர்த் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டினார்.

2004-ல் ஆந்திராவில் இருந்து சென்னைக்கு வரும் நீர்ப் பாசன வழியைச் சீரமைத்து தனது பெயர் வைத்தார். நாத்திகவாதி என்று கூறப்படும் அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதிகூட அவரது செயலைப் பாராட்டினார்.

2008-ல் ஒரிசா மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தனர். பலர் வீடுகள் இழந்து சிரமப்பட்டனர். தன்து சத்ய சாய் சேவா அமைப்பு மூலம் 2009-ல் 699 வீடுகள் கட்டிக் கொடுத்து பதினாறு கிராமங்கள் பயனடையச் செய்தார்.

தேர்தலில் நிற்கும் அரசியல்வாதி கூட இப்படிச் செய்திருக்க மாட்டார். வெற்றி பெற்று பதவி வந்த அரசியல்வாதிகள் கூட மக்களைப் பற்றி யோசிப்பதில்லை. ஆனால், இவர் மக்கள் நலம் பற்றி யோசித்தார். தன்னிடம் கொண்டு வந்து கொடுக்கும் பணத்தை மக்களுக்காகச் செலவு செய்தார். எந்நேரமும் மக்களைப் பற்றியே சிந்தித்தார்.

இப்படிச் சிந்திக்கக் கடவுளால் மட்டுமே முடியும். இதை எல்லாம் சத்ய சாய்பாபா செய்கிறார் என்றால் கண்டிப்பாக இவர் கடவுளாகத் தான் இருப்பார். மக்களும் அப்படிதான் நம்பத் தொடங்கினர்.

2004-ல் ஏற்பட்ட உடல் நலக்குறைவால் அவரால் நடக்க முடியவில்லை. பொது நிகழ்ச்சிகளுக்கு வீல் சேரில்தான் வருவார்.

2011-ல் அவரது உடல் மேலும் பாதிக்கப்பட்டது. 28 மார்ச், 2011 உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் குணமடைய பலர் பிரார்த்தனை செய்தனர். பல மருத்துவர்கள், சிப்பந்திகள் இரவு பகலாகக் கண்விழித்து கவனித்துக் கொண்டனர். இருந்தும் பயனில்லை.

பெரிய பெரிய தலைவர்கள் உடல் நிலைமை பற்றி விசாரித்தனர். உலக ஊடகங்கள் எல்லாம் மருத்துவமனை முன் கேமிரா முன் நின்றனர். அவர் வெளியே வந்தால், படம் பிடிக்க புகைப்படக் காரர்கள் ஆர்வமாக இருந்தனர். ஆனால், இந்த முறை பிரார்த்தனை பலிக்கவில்லை. ஏப்ரல் 24, 2011 அன்று தனது 84 வயதில் இறந்தார்.

இவருடைய இறுதி சடங்கு இரண்டு நாட்களுக்கு நடந்தது. பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி, குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி, எஸ்.எம்.கிருஷ்ணா என்று பெரிய அரசியல்வாதிகள் எல்லாரும் கலந்துகொண்டார்கள். சாய்பாபாவின் தீவிர பக்தரான கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு ஏப்ரல் 24 அன்று பிறந்த நாள் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதை ரத்து செய்துகொண்டு அவரும் இறுதி சடங்கில் கலந்துகொண்டார். வெளிநாட்டு தலைவர்களிடம் இருந்து இரங்கல் கடிதம் வந்தது.

பல மாநிலங்களில் இருந்து மக்கள் திரண்டு வந்திருந்தார்கள். கிட்டத் தட்ட 5 லட்சம் மக்கள் பேர் திரண்டிருப்பார்கள் என்று சொல்லப் பட்டது. அரசு மரியாதையோடு அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

ஒரு சாமியார் எந்த அளவுக்குப் பணம் சம்பாதிக்கிறாரோ அந்த அளவுக்கு அவர் மீது சர்ச்சைகளும், பழிகளும், வதந்திகளும் பரவும். இதைப் பற்றி ஆதாரங்கள் பாதி கிடைக்கும். அதை நம்பி பக்தர்கள் வரும் கூட்டம் குறையத் தொடங்கும். ஆனால், சத்ய சாய்பாபா விஷயத்தில் அப்படி. எத்தனை சர்ச்சைகள் இருந்தாலும், வந்தாலும் மக்கள் அவரைக் கடவுளின் அவதாரமாகத் தான் பார்த்தார்கள்.

வாயில் இருந்து விபூதி வர வைப்பது, லிங்கம் வர வைப்பது, தங்கம் வர வைப்பது என்று ஆரம்பத்தில் பக்தர்களைக் கவர்ந்தார். பின்னாளில் அதைப் படம் பிடித்து எப்படி கொண்டு வருகிறார் என்பதை எல்லாம் காட்டினர். ஒரு கைதேர்ந்த மந்திரவாதி செய்யும் ஏமாற்று வேலையைத்தான் சத்ய சாய்பாபா செய்கிறார் என்று கூறினர். அவரை ஏற்றுக்கொண்டு நம்பும் பக்தர்கள் சாய்பாபாவின் புகழை கெடுப்பதற்காகவே இது போன்ற படங்களை மக்களிடம் பரப்புகிறார்கள் என்று கூறினர்.

1976-ல் பெங்களூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஹோசூர் நரசிம்மன் சத்ய சாய்பாபாவை கடுமையாக விமரிசித்து வந்தார். அறிவியல்பூர்வமாக சாய்பாபா கடவுள் அவதாரம் என்பது சாத்தியமில்லை. அவர் தந்திரத்தை மக்களுக்கு எடுத்துரைக்க ஒரு குழுவை உருவாக்கினார். ஆனால், அந்த குழு விரைவிலே

கலைக்கப்பட்டது. சாய்பாபா கடவுள் அனுகிரகத்தை பக்தியுடன் பார்க்க வேண்டும், விஞ்ஞானத்துடன் ஒப்பிடக் கூடாது என்று பாபா பக்தர்கள் கருத்து கூறினர்.

சேனல் 4, பிபிசி போன்ற தொலைக்காட்சிகள், சாய்பாபாவின் மந்திர ஜாலத்தைப் பற்றி ஆவணப்படமாக எடுத்துக் காட்டினார்கள். அவர் ஓரினச் சேர்க்கையாளர் என்று அவரால் பாதிக்கப்பட்டவரின் பேட்டியை போட்டார்கள். முப்பது வருடங்களுக்கு மேல் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டார் என்று ஒருவர் கூறினார். தங்களிடம் ஆபாசமாக பேசினார் என்று மற்றொருவர் கூறினார்.

சத்ய சாய்பாபா இந்த விமரிசனங்களைப் பற்றி கவலைப்படவில்லை. அவர் மீது நம்பிக்கை வைத்திருக்கும் பக்தர்கள் எந்த வதந்தியையும் நம்பவில்லை. சத்ய சாய்பாபா உயிரோடு இருக்கும் போது மட்டுமல்ல, இறந்த பிறகும் பல சர்ச்சைகள் எழுந்தன.

சத்ய சாய்பாபா எந்த உயிலும் எழுதவில்லை. அதனால், அவர் பேரில் இருக்கும் சொத்துக்கள் அனைத்துக்கும் அவரது சொந்தக்காரர்கள் உரிமைக் கொண்டாட நினைத்தனர்.

ஜூலை, 2011 அவரது பெங்களூர் ஆசிரமத்தில் 6 கிலோ தங்கம், 245 கிலோ வெள்ளி, 80 லட்ச ரூபாய் ரொக்கப் பணமும் கிடைத்தது. அதை அவரது சொந்தங்கள் உரிமைக் கொண்டாட நினைத்தனர். ஆனால், சத்ய சாய்பாபாவின் சொத்துக்கள் அனைத்தும் உலகம் முழுவதும் உள்ள பக்தர்கள் நன்கொடையாக கொடுத்தது. அவரது சொந்தங்கள் உரிமை கொண்டாட முடியாது என்றனர். பெங்களூர் ஆசிரமத்தில் உள்ளவை அனைத்தும் சத்ய சாய்பாபா அறக்கட்டளைக்கு சொந்தம் என்று அறக்கட்டளை கணக்கில் கொண்டு வந்தனர்.

சத்ய சாய்பாபா உயில் எழுதவில்லை என்று கூறிக் கொண்டு இருக்கும் போது, செப்டம்பர் 2012 சாய்பாபாவோடு நெருக்கமாக இருந்த சத்யசீலன், பாபாவின் உயில் என்று ஒன்றை வெளியிட்டார். அந்த உயில் மும்பையில் 23 மார்ச், 1967-ல் பதிவு செய்யப்பட்டது.

'ஸ்ரீசத்ய சாய்பாபாவாகிய நான், அனந்தபூர் மாட்டம் புட்டபர்த்தியில் பிறந்தவன். நான் பள்ளிப் படிப்பை பாதியில் விடுத்து, பன்னிரண்டாவது வயதில் பெற்றோர்களை விட்டு வந்து, ஆன்மிகத்தில் ஈடுபட்டேன். எனக்கு குடும்பப் பற்று, வீட்டுப் பற்று எதுவும் கிடையாது. தற்போது எனக்கு 44 வயதில், என்னிடம் இருக்கும் அனைத்து சொத்துக்களும் என் பக்தர்கள் என்னிடம் கொடுத்தது. என்

குடும்பத்தில் சேர்ந்தவர்களுக்கு எந்த பங்கும் இல்லை. என்னுடைய அனைத்து அசையும் சொத்துக்கள், அசையா சொத்துக்கள் என்னுடைய அறக்கட்டளைக்கு சொந்தம். மக்கள் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும். அதில் யாரும் உரிமை கொண்டாட முடியாது'' என்றார்.

அந்த உயிலின் கையெழுத்து போட்ட சாட்சி கையெழுத்துக்களை காட்டினார். 1998-ல் இருந்து இந்த பத்திரம் தன்னிடம் இருப்பதாக கூறினார். சாய்பாபா இறந்து ஒரு வருடம் கழித்து எதற்காக இப்போது உயில் வெளியிடுகிறார். ஏன் முன்பே வெளியிடவில்லை என்ற கேள்வி எழுந்தது.

அதுமட்டுமில்லாமல், அவரது ஆசிரமத்தில் இதைவிட பல மடங்கு சொத்துக்கள் இருந்திருக்கும். அவரது சொந்தங்களே எடுத்துக் கொண்டதாக பேச்சு அடிப்பட்டது. எந்த குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை. இது பெரிதாக எடுத்துக்கொள்ளப்படவில்லை.

சத்ய சாய்பாபாவின் மகாசமாதி பிரசாந்தி நிலையத்தில் கட்டப்பட்டுள்ளது. சாய்பாபா உயிரோடு இருக்கும்போது ஒவ்வொரு குருபூர்ணிமா தினத்தன்றும் பக்தர்களுக்கு தரிசனம் தருவார். அவர் இறந்த பிறகும், அந்த பழக்கத்தை விடாமல் குருபூர்ணிமா அன்று பக்தர்கள் அவரது மகாசமாதியை பார்க்க திரளாக வருகின்றனர். அப்போது சமாதி அருகே ஒரு பாம்பு வந்ததாகவும் கூறப்படுகிறது.

எத்தனை சர்ச்சைகள் சத்ய சாய்பாபா மீது இருந்தாலும், பக்தர்கள் அவர் மீது வைத்திருக்கும் பக்தி துளிகூட அசைக்க முடியாமல் இருக்கிறது.

அதே சமயம், சாய்பாபா ஒரு மனிதன். அவர் கடவுள் அல்ல. அவர் மேஜிக் சாமியார் என்று புட்டபர்த்தி சாய்பாபாவுக்கும் எதிரான விமரிசனங்களும் அதிகம்.

பல கார்ப்பரேட் சாமியார்களுக்கு சத்ய சாய்பாபா உத்வேகம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு ஆன்மிக சாம்ராஜ்ஜியத்தை எப்படி கட்டிக் காக்க வேண்டும் என்பதை அவரிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும்.

**சத்ய சாய் அறக்கட்டளை கீழ் இயங்குபவை**

சத்ய சாய் பல்கலைக்கழகம்
சத்ய சாய் பொது மருத்துவமனைகள்

# 3


## சந்திராசாமி

'ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இவருக்கும் சம்மந்தம் இருக்கிறது. இவரை விசாரியுங்கள்.'

'விடுதலைப் புலிகளுக்கும், ராஜீவ் காந்தி கொலைக்கும் எந்த தொடர்பும் இல்லை. ராஜீவ் காந்தி கொலையில் பின்னணியில் இருப்பது சுப்ரமணியன் சுவாமியும், இவரும்தான்.'

'ராஜீவ் காந்தி கொலையில் ஈடுபட்ட ஒற்றைக் கண் சிவராசனுக்கும் இவருக் கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. சிவராசன், விடுதலைப் புலிகளை விட்டு வெளியே வந்து ஒரு வருடம் மேல் ஆகிறது. பிரபாகரனுக்கு இதில் எந்த பங்கும் இல்லை.'

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படு கொலை குறித்த பலர் கூறிய கருத்துக்கள் இவை. இவர்கள் கூறும் நபர் சந்திராசாமி.



ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்த ஜெயின் கமிஷன் அறிக்கையில், ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய சந்திராசாமி நிதி உதவி வழங்கினார் என்று சந்தேக அடிப்படையில் அவர் பெயர் சேர்க்கப் பட்டது. ஆனால் அதை நிரூபிக்க ஆதராம் இல்லை என்று கூறப்பட்டது.

முன்னாள் பிரதமர் கொலை வழக்கில் ஒரு சாமியார் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்றால், அவரின் அரசியல் சக்தியை பற்றி தெரிந்துகொள்ள வேண்டும்.

காங்கிரஸ் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இறந்த பிறகு, ஆட்சிக்கு வந்த நரசிம்ம ராவுடன் நெருங்கியத் தொடர்பில் இருந்தார். ஒரு கட்சியில் தலைவர் மரணத்தில் சந்தேகப்படும் ஒரு நபர், அந்த கட்சியுடன் உறவு வைத்திருப்பது ஊடகத்தின் கண்களுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் விமரிசனத்தை எழுப்பியது.

என்ன யார் பேசினாலும், 1991-ல் ஊடகத்தின் வெளிச்சத்திற்கு வந்த சந்திராசாமியை 1996 வரை இந்திய அரசின், அரசியலின் பின்னால் இருக்கும் முக்கியச் சக்தியாக இருந்தார். அவர் ஆதரவுடன்தான் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது. சாமியார்கள் ஆசிரமம், தியானம், நன்கொடை என்று இருந்த வேலையில் அரசியலில் முக்கியப் பங்காற்ற முடியும் என்று காட்டியதோடு இல்லாமல், மறைமுகமாக அரசியல் சக்திகளை ஆட்டி வைத்திருக்கிறார்.

சந்திராசாமியின் உண்மையான பெயர் நேமிசந்த். அவரின் அப்பா ராஜஸ்தானில் இருக்கும் பெஹ்ரோர் பகுதியில் இருந்து வட்டிக்கு பணம் கொடுக்கும் வியாபாரியாக ஐதராபாத்துக்கு வந்தார். சிறுவயதில் இருந்தே நேமி சந்துக்கு தியானத்தில் ஈடுபாடு அதிகம்.

சிறு வயதில் வீட்டை விட்டு ஓடிவந்த நேமி சந்த், உபத்யார் அமர் முனி என்பவரிடம் சீடராகச் சேர்ந்தார். பிறகு, தியான தந்த்ராவை கற்றுக்கொள்ள கோபிநாத் கவிராஜ் என்பவரிடம் மாணவராகச் சேர்ந்தார். ஜெயின் மதத்தில் பிறந்தவராக இருந்தாலும், மகா காளியை வழிபட்டார்.

பிகாரில் இருக்கும் காடுகளுக்கு சென்று, கற்றுக்கொண்டவற்றை தீவிரமாக பயிற்சி செய்தார். நான்கு வருட பயிற்சிகளுக்கு பிறகு திரும்பிய இவர், தனது தியான பயிற்சியால் தனக்கு 'ஞான சக்தி' கிடைத்திருக்கிறது என்றார். தனது பெயரை 'சந்திராசாமி' என்று மாற்றிக் கொண்டார்.

மார்கரெட் தாட்சர், இங்கிலாந்தின் இரும்புப் பெண்மணி என்ற பெயரைப் பெற்றவர். இங்லாந்து அரசியலில் முக்கியமான நபர். அப்படிப்பட்ட நபரை, சந்திராசாமி எப்படி தன் வசப்படுத்தினார் என்பதை இந்திய தூதரகத்தில் இருந்த நட்வர்சிங், ஒரு பத்திரிகையில் கட்டுரை எழுதினார்.

1975-ல், மார்கரெட் தாட்சர் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட சமயம். அப்போது புகழின் உச்சிக்கு அவர் செல்லவில்லை.

அப்போதைய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த சவாணுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார் சந்திராசாமி. மவுண்ட்பேட்டனையும், மார்கரெட் தாட்சரையும் பார்க்க விரும்புவதாக சவாணிடம் சந்திராசாமி கூறினார். அதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி வெளியுறவுத் துறையில் இருந்த நட்வர் சிங்கிடம் சொன்னார் சவாண்.

வெளியுறவுத் துறை அமைச்சரே சொன்னபிறகு எப்படி மறுக்க முடியும். மவுண்ட்பேட்டனை சந்திக்க வைக்கும் முயற்சி செய்தார். ஆனால், மவுண்ட்பேட்டன் வெளிநாட்டுக்கு சென்றதால், அந்த சந்திப்பை அவரால் ஏற்படுத்த முடியவில்லை. அதே சமயம், மார்கரெட் தாட்சருடன் சந்திப்பை ஏற்படுத்த முடிந்தது.

முதலில் மார்கிரேட், 'எதற்காக அவர் என்னை சந்திக்க வருகிறார்?' என்று நட்வர் சிங்கிடம் கேட்டார். 'அவரே உங்களிடம் கூறுவார் என்று பதிலளித்தார். இத்தனை மணிக்கு வரச் சொல்லுங்கள் என்று அவரை சந்திப்பதற்காக நேரம் ஒதுக்கினார்.

அப்போது, சந்திராசாமிக்கு ஆங்கிலம் தெரியாது. மார்கரெட்டுடன் பேசுவதை மொழியாக்க செய்யவும், அவரை அறிமுகப்படுத்தவும் நட்வர் சிங் உடன் சென்றிருந்தார்.

சந்திராசாமி கொஞ்சம் காலதாமதமாக வந்தார். இது மார்கரெட்டுக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால், சந்திராசாமி சொல்ல வந்த விஷயத்தை சீக்கிரம் சொல்ல வேண்டும் என்று எந்த பதற்றமும் காட்டவில்லை.

'என்ன விஷயமாக என்னை பார்க்க வந்திருக்கிறீர்கள்' என்று மார்கிரேட் நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

ஐந்து துண்டு பேப்பரைக் கேட்டார் சந்திராசாமி. மார்கரெட் எடுத்துக் கொடுத்தார். அதில், தன்னிடம் கேட்க நினைக்கும் ஐந்து கேள்வியை

எழுதச் சொன்னார். மார்கரெட்டுக்கு இருந்த எரிச்சல் கொஞ்சம் குறையத் தொடங்கியது. ஐந்து கேள்விகள் எழுதிய பிறகு, ஒரு பேப்பரை எடுத்து கேள்வியை படிக்கச் சொன்னார். மார்கரெட் படிக்க அதற்கு பதில் அளித்தார். இரண்டாவது கேள்வி படிக்கும் போது மார்கரேடுக்கு எரிச்சலில் இருந்து என்ன பதில் சொல்லப்போகிறார் என்ற ஆர்வம் வந்தது. கடைசி, கேள்வி கேட்டு பதில் அளிக்கும்போது, சந்திராசாமி ஒரு ஞானி என்று மார்கரெட் நினைக்கத் தொடங்கினார்.

இவர் ஏதோ ஒன்று சொல்ல வந்திருக்கிறார் என்பது மட்டும் மார்கரெட்டுக்குப் புரிந்தது. 'நீங்கள் எதற்காக என்னை பார்க்க வந்திருக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ளலாமா?' என்று பணிவுடன் மார்கரெட் கேட்டார்.

'இங்கிலாந்தின் அடுத்த பிரதம மந்திரி நீங்கள்தான் என்று சொல்லிவிட்டுப் போக வந்தேன்' என்றார் சந்திராசாமி.

இன்ப அதிர்ச்சியில் உறைந்துவிட்டார் மார்கரெட். உடன் வந்த நட்வர் சிங்குக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. மார்கரெட்டை கவர்வதற்காக தன்னால் முடிந்த வித்தையை செய்கிறார் என்று அமைதியாக இருந்தார்.

அத்தோடு சந்திராசாமி விடவில்லை. தான் கொடுக்கும் அதிர்ஷ்டக் கல் பொருத்திய கயிறை இடது கையில் கட்டிக்கொள்ளச் சொன்னார். செவ்வாய்க்கிழமை அன்று சிவப்பு ஆடை அணிய அறிவுரை கூறினார்.

'இன்னும் எத்தனை வருடத்தில் பிரதமராகப் போகிறேன்' என்று மார்கரெட் ஆர்வமாகக் கேட்டார். 'மூன்று நான்கு வருடத்தில்' என்று பதிலளித்தார். நட்வர் சிங்குக்கு உள்ளூர கோபம் வந்தது.

'இது என்ன இந்தியா என்று நினைத்துக்கொண்டாரா? சொல்வதை எல்லாம் அந்த அம்மா நம்புவதற்கு' என்று நினைத்தார்.

ஆனால், அடுத்த செவ்வாய்க்கிழமை நடந்த கன்சேர்வேட்டிவ் கட்சிக் கூட்டத்தில் மார்கரெட் சிவப்பாடையில் சந்திராசாமி கொடுத்த அதிர்ஷ்ட கயிறை இடது கையில் கட்டிக்கொண்டு பேசினார்.

பின்னர் ஒருமுறை மார்கரெட், நட்வர் சிங்யிடம் தான் சந்திராசாமியை சந்திக்க விரும்புவதாக கூறினார். இத்தனைக்கும் சந்திராசாமியை மார்கரெட் ஒருமுறைதான் பார்த்தார். இந்த முறை அவரே சந்திக்க

விரும்பும் அளவிற்கு வசியம் செய்யும் நபர் சந்திராசாமி. இந்த சந்திப்பில் இடத்தையும், நேரத்தையும் தேர்வு செய்தவர் சந்திராசாமி.

1979-ல் மார்கரெட் தாட்சர், இங்கிலாந்தின் பிரதம மந்திரியானர். ஒரு நிகழ்ச்சியில் நட்வர் சிங்கை சந்திக்கும்போது, 'உங்கள் ஆள் கூறியது நடந்துவிட்டது' என்று சொல்லி மார்கரெட் மகிழ்ந்தார்.

சந்திராசாமி யாருக்கும் தெரியாத ஒரு நபர். பிரபலமல்ல. பெரிய ஆட்கள் எல்லாம் அவரைத் தேடிவரும் அளவிற்கு சாதனை செய்யவில்லை. அவரை தரிசிக்க மக்கள் வரிசையில் நிற்கவில்லை. ஆனால், அவரிடம் ஒரு வசியம் இருந்தது. அதை வைத்து தான் மார்கரெட் மட்டுமல்ல நரசிம்ம ராவ் போன்ற பெரிய அரசியல்வாதிகளை கவர்ந்தார்.

ஊடகக் கண்ணில் இருந்து தெரியாமல் இருந்த சந்திராசாமி, நரசிம்ம ராவ் பிரதமரானதும் இந்திய அளவில் பிரபலமானார். டெல்லியில் இந்திரா காந்தி ஆசிரமத்திற்காக இவருக்கு ஒதுக்கிய இடத்தில், 'விஷ்வ தர்மயதான் சன்னதி' என்ற பெயரில் ஆசிரமம் கட்டத் தொடங்கினார்.

இந்தியா, இங்கிலாந்து மட்டுமல்ல மற்ற வெளிநாட்டு உயர் பதவியில் இருக்கும் பிரமுகர்களுடன் இவருக்கு தொடர்பு இருந்தது.

1977-ல் இஸ்கான் தலைமை சாமியாரை விஷம் வைத்துக் கொன்றதாக சர்ச்சை வந்தது. 1995-ல் ராஜீவ் கொலை வழக்கில் இவர் நிதி உதவி வழங்கியிருப்பார் என்ற சந்தேகம் சி.பி.ஐ.க்கு இருந்தது. ஆனால், சந்திராசாமியை கொஞ்சம்கூட அசைத்துப் பார்க்க முடியவில்லை.

அந்த அளவுக்கு நரசிம்ம ராவிடம் அவருக்கு செல்வாக்கு இருந்தது. ஆனால், அவர் பிரதமர் பதவி பறிபோனதும், சந்திராசாமிக்கு கெட்டகாலம் வரத் தொடங்கியது.

1996-ல் அன்னியச் செலாவணி மோசடிக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். லண்டன் வியாபாரத்தில் ஒரு லட்ச டாலர் மேல் மோசடி செய்திருந்தார். அப்போது, அவரது ஆசிரமத்தில் வருமான வரி சோதனை நடந்தது. அதில், ஒரு கோடியே பத்து லட்சம் டாலருக்கு பணம் கொடுத்த ஆதாரம் சிக்கியது. தொடர்ந்து பல பண மோசடி வழக்குகளை சந்திக்க வேண்டியதாக இருந்தது.

அதே சமயம், சி.பி.ஐ.யால் ராஜீவ் கொலை வழக்கில் இவருக்கு இருக்கும் தொடர்பை கண்டுபிடிக்க முடியிவில்லை.

*1996-ல் சந்திராசாமி மீது தொடரப்பட்ட பண மோசடி வழக்கில் 2011-ல் தீர்ப்பு வந்தது. ஒன்பது கோடி அபராதம் கட்ட வேண்டும் என்ற தீர்ப்பு வந்தது. சந்திராசாமிக்கு பணம் ஒரு பிரச்னையில்லை. ஆனால், எல்லா பக்கமும் பண நெருக்கடி வரத் தொடங்கியது. அபராதப் பணத்தைக் கட்ட மூன்று மாதம் கெடு கேட்டார்.*

*2008-க்கு முன் வெளிநாட்டு பயணம் செய்ய விரும்பியபோது கோர்ட் அவருக்கு தடை உத்தரவு போட்டிருந்தது. தனது தியானப் பயிற்சிக்காக வெளிநாட்டுக்கு செல்ல வேண்டும் என்ற அனுமதிக் கேட்டு மனு கொடுத்தார்.*

*அவர் மீது தொடுக்கப்பட்ட பல புகார்களால், அனுமதி கொடுக்க யோசித்தனர். வெளிநாட்டுக்கு சென்றால் திரும்பி வர மாட்டார் என்ற வாதம் வைக்கப்பட்டது. இருந்தும், 1.2 கோடி ரூபாய் ஜாமீன் தொகையாக கட்டிவிட்டு செல்ல சொல்லி அனுமதி வந்தது.*

*நரசிம்ம ராவ் காலத்தில் மிக முக்கியப் புள்ளியாக இருந்த சந்திராசாமி, இப்போது எங்கு செல்வதாக இருந்தாலும் அனுமதி பெற்றுக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை.*

*அரசியலில் ஈடுபடும் சாமியார், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று இரண்டு கட்சியின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும். இல்லை என்றால் இப்படித்தான் அலைய வேண்டும் என்பதற்கு சந்திராசாமி மிகப்பெரிய உதாரணம்.*

**இவர் கீழ் இயங்கும் நிறுவனம்**

விஷ்வ தர்மயதான் ஆஸ்ரமம்

# 4


## சத்குரு ஜக்கி வாசுதேவ்

'என்னுடைய வாழ்வின் நோக்கம் மனிதர்கள் தங்களுக்குள் இருக்கும் இறைத்தன்மையை உணர உதவுவதே யாகும். உங்கள் இல்லத்திலோ, அலுவல கத்திலோ நீங்கள் செய்யும் எந்தவொரு சிறு செயலும் உங்களின் எல்லையற்ற இறைத்தன்மையின் வெளிப்பாடாகத் திகழ்வதைக் காண விரும்புகிறேன்.' சத்குரு ஜக்கி வாசுதேவ்.

'ஆபிஸில் ஒரே டென்ஷன். எப்ப பார்த்தாலும் வேலை வேலைனு. பேசாம இந்த இந்த வேலைய விட்டிருலாம்னு இருக்கு.'

'என்னால எந்த விஷயத்தையும் முழு ஈடுபாட்டோட செய்ய முடியல. குடும்பத் தையும் சரியாக கவனிக்க முடியல்ல...'

'குடி, சிகரெட் விடணும்னு பார்க்கிறேன். என்னால் விட முடியல்ல...'



'என் புருஷனுக்கு அடிக்கடி கோபம் வரும். ரொம்ப கோபப்பட்டா தலைவலி வரும். அது வந்திருச்சிருன்னா அவரை விடவே விடாது.'

-இப்படி ஏதாவது ஒரு மனக்குறையை ஈஷா மையத்தில் பயிற்சி பெற்ற உங்கள் நண்பரிடம் சொல்லிப் பாருங்கள், உடனே அவர்களுடைய பதில் இதுவாகத்தான் இருக்கும்.

'அடுத்த வாரம், சென்னை லயோலா காலேஜ்ல ஈஷா யோகா க்ளாஸ் எடுக்குறாங்க. மூன்று நாள் அட்டன் பண்ணுங்க. உங்களுக்கே சேஞ்ச் தெரியும்'.

'அட போப்பா. எத்தனையோ சாமியார நாம பார்த்தாச்சு. இவர் வேறயா...' என்று ஆர்வமில்லாமல் பாதிக்கப்பட்டவர் கூறினால், அதற்கு அவருடைய பதில். 'உங்களுக்கு இருக்கின்ற பிரச்னைக்கு உங்க வாழ்க்கையில மூன்று நாளை செலவு செய்யுங்க. புடிச்சிருந்தா கண்டினியூ பண்ணுங்க' என்பார்.

'போய்ட்டு வந்தவங்க இப்போ எவ்வளவு ரிலாக்ஸா இருக்காங்கனு நான் பார்க்கிறேன்' என்பார்.

சரி ஞாயிறோடு இரண்டு நாள் விடுமுறை எடுத்து ஈஷா யோகா பயிற்சிக்கு சென்று வருவார். அடுத்த நாள் தனது நண்பரிடம், 'ஆமாம்பா, நீ சொன்னது சரிதான். சாமி பேசுனது கேட்டு ஏதோ ஒரு மாறுதலா இருக்கு. மனசு லேசான மாதிரி இருக்கு.'

'நீங்க கோயம்புத்தூர்ல இருக்குற அவர் ஆசிரமத்துக்கு போய் பாருங்க. உங்களுக்கு இதை விட அமைதி கிடைக்கும். அவர் சொல்லுற பயிற்சி பண்ணீங்கனா வாழ்க்கையில் எந்த பிரச்னை வந்தாலும் உங்களால சமாளிக்க முடியும். யோகா பயிற்சியில் உங்களை மேலும் வளர்த்துக் கொள்ள ஒரு முறை கோயம்புத்தூர் சென்று வாருங்கள்' என்பார்.

ஈஷாவில் பயிற்சி பெற்றவர்கள் அறிவிக்கப்படாத சேல்ஸ் ரெப்பாகத் தான் இயங்குகிறார்கள். நல்ல விஷயம் சொல்றோம். ஏத்துக்குறதும், ஏத்துக்காததும் உங்க இஷ்டம் என்று கூறலாம். ஆனால், ஈஷா யோகா மையத்தின் வெற்றியே அங்கு பயிற்சி பெற்றவர்கள் அவர்களுக்காக மார்க்கெட்டிங் செய்வதுதான்.

ஜக்கி வாசுதேவ் உபநிஷத் கற்கவில்லை. வேதம் படித்ததில்லை. ஆனால், இவரைத் தேடி ஒரு கூட்டம் வந்துகொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக, கணினியில் வேலை செய்யும் ஐ.டி. ஊழியர்கள், இவரின்

பிரதான பக்தர்களாக இருக்கிறார்கள். பத்து மணி நேரத்துக்கு மேல் கணினி வேலை செய்து மன அழுத்தத்திற்கு ஆளாகும் இவர்கள், ஜக்கியின் தியானப் பயிற்சி மூலம் மன நிறைவு பெறுகிறார்கள். தங்கள் மன அழுத்தத்தைக் குறைத்துக்கொள்ள முடிகிறது. தங்கள் மன அமைதி தியான லிங்கத்தில் கிடைக்கிறது என்று நம்புகிறார்கள். இவர்களுக்கு வரும் நிதியில் பெரும்பாலும் ஐ.டி. ஊழியர்களுடையது என்று குறிப்பிடதக்கது.

'ஒரு சந்தேகம். இவரு பிரம்மச்சாரி சாமியாரா?'

'இல்ல. இவர் கல்யாணமான சாமியார்.'

செப்டம்பர் 3, 1957-ல் சத்குரு என்று அழைக்கப்படும் ஜக்கி வாசுதேவ், மைசூரில் பிறந்தார். தெலுங்கு குடும்பத்தில் பிறந்த இளைய மகன்.

சிறுவயதில் இருந்தே மரங்களுக்கு நடுவில் பயணம் செய்வது ஜக்கிக்கு பிடிக்கும். மரக்கிளையின் அசைவுகளும், அங்கு பள்ளி பாடங்களை மரத்தடியில் படிப்பதும் அவருக்கு மிகவும் பிடிக்கும்.

பாடங்களை மனப்பாடம் செய்து தேர்வு எழுதும் முறை ஜக்கிக்கு பிடிக்காது. இருந்தும், படிப்பில் குறைவான மதிப்பெண்கள் இல்லை. ஜஃகியின் தந்தை மருத்துவர் வாசுதேவ் தன்னைப் போல் இவரையும் டாக்டராக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால், ஜக்கிக்கு டாக்டராகும் ஆசை துளிகூட இல்லை.

ஜக்கிக்கு பதினொரு வயது இருக்கும் போது மலாடிஹள்ளி ஸ்ரீ ராகவேந்திர சுவாமிஜி அவருக்கு அடிப்படை யோகா பயிற்சியை சொல்லிக் கொடுத்தார். அன்றில் இருந்து ஒரு நாள் விடாமல் தவறாமல் யோகா பயிற்சி செய்து வருகிறார். பாம்புகள் என்றால் ஜக்கிக்கு மிகவும் பிரியம். அதிக விஷமுள்ள பாம்புகளைக்கூட மிக கவனமாக கையில் எடுத்து விளையாடுவார். பின்னாளில், பாம்புகள் மூலம் வரும் வருமானத்தை தனது பயணத்திற்கு செலவு செய்வார்.

விரும்பிய இடத்திற்கு போவதும், கல் மீது அமைதியாக அமர்வதிலும் யாரும் அவரை கட்டுப்படுத்த முடியவில்லை. கல்லூரி படிப்பு முடித்த பிறகு ஒரு தொழில் தொடங்கலாம் என்று இருந்தார்.

**கோழிப் பண்ணை**

3200 கோழிகள் ஜக்கியின் பண்ணையில் இருந்தது. ஜக்கி எதிர்பாராத அளவிற்கு அவரது தொழில் வெற்றிகரமாக நடந்தது. வீட்டில் இருந்து

கோழிப் பண்ணைக்கு பேருந்தில் பயணமாக செல்லும்போது நான்கு கிலோ மீட்டர் முன்பே இறங்கிவிடுவார். இதனால், 20 பைசா மிச்சம் பிடிப்பார். அதில் வாழைப்பழங்கள் வாங்கி சாப்பிட்டபடியே இயற்கையை ரசித்துக்கொண்டு பண்ணைக்கு செல்வார்.

தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் மைசூரில் இருக்கும் சாமுண்டி மலைக்கு மோட்டார் பைக்கில் பயணம் செய்வார். அங்கு இருக்கும் பாறைகள் மீது அமர்ந்து தியானம் செய்வார். பாறைகள் மட்டுமல்ல. உதிரும் இலைகள், இரையும் பறவைகள், தவழும் காற்று என்று இயற்கையோடு வாழ்வார். அதில் அவருக்குக் கிடைத்த அமைதி இதுவரை கிடைக்காத ஒன்றாக இருந்தது.

அடுத்து, சிவில் இன்ஜினீயராக இருந்த நண்பர் ஒருவருடன் சேர்ந்து கட்டடப் பணிகளுக்கான நிறுவனத்தைத் தொடங்கினார். ஒரு கட்டட வேலையின் போது அங்கு இருக்கும் சேரிக் குழந்தைகள் கவலை யில்லாமல் சிரித்து விளையாடுவதைப் பார்த்தார். அவர்களுக்கான பள்ளியை உருவாக்கவும், ஆரோக்கியமான உணவு வழங்கவும் முடிவு செய்தார். இதற்கெல்லாம் அப்போது அவர் பணத்தை சம்பாதித்தது பாம்பு மூலம்தான்.

இந்த காலக்கட்டத்தில் தனியாளாக ஜக்கி தனது தியான பயிற்சி வகுப்பை தொடங்கினார். வகுப்புக்கு ஆட்களை சேர்ப்பது, வகுப்பறையை தயார்படுத்துவது, வகுப்பெடுப்பது என்று எல்லா பணிகளையும் இவர் ஒருவரே செய்தார். அவரை யாரும் 'குருஜி' என்றோ 'சுமாமிஜி' என்றோ அழைக்கமாட்டார்கள், 'ஜக்கி' என்றுதான் அழைப்பார்கள்.

இவர் வகுப்பில் சேர பலர் வரத் தொடங்கினார்கள். பெண்களும் சேர்ந்தனர். அப்போது, ஒரு பெண் ஜக்கியின் வகுப்பில் யோகா பயிற்சிக்காக வந்தார். எல்லா சாமியார்களின் வாழ்க்கையில் தொடங்கிய சர்ச்சை ஜக்கி வாசுதேவ் மீதும் வரத் தொடங்கியது. அந்த பெண்ணின் பெயர் விஜயகுமாரி.

விஜயகுமாரி சிறு வயதிலேயே திருமணமாகி மணமுறிவானவர். ஆழ்மனதில் சோகமும், விரக்தியும் தேங்கி இருந்தது. இப்படி மனமுடைந்த நிலையில் ஜக்கியின் யோக வகுப்பில் சேர்ந்தார். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த விஜியின் தந்தையும் ஜக்கி யோகா பயிற்சி மூலம் குணமடைந்தார்.

விஜி மேல்நிலைப் பயிற்சி முடித்தவுடன் ஆசிரியர் பயிற்சிக்கும் சேர்ந்தார். ஜக்கியின் ஒவ்வொரு வார்த்தைகளும் விஜியை கவரத்

தொடங்கியது. இருவரும் நெருங்கி பழகத் தொடங்கினர். மண முறிவுக்கு பிறகு திருமணம் பற்றி எண்ணமில்லாமல் இருந்த விஜிக்கு, திருமணத்தின் அவசியத்தை ஜக்கி உணர்த்தினர். இருவரும் திருமணம் செய்ய முடிவெடுத்தனர்.

சிவராத்திரி அன்று, கார்நாடக மாநிலத்தில் உள்ள கூர்க்கில், ராமேஸ்வர் திருக்கோவிலில் ஜக்கி விஜி திருமணம் மிக எளிய முறையில் நடந்தது.

திருமணமான பிறகு, ஜக்கி தியானத்திலும், யோகத்திலும் அதிக நேரம் செலவிட்டார். வெளியூரில் தியான பயிற்சி எடுக்கும் வாய்ப்புகள் வந்துகொண்டு இருந்தன. அப்போது, தமிழ்நாட்டில் சில நண்பர்கள் கேட்டுக்கொண்டதன் பெயரில் தியானப் பயிற்சி எடுக்க கோயம்புத்தூர் வந்தார்.

அந்த வகையில் ஜக்கிக்கு யோகம். தியானத்தில் ஆர்வமுள்ள சில நண்பர்கள் கிடைத்தார்கள். அனைவரும் சேர்ந்து இயங்குவதற்கு தனியாக ஒரு இடம் தேவை என்று உணர்ந்தனர். அப்போது, தங்கள் ஆசிரமத்துக்கு இடம் தேடி ஈரோடு, திருப்பூர், கோவை என்று அலைந்தனர்.

அவர்களின் தேடலில் கோவை இருந்து முப்பது கிலோமீட்டரில் இருக்கும் வெள்ளியங்கிரி மலை அருகே ஆசிரமம் அமைப்பதற்கு இடம் கிடைத்தது. 1994-ல், ஈஷா யோக மையத்தை அமைத்தனர். அங்குதான் முதல்முதலில் தியான லிங்கம் அமைப்பதற்கான யோசனை வந்தது.

**தியானலிங்கம்**

பார்க்க சிவலிங்கம்போல் இருக்கும். சராசரி சடங்குகளோ பூஜைகளோ தேவையில்லை. யோகம், தியானம் போன்ற சங்கிலிகளால் பிணைக்கப்பட்டது.

14 அடி நீள குகை. குகை வாசலில் சக்தியின் அடையாளமாக ஒரே கல்லில் ஏழு தலைப் பாம்பில் பொருத்தப்பட்டிருக்கும். உள்ளே நுழைந்ததும் 76 அடி விட்டமும், 33 அடி உயரும் உள்ள தியான லிங்க கருவறையைப் பார்க்கலாம்.

தியானம் செய்வதற்காக கூரையை செம்மண், செங்கல், சுண்ணாம்பு, மூலிகைக் கலவைகளால் செய்யப்பட்டது. சிமெண்ட், இரும்பு போன்ற கலவையைவிட பல நூறு ஆண்டுகள் தாங்கும்.

அங்கு வரும் அன்பர்கள் அமர்ந்து தியானம் செய்வதற்காக 28 தவக் குகைகள் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு தியானம் செய்தால் உடல் ஆரோக்கியம், மனத்தில் உந்து சக்தி பெருகும் என்பது அங்கு வரும் அன்பர்களின் நம்பிக்கை.

மாசி மாதம் வரும் 'மஹா சிவராத்திரி'யை தியான முறையில் வழிபடுவார்கள். மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை தியானம் மட்டுமல்லாமல் அன்னதானம், பாரம்பரிய இசை நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கும். இந்த நிகழ்ச்சிக்கு ஈஷா மையத்திற்கு உதவுவதற்காகவே 10,000-க்கும் மேற்பட்ட உதவியாளர்கள் இருப்பார்கள். பூஜையில் பங்கு பெருவதற்காக லட்சக்கணக்கான மக்கள் திரள்வார்கள்.

கூட்டத்தை குறைப்பதற்காக மதுரை, திருச்சி போன்ற இடங்களில் நேரலையாக நிகழ்ச்சியை ஒளிபரப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. இருந்தும், சிவராத்திரி அன்று ஜக்கியின் யோகா ஆசிரமத்தில் கூட்டம் குறைவதில்லை.

ஈஷா தியானப் பயிற்சிக்காக வசூலிக்கப்படும் கட்டணம் மிகவும் அதிகம். இரண்டு மூன்று நாள் பயிற்சிக்கு ரூ.1500 மேல் வசூலிக்கப் படுகிறது. ஜக்கி வாசுதேவ் வந்து எடுப்பதாக இருந்தால் அதற்கு தனியாக வேறு தொகை. ஆனால், அவர்கள் தரப்பில் மண்டபம், பயிற்சியாளர்களுக்கான செலவு மற்றும் ஆசிரமத்துக்கு நன்கொடை ஆகியவை இதில் சேர்ந்து இருப்பதாக கூறப்படுகிறது.

ஒரு முறை இவர்களின் வகுப்பில் சேர்ந்து பயிற்சி எடுத்துக்கொண்டவர்கள் மேலும் யோகா பயிற்சி எடுத்துக்கொண்டு தங்களை மேம்படுத்திக்கொள்ள கோவை ஆசிரமத்துக்கு செல்லலாம். அங்கு இலவசமாக தங்கிக்கொள்ளலாம். இரண்டு வேலை உணவும் இலவசம். ஆசிரமத்துக்குள் பணம் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. மேலும், ஆன்மிகத்தில் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளலாம்.

ஆனால், அங்கு எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருக்கக் கூடாது. ஆசிரமத்துக்கான சில வேலைகளை நாமே முன் வந்து செய்ய வேண்டும். எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருந்தால், மனதில் தேவையில்லாத சிந்தனைகள் வரும். அந்த சிந்தனைகளை தடுப்பதற்காக அவர்கள் விரும்பும் ஆசிரம வேலையை எடுத்துச் செய்யலாம்.

காலை 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். காலைப்பொழுது குரு பூஜையில் தொடங்கும். பூஜை முடிந்த பிறகு உணவு. இரண்டாயிரம் பேர் சேர்ந்து உணவு உண்ணலாம். உதவி செய்ய வேண்டும் என்று விருப்பப்படுபவர்கள் உதவி செய்யலாம்.

காலை உணவு முடித்து விட்டு அன்றைய வேலையை தொடங்க வேண்டும். காலை 8 மணிக்கு தொடங்கும் வேலை இரவு வரை தொடரும். அங்கு வேலை செய்வதற்கு ஏதாவது ஒன்று இருக்கும். வேலை எல்லாம் முடித்து தூங்கவே இரவு 11 மணியாகுமாம்.

இங்கு வேலை செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. ஆனால், சும்மா இருந்தால் உள் மனம் தேவையில்லாத தீய எண்ணங்களை சிந்திக்கும். உனக்காக ஆசிரமத்தில் வேலை செய்கிறாய் என்றுதான் கூறுவார்கள்.

சில சமயம், சத்குரு ஜக்கி இருந்தால் மாலை 5.30 மணிக்கு ஆசிரமத்தில் இருப்பவர்களுக்காக உரையாற்றுவார். தங்கள் கேள்வியை கேட்டு சந்தேகத்தை போக்கிக்கொள்ளலாம்.

1997-ல் ஜக்கியின் வாழ்க்கையில் மிகப்பெரிய சர்ச்சை எழுப்பியது அவரது மனைவி விஜியின் மரணம். ஜக்கியின் ஆசிரமத்துக்குள்ளே விஜியின் ஜீவ சமாதி மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். ஆனால், அவர் எப்படி இறந்தார் என்பது இன்று வரை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. ஆனால், ஈஷாவில் இருப்பவர்களும், ஜக்கியை பின்பற்றுபவர்களும் அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

**விஜி முக்தி அடைந்தார்**

ஆழ்ந்த தியானத்தில் அவர் உயிரை அவரே வெளியே எடுத்துக் கொண்டார். இதை 'மஹாசமாதி' என்று சொல்வார்கள். தங்கள் உயிரை ஆழ்ந்த தியானத்தின் மூலம் வெளியே எடுப்பதற்கான பயிற்சி. இதை விஜி தீவிரமாக மேற்கொண்டு வந்தார். அதில் வெற்றியும் பெற்றார்.

ஒரு பௌர்ணமி அன்று பிரம்மச்சாரிகளுக்கு உணவு படைத்துக் கொடுத்தார். பிறகு, யாருக்கும் தெரியாமல் ஆழ்ந்த தியானத்தின் மூலம் தனது உயிரை அவரே வெளியே எடுத்து முக்தி அடைந்தார் என்று நம்புகிறார்கள்.

விஜியின் மரணத்தை அவரது தந்தை நம்பவில்லை. ஜக்கிக்கு எதிராக போலீஸில் புகார் கொடுத்தார். ஜூன் 15,1996 அன்று தன்னை விட்டு

பிரிந்ததாகவும், ஜனவரி 23, 1997 இறந்ததாக செய்தி வந்தது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

முதலில் பெங்களூரில் பதிவான இந்த வழக்கு, விஜி இறந்து சமாதி கோவையில் இருப்பதால் கோவை காவல்துறையிடம் மாற்றப்பட்டது. கோவை காவல்துறையினர் புகாரைப் பதிவு செய்தனர்.

அந்த சமயம், விசாரனைக்கு பயந்து அவர் ஆசிரமத்தில் இல்லாமல் அமெரிக்காவுக்கு சென்றார் என்று கூறப்படுகிறது. ஆனால், ஈஷா யோகா மையம் இதை மறுத்தது. ஜக்கி சொற்பொழிவாற்றத்தான் சென்றார் என்று கூறியது.

விஜிக்கு 'ராதை' என்ற மகள் இருந்ததாக ஜக்கியின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜி மஹாசமாதி ஏற்கும் முன் தனது மகளிடம் அடுத்த முறை தான் வர மாட்டேன் என்று கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மகளை தனியாக விட்டு தாயான விஜி எதற்காக இறக்க நினைக்க வேண்டும்? தன் உயிரை விஜியே மாய்த்துக்கொள்வது தற்கொலை. அதை ஏன் ஒரு கணவனாக ஜக்கி தடுக்கவில்லை? நிஜமாகவே விஜி முக்தி அடந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா? விஜியின் அப்பாவின் புகாருக்கு இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது? ஜக்கியை விசாரணையாவது செய்தார்களா?

-இப்படி பல கேள்விகளுக்கு இன்று வரை விடை இல்லை. இந்த சர்ச்சை எழுந்த காலத்தில் ஊடகத்தில் இதைப்பற்றி எந்த செய்தியும் வரவில்லை. எந்த எழுத்தாளரும் எழுதவில்லை. இன்று வரை விஜியின் மரணம் தொடரும் மர்மமாகவே இருக்கிறது.

'மஹாசமாதி பற்றி சராசரி மக்களுக்கு வாதம் மூலம் விளக்க முயலாதீர்கள். அது தன்னைதானே காத்துக்கொள்ளும் தன்மை யுடையது' என்று தனது சீடர்களிடம் ஜக்கி கூறினார்.

அடுத்து, ஜக்கி வாழ்க்கை முறையில் இன்று பல சர்ச்சைகளை கிளப்பியுள்ளது.

'காலம் பொன் போன்றது' என்று யாரும் மறுக்க முடியாது. அந்த காலத்தை சரியாக பயன்படுத்தினால்தான் முன்னேற முடியும், பொருள் ஈட்ட முடியும். இப்படி ஒரு சராசரி மனிதன் யோசிக்கலாம். வியாபாரி யோசிக்கலாம். பல கோடி சம்பாதிக்கும் தொழில் அதிபர்

யோசிக்கலாம். ஆனால், லாபம் நோக்கமற்ற ஈஷா என்ற தொண்டு நிறுவனத்தை நிர்வகிக்கும் ஜக்கி எப்படி யோசிக்க முடியும்.

ஜக்கி தனியாக செல்வதற்கு R22 வகையான ஹெலிகாப்டர் ஒன்றை வைத்திருக்கிறார் என்பது இன்னொரு சர்ச்சை.

எல்லா ஊரில் இருக்கும் தனது பக்தர்களை காட்சிக் கொடுப்பதற்காக ஹெலிகாப்டரில் செல்கிறார் இதில் என்ன தவறு இருக்கிறது என்ற நியாயம் கூறலாம். ஆனால், லாப நோக்கமற்ற தொண்டு நிறுவனம் என்றுதான் 'ஈஷா யோகா அறக்கட்டளை'' என்று கூறப்படுகிறது. அதன் உரிமையாளர் இது போன்ற செலவுகளை செய்யும்போது, அதில் இன்னும் நாலு ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவலாம் என்று கருத்து வருவதை அவர்களால் தடுக்க முடியாது.

R22 ஹெலிகாப்டர். இதன் விலை பல கோடிகளுக்கு இருக்கும். இதை ஓட்டப் பயிற்சி எடுக்கவே ஒரு லட்சம் மேல் செலவு செய்ய வேண்டும். இதை பராமரிக்கும் செலவு மாதம் பல ஆயிரத்துக்கு இருக்கும். பல கோடிகளை புரட்டும் அம்பானி போன்றவர்கள் வாங்கியிருந்தால் பரவாயில்லை. மக்களுக்கு தொண்டு செய்து, தியான லிங்கத்தின் பெருமையை பரப்ப நினைக்கும் சாமியாருக்கு எதற்கு ஹெலிகாப்டர்?

ஒரு இடத்திற்கு இன்னொரு இடத்திற்கு செல்ல தனது நேரத்தை மிச்சப்படுத்த ஹெலிகாப்டர் பயிற்சி மேற்கொண்டதாக கூறுகிறார். தனது நேரத்தை மிச்சப்படுத்துவது, ஒரே நேரத்தில் பல ஊர்களில் சென்று சொற்பொழிவு நடத்துவதற்குத்தான். அதனால் வரும் லாபத்தை அவர் இழக்க விரும்பவில்லை. நேரத்தை சேமித்துவைக் கிறார் என்று விமரிசனம் எழுந்தது.

வருடந்தோறும் ஜக்கி வாசுதேவ் தனது பக்தர்களை இமயமலை பயணத்திற்கு அழைத்துச்செல்வார்.

'குருஜி போகுற அடுத்த மாத பயணத்தில் நானும் வருகிறேன்' என்று கேட்டால் இடம் கிடைத்து விடாது.

ஜக்கியுடன் பயணம் செய்ய ஒரு வருடம் முன்பே முன்பதிவு செய்ய வேண்டும். தேர்ந்தெடுத்த சிலப் பேர்களை மட்டுமே தன்னுடன் இமயமலை பயணத்திற்கு அழைத்துச்செல்வார். பயணம் செய்பவர்களின் பாதுகாப்பு குறித்து அதிகம் அக்கறை செலுத்தப்படும்.

ஜக்கியுடன் பயணம் செய்ய இருப்பவர்கள் நேராக இமயமலை அடிவாரத்துக்கு வந்துவிடுவார்கள். அங்கிருந்து, ஜக்கி பயணத்தில்

சேர்ந்துகொள்வார். பயணத்தில் ஜக்கியுடன் உரையாடவும், அவருடன் கேள்விகள் கேட்கவும் அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறு பயணம் செய்வது வித்தியாசமான அனுபவம் என்று பலர் கூறியிருக்கிறார்கள். மனதில் தீய எண்ணங்கள் எதுவும் நம்மை நெருங்காது.

அங்கு சென்று சொந்த ஊருக்கு வந்த பிறகும் பயணத்தின் அதிர் வலைகள் உடலில் இருந்துகொண்டே இருக்கும் என்றுகூட சிலர் கூறியிருக்கிறார்கள்.

இன்று இமயமலை பயணம் செய்ய விரும்பவர்கள், நினைப்பவர் களுக்கு உதவ எத்தனையோ டிராவல்ஸ் இருக்கின்றன. எதற்காக ஜக்கியுடன் பயணம் செய்ய ஒரு வருடம் மேல் காத்திருக்க வேண்டும் என்று கேள்வி எழுகிறது. மற்றவர்களுடன் பயணம் செய்தால் ஆன்மிகப் பயணமாக இருக்கும். ஆனால், ஜக்கியுடன் பயணம் செய்யும்போது தியானத்துடன் ஆன்மிகத்தை உணர முடியும் என்று சென்று வந்தவர்கள் கூறுகிறார்கள். ஒரு வருட காத்திருப்புக்கு பிறகு அப்படி ஒரு பயணத்தை மேற்கொள்ள தயாராக இருக்கிறார்கள். அதனால்தான், மற்றவர்களை காட்டிலும் ஜக்கியுடன் பயணம் செய்பவர்களிடம் இருந்து அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கோவையில் இருக்கும் ஈஷா அறக்கட்டளை சில இடங்களை ஆக்கிரமித்து கட்டியிருப்பதாக இன்னொரு விமரிசனம் இருக்கிறது. கோவை குடியிருப்புப் பகுதியில் யானைகள் வருவதற்கு முக்கியக் காரணம், யானை வழித் தடங்களில் ஆக்கிரமித்து ஈஷா மையத்தின் கட்டடம் கட்டப்பட்டுள்ளதுதான் என்று கூறுகிறார்கள். யானை வழித் தடங்களை அக்கிரமித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

கோவை மாநகரில், மாநகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி. மைதானத் தில் ஆனந்த அலை மகா சத்சங் நிகழ்ச்சியில் ஜக்கி வாசுதேவ் கலந்துகொள்ள வரவிருப்பதாகவும், இது குறித்து கோவை வெஸ்ட் பிரஸ் வளாகத்தில் 13.02.2011 அன்று மாலை 5.30 மணியளவில் அனைத்து பத்திரிகையாளர்களையும் நேரில் சந்தித்து விளக்கமளிக்க இருப்பதாகவும் தெரிவித்தனர்.

ஜக்கியை பேட்டி எடுப்பதற்காக சுமார் 25 பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். அதில், மாதம் இரு முறை வெளிவரும் 'ஆயுதம்' இதழின் செய்தியாளராக பணியாற்றி வந்த மூத்த பத்திரிகையாளர் எஸ்.பூபதி கண்ணன் என்பவர் ஜக்கியிடம் சில கேள்விகள் கேட்டார். அந்த கேள்விகளில் சில...

1. உங்கள் யோகா மையத்தில் வெளிநாட்டில் தேடப்பட்டு வரும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதாக கூறப்படுவது உண்மையா?

2. யோகா மையத்திற்குள்ளும் உங்கள் வளாகத்தைச் சுற்றி உள்ள ஒரு சில இடங்களும் வெளிப்புற மரங்களிலும் ரகசிய கேமிரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறதே உண்மையா?

3. உங்கள் பெயர் ஜாவா வாசுதேவ் என்பதை எப்போது ஜக்கி வாசுதேவாக மாற்றிக்கொண்டீர்கள்? இதுவும் உண்மையா?

4. 1970-ம் ஆண்டு கோவை அவிநாசி ரோடு மேம்பாலத்தின் கீழ் கஞ்சா விற்றதாக கோவை காட்டூர் பி3 காவல் நிலையத்தில் உங்கள் மீது வழக்கு உள்ளதாக கூறப்படுகிறது உண்மையா?

என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார். ஜக்கி எதற்கும் பதிலளிக்கவில்லை. ஜக்கியின் முகம் மாறியது.

கேள்வி கேட்டவரிடம், 'உனக்கு மனநிலை பாதிக்கப்பட்டதுபோல உள்ளது. அதனால்தான் கேள்விகளை இப்படி கேட்கிறாய்' என்று கூற, மற்ற பத்திரிகையாளர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அந்த செய்தியாளர் மீண்டும் ஜக்கியின் மனைவியின் சாவில் இருக்கும் கேள்விகளைக் கேட்டபோது, அருகில் இருந்த அவருடைய சீடர்களிடம் மௌனமாக ஜாடை காட்ட, 4 குண்டர்கள், அந்த செய்தியாளரை வெளியே தூக்கிக்கொண்டு வந்தனர்.

குண்டர்களின் ஒருவன் அவருடைய வலது கையை முறுக்கினார். இன்னொருவர் அவருடைய பாக்கெட்டிற்குள் இருந்த அடையாள அட்டையைப் பறித்தார். இன்னும் 2 பேர், தோள்பட்டையில் சரமாரியாக தாக்கினார்கள். வலி தாங்க முடியாமல் அந்த பத்திரிகை யாளர் கத்தியபோது, சக பத்திரிகையாளர்கள் வெளியே வந்தனர். இவர்களை பார்த்ததும் தாக்குதலை நிறுத்திக்கொண்டனர். அடிபட்ட பத்திரிகையாளர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இது சம்பந்தமாக, மறுநாள் (14.2.2011) காலை சுமார் 100-க்கும் மேற்பட்ட நிருபர்கள் ஈஷா மையம் ஜக்கி மீது போலீஸில் புகார் கொடுத்தனர்.

புகாரைப் பெற்றுக்கொண்ட கோவை மாநகர காவல்துறை ஆணையர், சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். இதன் அடிப்படையில் அருகிலுள்ள குதிரைப் பந்தைய சாலை பி4 காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாருக்கு காவல்நிலைய ஆய்வாளர் நகல் பிரதியை வழங்கினார். நகலின் பதிவு எண்.433/1808.

பொறுமையையும், மன அமைதியையும் சொல்லித்தரும் ஜக்கி வாசுதேவ் ஒரு பத்திரிகையாளரின் கேள்விகளை எதிர்கொள்ள முடியவில்லையே என்று பத்திரிகையாளர் கேட்கத் தொடங்கினர்.

குருஜி தோற்றத்தில் இருக்கும் சுயமுன்னேற்றப் பேச்சாளர். லாப நோக்கம் நிறுவனத்தின் மூலம் அதிகம் லாபம் பார்ப்பவர். 'இவர் புதுசா எதுவும் சொல்லலை. ஏற்கனவே முன்னாடி பல ஆளுங்க சொன்னதைத்தான் இவர் சொல்றாரு. ஆனா, அவர் சொல்லும் போது நமக்குள்ள ஏற்படுற மாற்றம் நமக்கு புதுசா இருக்கும்' இதுதான் சாமானியன் பார்வை.

**இவர் கீழ் இயங்கும் அமைப்புகள்**

ஈஷா பவுண்டேஷன்.
ஈஷா வித்யா - (கிராமப்புற ஏழை மாணவர்களை கல்வி திரண்களுக்கு உதவுவது).
ப்ராஜெக்ட் கிரீன்ஹேண்ட் (பசுமைப் புரட்சிக்கு உதவுவது).
ஈஷா தொழில் உதவி (கைத் தொழிலுக்கு உதவுவது).

# 5

## மாதா அமிர்தானந்தமயி தேவி

*அன்பை விதைத்து அன்பை அறுவடை செய்யுங்கள். அகங்காரம் என்ற களைச் செடியை வளரவிடாதீர்கள் சந்தோஷத்தை வெளியில் தேடாதீர்கள். அது ஓர் உணர்வுதான். அது உங்களுக்குள் ஏற்பட வேண்டுத். அது எங்கிருந்தோ வருவதில்லை - மாதா அமிர்தானந்தமயி தேவி*

அன்று. 'ஏதோ தலை வலிக்கிறது' என்றார் மாதா. அவர் பொதுவாக இப்படி கூறுபவர் இல்லை. ஆனால், இன்று எதனால் அப்படி கூறுகிறார் என்று அவருடன் இருந்தவர்களுக்குப் புரியவில்லை. அதுமட்டுமில்லாமல் மாடிக்கு செல்லலாம். கீழே இருக்க வேண்டாம் என்றார். அவருடன் இருப்ப வர்களுக்கு கொஞ்சம் வித்தியாச மாகத்தான் தெரிந்தது. மாதா எது சொன்னாலும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்யும்.



மாதாவோடு அவர்களது சீடர்களும் மாடிக்கு சென்றனர். கொஞ்ச நேரத்தில் மாடிக்கு வந்த சீடர்களுக்கு பயம் கலந்த வியப்பு. அப்போது, கடலோர பகுதிகளில் சுனாமி தாக்கியது. ஆசிரமத்தை சேர்ந்த சில காவலாளிகள் சுனாமியால் தாக்கப்பட்டனர். ஆனால், மாதாவுக்கு திடீர் என்று தோன்றிய எண்ணம்தான் அவரையும், சீடர்களையும் சுனாமியில் இருந்து காப்பாற்றியது என்று கேரளாவில் இருந்து வந்த நண்பர் ஒரு கூறினார்.

இப்படி ஒரு கதை கூறுவார்கள். உண்மையா, பொய்யா என்ற எந்த விபரங்களும் இல்லை. ஆனால், மாதாவின் பக்தியில் இருப்பவர்கள் நம்புவார்கள். அந்த நம்பிக்கையை அசைக்க முடியாது.

உண்மையில், சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவ்தில் மாதா அமிர்தானந்தமயியின் ஆசிரமம்தான் அதிகம் உதவியது. கிட்டதட்ட 20,000-க்கும் மேற்பட்ட மக்கள் அவரது ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்தனர். பாதிக்கப்பட்ட மக்களோடு மக்களாக இருந்து ஆறுதல் கூறினார். அவர்களோடு சேர்ந்து அவர்களின் குடும்பத்திற்காக கண்ணீர் சிந்தினார். இத்தனை உயிர்கள் இறந்திருக்கும்போது தன்னால் எப்படி நிம்மதியாக சாப்பிட முடியும் என்று சாப்பிடாமல் இருந்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு தனது சீடர்களை அனுப்பி உதவினார். தனது மருத்துவமனையில் இருந்து மருந்து களையும், மருத்துவர்களையும் அனுப்பி வைத்தார்.

வீடு இழந்தவர்களுக்கு தாற்காலிகமாக வீடுகளை அமைத்து தங்க வைத்தார். கேரளாவில் இருக்கும் அலப்பாட்டிலும், தமிழ்நாட்டில் இருக்கும் சம்மந்தப்பேட்டையிலும் மொத்தம் 550-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கினார்.

அமெரிக்காவில் இருக்கும் ஹெல்த் கேர் தொண்டு நிறுவனம் பல கோடி ரூபாயை நிவாரண உதவிக்காக மாதாவிடம் கொடுத்தனர். கேரளத்தில் எர்ணாகுலம், ஆலப்புழை போன்ற இடங்களில் வீடு கட்டவும், சமையலுக்கு பாத்திரங்கள் வாங்கவும் உதவி செய்தார்.

அமிர்தானந்தமயி இந்திய பிரச்னைக்கு மட்டுமல்ல உலகில் எந்த துயர் சம்பவம் நடந்தாலும் வருத்தப்படுபவர். பிலிப்பைன்ஸில் தைபூன் புயல் தாக்கியதில் மக்கள் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். கிட்டததட்ட 7000-க்கும் மேற்பட்ட மக்கள் பற்றிய விபரங்கள் தெரியவில்லை. பலர் வீடு, சொந்தங்கள் இழந்து தவித்தனர்.

கலிபோர்னியாவில் இருக்கும் தனது மாதா அமிர்தானந்தமயி ஆசிரமத்தில் இருந்து 20 லட்சம் டாலர் உதவித் தொகையாக வங்கினார்.

மாதா அமிர்தானந்தாமயி மனித உருவத்தில் வந்த தேவதை. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றிய தாரகை. இப்படி பல பட்டங்களை பக்தர்கள் மாதா அமிர்தானந்தமயிக்கு வழங்கினர்.

இவர் பொங்கிப் பிரவாகம் எடுத்து தங்கு தடையின்றி அகிலமெங்கும் பாய்ந்துகொண்டிருக்கும் நதி. இந்த நதியை தேடி, நிம்மதிக்காக மக்கள் லட்சோபலட்சம் பேர் வருகிறார்கள்.

சாதாரண மீனவர் குடும்பத்தில் பிறந்து, வாழும் மீராவாக விளங்குகிறார் மாதா அமிர்தானந்தமயி. இன்று கேரளாவில் காங்கிரஸாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டாலும் சரி, மாதா அமிர்தானந்தமயிக்கு செல்வாக்கு அதிகம். எத்தனை சர்ச்சைகள் அவர் மீது இருந்தாலும் நான்கு மாநிலத்தில் இருந்தும் பக்தர்கள் தேடி வருவார்கள். வெளிநாட்டில் இருந்தும் பல கோடி ரூபாய் பணம் வந்துகொண்டே இருக்கும். அவருக்கு எதிராக பேசியவர்களுக்குத் தான் பிரச்னை வந்திருக்கிறதே தவிர அமிர்தானந்தாமயி மீதான சர்ச்சையில் அவர் இதுவரை துளிக்கூட பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்.

'அம்மா' என்ற வார்த்தை தமிழ்நாட்டில் மட்டுமல்ல பக்கத்து மாநிலமான கேரளவையும் ஆட்டிப்படைக்கக்கூடிய வார்த்தை. இங்கு இருப்பவர் ஆளும் பதவியில் இருக்கிறார். முதல்வர் என்ற அதிகாரம் இருக்கிறது.

ஆனால், கேரள அம்மாவுக்கு பதவி, அதிகாரம் என்று எதுவும் இல்லை. எந்த அரசியல் கட்சிக்கும் சார்புடையவரும் இல்லை. ஆனால், கேரளாவில் யார் ஆட்சி செய்தாலும் அவர் செல்வாக்கு குறையாது. எந்த அரசியல்வாதியும் அவருடைய பெயர், புகழை மிஞ்ச முடியாது. யார் என்ன புரளி பரப்பினாலும், என்ன சர்ச்சை வந்தாலும் கேரள மக்கள் அவரை அன்பாக 'அம்மா' என்றே அழைப்பார்கள். அதில் எந்த மாற்றமும் வரப்போவதில்லை.

அனைத்து மக்களுமே அம்மாவின் குழந்தைகள். அந்த குழந்தை களுக்காகத்தான் அம்மா இரவு பகலும் ஓய்வின்றி உழைக்கிறார். தனது வாழ்நாளில் முப்பது ஆண்டுகள் மக்கள் சேவைக்கே செலவு செய்தார். உலகின் அனைத்து மூலைகளுக்கும் போய் குழந்தைகளை சந்திருக்கிறார்.

கிட்டதட்ட இரண்டரை கோடிக்கு பேர் மேல் தனது வாழ்நாளில் தனித்தனியாக சந்தித்து பேசியிருப்பார். அவர்களும் அவருடைய தோளில் சாய்ந்து கண்ணீர் சிந்தி அழுது ஆறுதல் அடைந்திருக் கிறார்கள். யாருமில்லாதவர்கள்கூட அவருடைய அணைப்பில் அம்மாவை உணர முடியும் என்று சொல்வார்கள்.

கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா என்று மூன்று மாநிலத்திலும் இவரு டைய அமிர்தா பல்கலைக்கழகம் இருக்கிறது. எல்லா மாநிலங்களில் இருக்கும் இடங்களை சேர்த்தால் 800 ஏக்கருக்கு மேல் இருக்கும். ஆண்டுக்கு பதிமூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்று அந்த பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியே வருகிறார்கள்.

AIMS என்ற பெயரில் மருத்துவமனை. மக்களுக்கு உதவக்கூடிய மருந்தகம் வைத்திருக்கிறார். பெரிய பெரிய மருத்துவர்கள் அங்கு வேலை செய்கிறார்கள்.

உலகில் இருக்கும் பல்வேறு தொண்டு நிறுவனங்களின் உறுப்பினராக இருக்கிறார். சமீபத்தில் நடந்த விவேகானந்தர் 150-வது பிறந்த நாள் விழாவின் இந்தியக் குழுவின் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

கேரளாவில் ஆண் சன்னியாசிகளை எல்லாம் ஓரம் கட்டிய பெண் சன்னியாசி. எந்தத் துறையிலும் பெண்கள் சாதிக்க முடியும் என்கிறபோது கார்ப்பரேட் சாமியார்களில் பெண்களால் சாதிக்க முடியும் என்று காட்டியவர்.

'அமிர்தானந்தாமயி' கேரளாவின் மந்திரச் சொல். மிகப்பெரிய சாம்ராஜ்ஜியத்தின் பெயர். அதை யாராலும் மறுக்க முடியாது.

27 செப்டம்பர், 1953-ல் சாதாரண மீனவத் தம்பதிக்கு நான்காவது மகளாக கேரளத்தின் கொல்லம் மாவட்டத்தில் உள்ள பறயக்கடவு என்ற ஊரில் பிறந்தார். அந்த ஊரை அம்ருதாபுரி என்று இப்போது அழைக்கிறார்கள்.

அமிர்தானந்தமயியின் இயற்பெயர் சுதாமணி இதமன்னேல். 'சுதா' என்றால் மலையாளத்தில் 'அமிர்தம்' என்றும், 'மணி' என்றால் விரும்பியதை வழங்கும் சிந்தாமணி என்று பொருள்.

சிறு வயதில் இருந்தே ராமகிருஷ்ண பரமஹம்சர்போல் கடவுள் பக்தி யுடன் இருப்பவர். குறிப்பாக கிருஷ்ணரைப் பற்றிய பாடல்களைப் பாடி வழிப்படுவார். ஒரு கட்டத்தில் கிருஷ்ணரை வணங்கும்போது

அவரை அறியாமலே கண்ணில் நீர் வரும் அளவிற்கு பக்தி பெருக்கெடுத்து ஓடும்.

குடும்ப சூழ்நிலையின் காரணமாக தனது படிப்பை ஒன்பது வயதிலே நிறுத்திக்கொள்ள வேண்டியதாக இருந்தது. தனது சகோதர, சகோதரிகளை இவர்தான் கவனித்துக்கொண்டார்.

சுதாமணியின் குடும்பம் செல்வ செழிப்பான குடும்பம் இல்லை என்றாலும், மற்றவர்களுக்கு கஷ்டம் என்றால் தனது வீட்டில் இருந்து உணவு, துணிமணி என்று முடிந்தவற்றை எடுத்துக் கொடுப்பார். இதற்காக வீட்டில் இருப்பவர்களிடம் பலமுறை திட்டும் வாங்கியிருக் கிறார். ஆனால், மற்றவர்களுக்கு உதவாமல் அவரால் இருக்க முடியாது.

14 வயது நிரம்பிய ஒரு பெண் மற்ற ஆடவர்களை தொட்டுப் பேசுவதை தவறாக பார்க்கும் சமூகம். அப்படிப்பட்ட சமுதாயத்தில் பருவம் வந்த பெண் மற்றவர்களுக்கு தொட்டு உதவி செய்வதில் வீட்டில் உள்ளவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதற்கு அவர், ‘உலகில் எல்லா உயிரினங்களும் அன்பின் வெளிப்பாட்டிலே உருவானவர்கள். இதில், ஆண், பெண் என்ற பேதமில்லை. மருத்துவர் நோயாளியை குணப்படுவதற்கு எப்படி மருத்துவம் பார்ப்பாரோ, அப்படித்தான் நானும் செய்கிறேன்’ என்றார்.

இவருக்கு திருமணம் செய்துவைத்தால், பிரச்னை தீரும் என்று பெற்றோர்கள் வரன் பார்த்தனர். ஆனால், திருமணம் செய்துகொள் வதில் துளிக்கூட விரும்பமில்லை. குடும்ப வாழ்க்கை சுதாமணிக்கு நாட்டமில்லை. திருமணத்துக்கு வந்த எல்லா வரன்களை நிராகரித்தார். தன் வாழ்க்கையில் திருமணமே இல்லை என்றார்.

மார்ச் 5, 1975 அன்று புல்கட்டை சுமந்தவாறு வீட்டுக்கு திரும்பிய போது பக்கத்து வீட்டில் ஆன்மிக மணம் பொங்க பாராயணம் நடந்து கொண்டிருந்தது. கைகள் கிருஷ்ண முத்திரை தாங்கின. அங்கிருந்த வர்கள் சுதாமணியின் தெய்வீகத்தன்மையை பார்த்தனர். அன்றில் இருந்து, சுதாமணியாக இருந்தவர் ‘மாதா அமிந்தானந்தமயி தேவி’யாக மாறினார்.

1981-ல் தனது சீடர்களுடன் சேர்ந்து சொந்த கிராமத்திலேயே ‘மாதா அமிர்தானந்தாமயி மடம்’ என்ற அறக்கட்டளையை தொடங்கினார். அதன் நிறுவனராக அமிர்தானந்தமயி இருந்தார். தனது அறக்கட்டளைப் பெயரில் சொற்பொழிவுகளும், தொண்டுகளும் செய்து வந்தார்.

தனது சீடர்களின் வேண்டுக்கோளுக்கு இணங்க 1987-ல் இருந்து வெளிநாட்டுக்கு சென்று சொற்பொழிவுகள் நடத்தவும் தொடங்கி னார். அவரது உலகளவில் பரவுவதோடு இல்லாமல், வெளிநாட்டில் இருந்து நன்கொடைகள் வரத் தொடங்கியது.

'என்னைத் தேடி பிரச்னைகளோடு கண்ணீர் சிந்தி வருபவர்களின் கண்ணீரைத் துடைக்கிறேன். என் மடியில் விழுந்து அழுபவர்களை, ஒரு தாயாக அணைத்து ஆறுதல் கூறுகிறேன்' என்றார்.

பக்தர்களை அரவணைக்கும் போது ஒரு தாய், மகன்/மகளுக்கு ஆறுதல் கூறுவதுபோல் அவர்களுக்கு இருக்கும். அதனாலேயே இவரைத் தேடி பலர் வரத் தொடங்கினர். அமிர்தானந்தமயி தனது முப்பது ஆண்டு ஆன்மிக வாழ்க்கையில் மூன்று கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாக பேசி ஆறுதல் கூறியிருப்பார் என்று அவரது அறக்கட்டளை யைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள்.

ஒருமுறை, 'உங்களால் எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியுமா?' என்று கேள்வி கேட்டபோது, அதற்கு அவர் 'என்னால் நூறு சதவிகிதம் அவர்களின் பிரச்னையை தீர்க்க முடியாது. அப்படி உலகத்தில் உள்ள அத்தனை பிரச்னைகளையும் தீர்க்க நினைப்பது நாய் வாலை நிமிர்த்துவதற்கு சமம்' என்றார்.

'ஒவ்வொரு தனிமனித சிந்தனையே சமுதாயத்தின் மாற்றங்கள். உங்களால் சமுதாயத்தை மாற்ற முடியாது. ஆனால், சமுதாயத்தில் மாற்றத்தை உருவாக்க முடியும். ஒவ்வொரு தனி மனித எண்ணங் களை தொடும்போது இந்த உலகத்தை தொடுவதுபோல் இருக்கும்.'

மாதா அமிர்தானந்தமயி ஓய்வில்லாமல் தனது பக்தர்களை சந்தித்து அவர்களுக்கு உபதேசம் செய்வதும், ஆறுதல் கூறுவதுமாக இருந்தார். ஒரு கட்டத்தில் ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் வரை பக்தர்களை சந்திக்கும்படியாக இருந்தது.

மாதா அமிர்தானந்தமயி பிரசங்கத்தில் பெரும்பாலும் பகவத் கீதையை மேற்கொள் காட்டி பேசுவார். தியானத்தின் மூலம் ஒருவர் தன்னுடைய ஆன்மாவை கட்டுப்படுத்த முடியும் என்பார். இறைவனைப் பற்றி பல மொழிகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பஜனை பாடல்களை பாடியிருக்கிறார்.

பஜனை பாடல்கள் பாடுவதில் மூலம் பாடுபவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் நன்மை உண்டாகிறது. மக்கள் ஒரு இடத்தில் சிந்தனையை வைப்பதற்கு பஜனை பாடல்கள் உதவும் என்பார்.

1985-ல் ஸ்ரீனி பட்டதனம் என்ற பகுத்தறிவாளர், 'Matha Amritanandamayi: Sacred Stories and Realities' என்ற தலைப்பில் மாதா அமிர்தானந்தமயி ஆசிரமத்தில் நடக்கும் மர்மங்களைப் பற்றி எழுதியிருந்தார். முதல்முதலாக அமிர்தானந்தமயி மீது ஏற்பட்ட சர்ச்சை இது தான். ஆசிரமத்தில் நடக்கும் மர்மங்கள், மரணங்கள் குறித்து போலீஸ் விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

குறிப்பாக, அமிர்தானந்தமயியை சுற்றிருப்பவர்கள் மர்மமான முறையில் இறப்பது குறித்து மிகுந்த சர்ச்சை எழுப்பப்பட்டது.

ஆகஸ்ட் 9, 2002, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சொந்தமான 'தேச அபிமானி' பத்திரிகை, ஆசிரமத்தில் நடக்கும் மர்மமான மரணங் களைப் பற்றி எழுதியிருந்தனர். அதில், அமிர்தானந்தமயியின் சகோதரர் சுபாங்கனின் மரணம், சொந்தக்காரர் பிரதீப் குமாரின் மரணம், ஆசிரமத்தில் ஈடுபாடுள்ள வெள்ளப்பிள்ளலில் நாராயண குட்டி, ரும்தூர் போன்றவர்களின் மரணங்கள் சந்தேகமுள்ளதாக எழுதியிருந்தனர். மும்பையில் இருந்து வந்த ராம்நாத் ஐயர் வில்லக்கவில் இருக்கும் அமிர்தானந்தாமயி ஆசிரம கட்டடத்தின் பன்னிரண்டாவது மாடியில் இருந்து விழுந்து தற்கொலை செய்துகொண்டார். இது மேலும் சர்ச்சையை எழுப்பியது.

ஆனால், செப்டம்பர் 24, 2002 அன்று தாங்கள் வெளியிட்ட செய்திக்கு மன்னிப்பு கேட்டு செய்தி வெளியிட்டனர். முந்தைய செய்தியில் இறந்ததாக குறிப்பிட்டவர்களின் உறவினர்கள் தேச அபிமானி குறிப்பிட்டதுபோல் இறக்கவில்லை என்று கூறினர். இன்னும் சிலர் இறந்தவர்கள் ஆசிரமத்தில் இறக்கவில்லை என்று மறுத்தனர். அதனால், தவறான தகவல் வெளியிட்டதற்கு வருத்தம் தெரிவித்தனர்.

ஆனால், பிரச்னை இத்தோடு முடியவில்லை. மத நல்லிலக்கணத்தை பாதிக்கும் படியாகவும், அவர்கள் உணர்வுகளை காயப்படுத்தியதற் காகவும் ஸ்ரீனி பட்டதனம் மீதும், தேச அபிமானி நாளிதழ் மீதும், அச்சகத்தின் மீதும் கேரள அரசு வழக்குப் பதிவு செய்தனர். மாதா அமிர்தானந்தமயியின் புகழை சீர்க் குலைப்பதற்காக இவர்கள் முயற்சிக்கிறார்கள் என்று இன்னொரு வழக்கும் பதிவானது.

சர்ச்சைகளும், விமரிசனங்களும் சாமியார்களுக்கு புதிதில்லை. அவர்களுக்கும் இது பழகிவிட்டது. பத்திரிகையாளர் கேள்விகளுக்கு ஏதாவது ஒரு பதில் அல்லது தங்களுடைய கருத்தை எப்படியாவது பத்திரிகைகளில் வரவைத்து விடுகின்றனர்.

ஆனால், கொலை முயற்சி என்பதை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. மக்களின் அன்பும், பாசத்திற்குரிய சாமியார் மீது கொலை செய்ய நினைக்கிறார்கள் என்றால், அவர் மீது குரோதம் வரும்படி அவர்கள் என்ன செய்தார் என்ற கேள்விதான் எழுகிறது. பணத்தையும் தாண்டி அவர்கள் மீது வஞ்சம் கொண்டவர்கள்தான் அப்படி சாமியார்கள் மீது வெளிப்படையாக கொலைத் தாக்குதல் நடத்த முடியும். தனது உயிரைப் பற்றி கவலைப்படாமல் சாமியார்களின் பாதுகாப்பையும் தாண்டி தங்களால் கொலை செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவர்களது அறிவை மறைக்கிறது.

அப்படிப்பட்ட இரண்டு கொலை முயற்சி தாக்குதல் மாதா அமிர்தானந்தமயி மீது நடந்திருக்கிறது.

பவித்திரன், ஆர்.எஸ்.எஸ். அபிமானி. முப்பத்தியெட்டு வயது இருக்கும். அன்று, மாதா அமிர்தானந்தமயி வழக்கம்போல் காலையில் வில்லக்கவு ஆசிரமத்தில் தனது சீடர்களுடன் பஜனை செய்துகொண்டு இருந்தார். கிட்டத்தட்ட பதினெட்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடியிருந்தனர். அப்போது, பவித்திரன் பஜனை பாடல் பாடிக் கொண்டே கத்தியுடன் மாதா அமிர்தானந்தமயியை நோக்கி சென்றான்.

அப்போது, கத்தியால் மாதாவை கொலை செய்ய முயன்றபோது அங்கு இருந்த பக்தர்கள் அவனைப் பிடித்து தடுத்தனர். அதில், ஒருவருக்கு பலத்த காயமும், மூன்று பேருக்கு லேசான காயமும் ஏற்பட்டது. பவித்திரனை பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்த னர். மாதா அமிர்தானந்தமயி எதைப் பற்றியும் கவலைப்படாமல் எப்போதும்போல தனது பஜனை ஆராதனையைத் தொடர்ந்தார்.

பவித்திரனின் பெற்றோர்கள், அவன் மனநலம் பாதிக்கப்பட்டவன் என்று கூறினர். காவல்துறையினர் இந்த தாக்குதலுக்கு மத நோக்கமில்லை என்று கூறினார். ஆனால், எதற்காக மாதாவை கொலை செய்ய நினைத்தார் என்ற விவரத்தை விசாரணை செய்கிறோம் என்றனர்.

மாதா அமிர்தானந்தமயி தன்னை தாக்க வந்தவனை மன்னித்து விட்டதாகக் கூறினார். இதனால், பக்தர்களை சந்திப்பதை தான் நிறுத்திக்கொள்ளப்போவதில்லை என்றும் கூறினார்.

ஆகஸ்ட் 1, 2012-ல் மாதா அமிர்தானந்தமயி தனது ஆசிரமத்தில் சொற்பொழிவாற்றும்போது பிகாரை சேர்ந்த சத்னம் சிங் மான் என்பவன் நிகழ்ச்சி இடையில் குறுக்கிட்டு தடுத்தான். அங்கு இருக்கும் பாதுகாவலர்கள், பக்தர்கள் அவனைப் பிடித்து காவல் நிலையத்தில்

ஒப்படைத்தனர். நீதிபதி முன் நிறுத்தப்பட்ட சிங் மானை, போலீஸ் பாதுகாவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். அன்றைய தினம் போலீஸ் சம் ஜெயிலில் காவலர்கள் பயங்கர கொடுமைக்கு ஆளானான். ஒரு கட்டத்தில் பேச்சு மூச்சு இல்லாமல் மயங்கி விழுந்தான்.

காவலர்கள் அவனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், சிகிச்சை பலனின்றி இறந்தான். போலீஸ் பாதுகாப்பில் இருந்த ஒரு கைதி இறந்தாலே பெரிய செய்தியாக வெளியிடுவார்கள். அதுவும், மாதா அமிர்தானந்தமயி போன்ற முக்கிய நபர் நிகழ்ச்சியில் இடையூறு ஏற்படுத்தியவன் இறந்தான் என்றால் தலைப்பு செய்தியாகத்தான் வெளியிடுவார்கள். அப்படித்தான் ஊடகம் இந்த செய்தியை அணுகியது.

இந்தக் கொலையில் சம்பந்தபட்டதாக இரண்டு காவலர்களைக் கைது செய்தனர்.

சத்னம் சிங் மானின் தந்தை தன் மகனின் கொலையை சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அது மட்டுமில்லாமல், அவன் இரண்டு வருடங்களாக மனநலம் பாதிக்கப்பட்டவனாக இருந்தான் என்பதை கூறினார்.

முந்தைய கொலை முயற்சி தாக்குதலைவிட இந்த சமபவம் அதிக சர்ச்சையை கிளப்பியது. அது எப்படி மாதா அமிர்தானந்தமயி மீது தாக்குதல் நடத்துபவர் மட்டும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்ற கேள்வி இரண்டு சம்பவத்திலும் பலர் எழுப்பி னர். ஆனால், பிகார் இளைஞன் மரணத்திற்கு மாதா அமிர்தானந்தமயி ஆசிரமம் சார்பில் யாரும் எந்த கருத்தும் கூறவில்லை.

**அம்மா அமிர்தானந்தமயி கீழ் இயங்கும் நிறுவனங்கள்**

மாதா அமிர்தானந்தா மடம்
AIMS மருத்துவமனை
அம்ருதா விஷ்வாபீடம் பல்கலைக்கழகம்

# 6


## பங்காரு அடிகள்

'மேல்மருவத்தூருல இவ்வளவு விலையா...! ஒரு காலத்துல அங்க கோயில் மட்டும்தான் இருந்துச்சு. இப்போ என்னடான்னா அங்க ஒரு கிரவுண்ட் விலையப் பார்த்தா வாங்குற மாதிரியா இருக்கு...?'

'பையன மேல்மருவத்தூர் காலேஜ்ல சேர்த்துருக்கிறேன். தினமும் காலையில டிரெயின்ல போய்ட்டு வந்திடுறான். சென்னையில இருந்து இரண்டு மணி நேரம் தான் ஆகுது.'

'புதுசா ஒரு கடை திறக்கலாம் இருக்கேன். மேல்மருவத்தூர் பஸ் ஸ்டாண்ட் பக்கத்துல திறந்தா நல்லா போகும்.'

ஒரு காலத்தில், மேல்மருவத்தூர் கோயிலைத் தவிர பெரிதாக அங்கு சொல்ல எதுவுமில்லை. ஆனால், அந்த கோயிலுக்கு வரும் பக்தர்களை வைத்து அதை சுற்றி இருக்கும் இடம் பெரிதாக



வளர்ந்தது. மருத்துவமனை, பொறியியல் கல்லூரி, ரயில் நிலையம், காய்கறிச் சந்தை என்று கோயிலை பிரதானமாகக் கொண்டு மேல்மருவத்தூர் வளர்ச்சி அடைந்துவருகிறது. பேருந்து நிலையம், அழகான சாலைகள், கடைகள் என்று அந்த நகரம் இருபது வருடங்களில் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்திருக்கிறது.

சென்னையில் இருந்து 92 கிலோ மீட்டர் தூரமா என்று சொன்னவர்கள், இன்று சென்னையில் இருந்து இரண்டு மணி நேரம்தான் என்று சொல்லும் அளவிற்கு வந்திருக்கிறது.

இந்த வளர்ச்சிக்கெல்லாம் சொந்தக்காரர் மேல்மருவத்தூர் ‘அம்மா’ என்று அழைக்கப்படும் பங்காரு அடிகள். மேல்மருவத்தூர் என்றால் இவர்தான். இவர்தான் மேல்மருவத்தூர் என்று சொல்லும் அளவிற்கு இவருடைய வளர்ச்சி இருந்திருக்கிறது. எல்லாம் பக்தி கொடுத்த பணம்.

மார்ச் 3, 1941 அன்று பங்காரு அடிகள் மேல்மருவத்தூர் அருகில் இருக்கும் ஒரு கிராமத்தில் கோபால நாயக்கருக்கும், மீனாட்சி அம்மையாருக்கும் மூத்த மகனாகப் பிறந்தார்.

பங்காரு அடிகள் சிறுவயதில் இருந்தே அம்மன் மீது அதிக ஈடுபாடு உடையவர். ஆதிபராசக்தி பாடல்களைப் பாடும்போது அவரின் குரலில் தெய்வீகத் தன்மை தெரியும். சிறு வயதில் இவர் பாடும்போது கடவுள் நேரில் கண் முன் தோன்றுவதுபோல் இருக்கும். யாருக்காவது அம்மை போட்டால், அம்மன் பாடல்களை பாடச் சொல்லி இவரை அழைப்பார்கள். இவர் பாடிய பிறகு அம்மையும் குறைந்துவிடுமாம்.

ஒரு நாள் பங்காரு அடிகள் தூங்கும் போது, அவர் மீது நாகப்பாம்பு மேலே ஏறியிருந்தது. இதை பார்த்த அவரின் பெற்றோர்கள், ‘கடவுளே! என் மகனை காப்பாற்று’ என்று கதறினர். பங்காரு அடிகள் பயப்படவில்லை.

இன்றும், அந்த இடம் மிகவும் பிரசித்தி பெற்ற இடமாக வணங்கப் படுகிறது. பங்காரு அடிகளின் வீட்டுக்கு முன் இருக்கும் அந்த இடத்தில் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு வழிபாடுகள் செய்யப்படு கிறது. இந்த இடத்தில்தான் அடிகளாரின் தந்தையிடம் ஆதிபராசக்தி, ‘மகனே! நான் உன் குழந்தையின் உடலுக்குள் அவதரித்து மக்களுக்கு அருள் வாக்கு செய்யப்போகிறேன்’ என்றாராம்.

அன்றில் இருந்து, அடிகளாரின் தந்தை ‘இவர் தன் மகனல்ல, ஆதிபராசக்தியின் மகனாகப் பிறந்திருக்கிறார்’ என்று நினைத்தார்.

பங்காரு அடிகள் குழந்தையாக இருக்கும் போது அவரது சகோதரி அம்மையில் இறந்துவிட்டார். மாலை பள்ளியில் இருந்து வீடு திரும்பும்போது தன் சகோதரியின் சமாதிக்கு சென்று வருவார். ஒருமுறை தன் சகோதரி சமாதி செல்லும்போது அதிக கடலை சாப்பிட்டுக்கொண்டே சென்றார். அப்போது, கொளுத்திய வெயிலில் அவருக்கு அதிகம் தாகம் எடுத்து. நாக்கு வரண்டு போயிருந்தது.

குடிக்க தண்ணீருக்காக தவித்தபோது, ஒரு பாட்டி பங்காரு அடிகளுக்கு தண்ணீர் கொடுத்து உதவினார். குடித்த பிறகு பங்காரு அடிகள் திரும்பிப் பார்க்கும்போது அந்த பாட்டி அங்கு இல்லை. ஆதிபராசக்தியே பாட்டி உருவத்தில் வந்து பங்காரு அடிகளுக்கு தண்ணீர் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

மேலே கூறப்படும் சம்பவங்கள் விஞ்ஞான அறிவால் நம்ப முடியாததுதான். ஆனால், அவரைத் தேடி வரும் பக்தர்கள் நம்புகிறார் கள். அவரின் அருள் வாக்கு அத்தனை மதிப்பு இருக்கிறது என்று தேடி வருகிறார்கள்.

பங்காரு அடிகள் தனது ஆரம்பக் கல்வியை சோத்துப்பாக்கத்திலும், உயர்நிலைக் கல்வியை அச்சரப்பாக்கத்திலும் படித்தார். பின்பு, செங்கல்பட்டில் இருக்கும் அரசு ஆசிரியர் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். பயிற்சி முடித்த பிறகு அச்சரப்பாக்கம் பள்ளியில் ஆசிரிய ராகச் சேர்ந்தார்.

கோயிலின் கருவறைக்குள் எவருமே நுழையக் கூடாது என்ற துருப்பிடித்த மரபுச் சங்கிலியை உடைத்தெறிந்து 'அம்மனுக்கு பெண்கள் உட்பட சகலருமே பூஜை செய்யலாம்' என்று கதவு திறந்த முதல் ஆலயம் இதுதான். ஆன்மிகம் என்றால் பிராமணர்கள் என்று இருந்த காலத்தில், பங்காரு அடிகள் வித்தியாசமாக இருந்தார். சங்கராச்சாரியார் போன்றவர்களை பக்தர்கள் நெருங்க முடியாத நிலையில் இருந்த போது, தன்னைத் தேடி வரும் பக்தர்கள் அனைவருக்கும் அருள்வாக்கு வழங்கினார்.

அன்றைய தேதியில் பிராமணர் அல்லாத சாமியார் என்றால் இவர் மட்டும்தான். அதனால்தான் நடுத்தரக் குடும்பத்தினர் பலர் இவரது பக்தர்களாக மேல்மருவத்தூருக்கு படையெடுத்தனர். கடவுளோடு பேச உங்களுக்கு மட்டும்தான் ஆள் இருக்கிறாரா, இதோ எங்களுக்காக கடவுளிடம் உரையாட ஒருவர் இருக்கிறார் என்று பங்காரு அடிகளை பெருமையாக கூறிக்கொண்டனர். நாளாக நாளாக, பிராமணரல்லாத பணக்கார செல்வந்தர்களும் இவரது பக்தர்களாக உருவாகினர்.

தனது பக்தர் மூலம் வந்த பணத்தை 'ஆதிபராசக்தி' என்ற பெயரில் மேல்மருவத்தூரில் மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தையே உருவாக்கினார்.

ஊடகங்கள், இணையதளம் வளர்ச்சி அடையாத காலகட்டத்தில் வாய்மொழியாக இவரது புகழ் பரவப்பட்டு, இவரின் அருள்வாக்கு பெற மக்கள் அலையாக திரண்டனர்.

தனது மதக் கொள்கையைப் பரப்ப உலகம் முழுக்க பயணம் செய்வதில்லை. அதற்கு மாறாக ஆதி பராசக்தி சித்தர் பீடத்திற்கு பல லட்சம் பேரை வர வைப்பார். இவர் ஆசிரமோ, குருகுலமோ நடத்தவில்லை. ஆனால், தனது தொண்டு நிறுவனத்தின் மூலம் பல ஏழை மாணவர்களுக்கு பள்ளி, கல்லூரி படிப்புக்கு உதவியிருக்கிறார். ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவம் பார்க்கிறார். தன்னைத் தேடி வரும் பக்தர்களுக்கு இவர் கீதையையோ, குரானையோ, பைபிளையோ சொல்வதில்லை. இவரே ஒரு மிகப்பெரிய வேதப் புத்தகமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்.

பங்காரு அடிகளைப் பற்றி அவரது இணையத்தில் இப்படித்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். உண்மையில், நாடு நாடாகச் சென்று சொற்பொழிவாற்றி, பெரிய நிறுவனங்களுடன் கைகோர்த்து தொழில் செய்யும் கார்ப்பரேட் சாமியார்களைக் காட்டிலும், பங்காரு அடிகள் கொஞ்சம் வித்தியாசமானவர்.

'சாமியார்' என்றால் பிரம்மச்சாரியாகத்தான் இருக்க வேண்டும் என்ற மரபை மீறி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு வருபவர். செப்டம்பர் 4, 1968-ல் லட்சுமி என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவருக்கு அன்பழகன், செந்தில்குமார் என்ற இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் இருக்கிறார்கள்.

குடும்ப வாழ்க்கையில் வெற்றிகரமாக வாழ்ந்து, ஆன்மிகத்திலும் ஈடுபட்டு வரும் ஒரே சாமியார் இவர்தான். அதுவே இவருக்கு எதிரான பல விமரிசனங்களையும் எழுப்பி இருக்கிறது.

ஜனவரி 26, 2001-ல் நடந்த குஜராத் புகம்பம் சம்பவம் இந்தியாவையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஒன்று. குஜராத்தில் அம்பானி என்று சொல்லிக்கொண்டவர்கள் எல்லாம் அம்போவென்று தெருவில் வந்த நேரம். அந்த சமயத்தில் பங்காரு அடிகள் குஜராத் பூகம்ப பாதிப்பிற்கு ரூ.25 லட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்குகிறார்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு 1008 மூட்டை அரிசி, ஐந்தரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள மருந்துப் பொருட்கள், உடைகள் மற்றும்

வீடற்றவர்களுக்கு தாற்காலிக கூடாரம் அமைக்கத் தேவையான உபகரணங்களுடன் 504 செவ்வாடைத் தொண்டர்கள் செல்வதாகத் அறிவித்தார்.

அதில், பூகம்பம் பாதித்த பகுதிக்கு 204 செவ்வாடைத் தொண்டர்கள் ரத்த தானம் செய்வதற்காக செல்வதாகவும் அவர் கூறினார்.

மக்கள் கொடுத்த பணத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கிறார் என்ற ஹீரோ இமேஜ் பங்காரு அடிகளுக்கு இருந்தது.

ஒரு சில சினிமா கலைஞர்கள் மேல்மருவத்தூர் ஆதிபாரசக்தியை மையமாக வைத்து படங்கள் எடுத்து மேல்மருவத்தூர் கோயிலை இன்னும் பிரபலமாக்கினர்.

ஜூலை 2, 2010 அன்று பங்காரு அடிகளுக்கு மட்டுமல்ல அந்த மேல்மருவத்தூரில் வாழும் மக்களுக்கே பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கும். ஒரு குண்டு மணி தங்கம் கூட வாங்க முடியாமல் இருக்கும் நடுத்தர வர்க்கத்தினர், இத்தனை கோடி ரூபாய் தங்கத்தின் மதிப்பு அருகே இருப்பது அவர்களுக்கே ஆச்சரியமாக இருந்திருக்கும்.

**தங்கப் புதையல்**

பங்காரு அடிகளார் வீட்டில், கல்லூரியில் வருமான வரித் துறையினர் திடீர் சோதனை நடத்தினர். பெரிய பெரிய தொழில் அதிபர்கள் வீட்டில் கூட அவ்வளவு மதிப்புள்ள தங்கக் கட்டிகள் கிடைத்திருக் காது. பங்காரு அடிகள் வீட்டில் கிடைத்தது. 20 கிலோ, 30 கிலோ அல்ல, கிட்டத்தட்ட 102 கிலோ தங்கக் கட்டிகளை கைப்பற்றினர். ஒரு கிராமுக்கு ரூ.2800 என்று கணக்கு போட்டு, அதன் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்று நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

அவர் வீட்டிலேயே எட்டு கோடி ரூபாயையும் வருமான வரித் துறையினர் கைப்பற்றினர். மேலும், பங்காரு அடிகளின் டிரஸ்டில் 3 கோடியும், அவரது மகன் அன்பழகன் வீட்டில் 40 லட்சமும் சிக்கியது. பிறகு கல்லூரியில் சேர மாணவர்களிடம் முதலீடாக வாங்கிய பணம் 20 - 30 லட்ச ரூபாயைக் கைப்பற்றினர். அதற்கான ரசீதும் கல்லூரியில் சரியாக இல்லை.

பங்காரு அடிகள் வீட்டில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்துவதை அறிந்து படம் எடுத்த செய்தியாளர்களின் கேமிராக்களை அடித்து உடைத்தனர். பத்திரிகையாளர் சங்கம், இந்த சம்பவத்தை கண்டித்தது.

ஆனால், அவர்களால் வருமான வரிச் சோதனை செய்தியை வெளியே வர முடியாமல் தடுக்க முடியவில்லை.

மேல்மருவத்தூரில் 'ஆதிபராசக்தி' என்ற பெயரை தங்கள் பிராண்டாக பதிவு செய்து, அதில் ஒரு பிரிவாக இயங்கி வருகிறது 'ஆதிபராசக்தி பல் மருத்துவக் கல்லூரி'. அதை நிறுவியத் தலைவராக பங்காரு அடிகளும், அவரது மனைவி லஷ்மி பங்காரு அடிகள் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் கொண்டு இயங்கி வருகிறது. இந்தக் கல்லூரியின் நிர்வாக இயக்குனராக பங்காரு அடிகளாரின் இரண்டாவது மகன் செந்திலின் மனைவி ஸ்ரீலேகா செயல்பட்டு வருகிறார்.

2012-ம் ஆண்டு எம்டிஎஸ் மேற்படிப்புக்கான அனுமதி பெறுவதற்காக இந்திய பல் மருத்துவக் கழகத்திடம் ஆதிபராசக்தி பல் மருத்துவக் கல்லூரி நிர்வாகம் விண்ணப்பித்திருந்தது. விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு கல்லூரியை ஆய்வு செய்தனர்.

அக்டோபர் 2012-ல் நடத்திய ஆய்வில் கல்லூரியில் அடிப்படை வசதிகள், ஆய்வகங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இல்லை என்று கூறினர். இதையெல்லாம் மேற்கோள்காட்டி ஆதிபராசக்தி பல் மருத்துவக் கல்லூரியின் விண்ணப்பத்தை இந்திய பல் மருத்துவக் கழகம் நிராகரித்தது.

டிசம்பர் 28-ம் தேதி கூடிய கல்லூரியின் நிர்வாகக் குழு, இந்திய பல் மருத்துவக் கழகத்தின் உறுப்பினர் ராயப்பேட்டையைச் சேர்ந்த பல் மருத்துவரான டாக்டர் எஸ்.முருகேசன் என்பவருக்கு லஞ்சம் கொடுத்து அனுமதி பெற முடிவு செய்தனர்.

டாக்டர் முருகேசனை தொடர்புகொண்டு விண்ணப்பம் விஷயமாக பேசினர். அவர் இரண்டு கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்தால் அனுமதி வழங்குவதாக கூறினார். இறுதியில் பேரம் பேசி ஒரு கோடி ரூபாய்க்கு முடிவு செய்தனர்.

இதையடுத்து கல்லூரி நிர்வாகத்தினர் முதல் கட்டமாக லஞ்சத் தொகை யாக ரூ.25 லட்சத்தை கொடுப்பதற்காக ராயப்பேட்டை லாயிட்ஸ் சாலையில் உள்ள முருகேசனின் மருத்துவமனைக்குச் சென்றனர்.

கல்லூரி நிர்வாகத்தினர் லஞ்சப் பணத்தை முருகேசனிடம் கொடுக்கும்போது, அங்கு ஏற்கெனவே மறைந்திருந்த சி.பி.ஐ. ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் இரு தரப்பையும் சேர்ந்த 4 பேரான டாக்டர் முருகேசன், கல்லூரி நிர்வாக அதிகாரி ராமபத்ரன்,

ஆதிபராசக்தி கல்வி அறக்கட்டளை உறுப்பினர் கருணாநிதி, தரகராகச் செயல்பட்ட முன்னாள் எம்.எல்.ஏ. டி.பழனி ஆகியோரை கைது செய்தனர்.

மேலும் கல்லூரியின் நிர்வாக இயக்குநர் ஸ்ரீலேகா (முன்னாள் ஐஜி மகள்) மீது சி.பி.ஐ. அதிகாரிகள் 6 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தனர். சி.பி.ஐ. இவரை கைது செய்யும் முன் தலைமறைவாகி விட்டார்.

கடவுளின் பெயரில் நடத்தும் கல்லூரிக்கு ஒரு கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்து அனுமதி பெறுவதில் பங்காரு அடிகளின் கல்வி நிறுவனத்தினர் வியாபாரியாக தெரிகின்றரே தவிர, ஆன்மிகவாதியாக அல்லது மக்கள் தொண்டு நிறுவனமாக செயல்படவில்லை என்பது நிரூபணமாகிறது.

செல்வம் ஒருவனின் மதிப்பைக் குறைத்து நம்பகத்தன்மையில்லாத வனாக ஆக்கும். தலைகனமும், அவநம்பிக்கை மட்டுமே செல்வத் தால் உருவாக்கக்கூடியவை என்று பங்காரு அடிகள் கூறியிருக்கிறார். ஆனால், அது அவர்களின் குடும்பத்திற்கு தெரியுமா என்பதுதான் தெரியவில்லை.

சமீபத்தில் தனது 72-வது பிறந்தநாளில் 100 கோடி ரூபாயை நலத்திட்டங்களுக்காக மட்டுமே செலவிட்டிருக்கிறார். நலத்திட்டத் திற்கே இவ்வளவு தொகை என்றால் அடிகளாரின் சொத்துமதிப்பு எவ்வளவு இருக்கும் என்று பலர் கேள்வியை எழுப்பினர்.

'ஓம் சக்தி மேடையின் முன் நின்று அன்னையை வணங்க வேண்டும். அங்குள்ள உண்டியலில் முடிந்த அளவு காணிக்கையிட வேண்டும். (இதனால் நவகிரக தோசங்கள் நீங்கும்.) ஆலயத்திலிருந்து பிரசாதம் வாங்கி சென்று குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் மற்றும் அக்கம்பக்கத்து வீட்டார்களுக்கும் கொடுக்க வேண்டும்.'

அவர்களின் அதிகாரப்பூர்வமான பேஸ்புக் பக்கத்தில் ஆலய வழிபாடு என்று பத்து விதிமுறைகள் இருக்கிறது. அதில், எட்டு விதிமுறைகள் தனிமனித ஒழுக்கம் தொடர்புடையது. ஆனால், மீதி இரண்டு விதி முறைகளால் யாருக்கு பயன் என்பதை பாருங்கள்.

அருள்வாக்கு சொல்வதில் ஆரம்பித்தவர் இன்று ஒரு ஊரையே சொந்தமாக்கி இருக்கிறார். மக்களுக்கு புத்தி வந்து தெளிவு

பெற்றாலும் அவர்கள் கொடுத்த நன்கொடையை திரும்ப பெற முடியாது என்ற எதார்த்த உண்மையிருப்பதால், குறைந்தபட்சம் அடுத்த மூன்று தலைமுறைகளுக்கு இவர்கள் பணக்காரர்களாகத்தான் இருப்பார்கள் என்று மக்கள் அருள்வாக்கு கூறுகிறார்கள்.

**இவருக்கு கீழ் இயங்கும் அமைப்புகள்**

ஆதிபராசக்தி அறக்கட்டளை
ஆதிபராசக்தி மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவமனை
ஆதிபராசக்தி பொறியியல் கல்லூரி

# 7

## ஜெயேந்திர சரஸ்வதி

*நவம்பர் 27, 2013*

அனைத்து இந்து மத அமைப்புகளும் இறைவனிடம் வேண்டிக்கொண்டு இருப்பார்கள். பகுத்தறிவாளர்கள் என்ன தீர்ப்பு வந்தாலும் அதற்கான கட்டுரையை தயார் செய்ய வேண்டும் என்று கவனித்துக் கொண்டு இருந்தார்கள். ஒரு சிலர் இப்படித்தான் தீர்ப்பு வரும் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள்.

நீதிமன்றம் வழங்கப்போகும் தீர்ப்புக்காக தமிழ்நாடே எதிர்பார்த்துக்கொண்டு இருந்து. அது சங்கரராமன் கொலை வழக்கு.

2004-ல் யாரும் எதிர்பார்க்காத ஒன்று. காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டபோது அந்த பகுதியை தவிர மற்றவர்களுக்கு பெரிய



செய்தியாக இருந்திருக்காது. ஆனால், கொலை செய்ய தூண்டி விட்டதாக சொல்லப்படும் நபர் கைது செய்யப்பட்டபோது தமிழ்நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

11.11.2004 அன்று ஆந்திராவில் ஜெயேந்திரர் சரஸ்வதியும், விஜயேந்திர சரஸ்வதியும் இந்த கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார்கள். ஜெயேந்திரர் 61 நாட்களும், விஜயேந்திரர் 31 நாட்களும் சிறையில் இருந்தனர். மேலும் இந்த வழக்கில் 23 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு தமிழ்நாட்டில் நடைபெறக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் சங்கராச்சாரியாரால் விண்ணப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் உச்ச நீதிமன்ற ஆணைப்படி புதுச்சேரி மாநிலத்திற்கு வழக்கு மாற்றப்பட்டு நடைபெற்று வந்தது.

வழக்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கும்போது 2011-ல் ஜெயேந்திரரின் உதவியாளர் ஒருவர் நீதிபதியுடன் பேரம் பேசியதாக ஒரு சிடி வெளிவந்து சர்ச்சையை கிளம்பியது. அதில், ஜெயேந்திர சரஸ்வதி விடுதலை செய்யப்பட வேண்டும் போன்ற உரையாடல்கள் பதிவானதாகக் கூறப்பட்டது. ஆனால், இது வரை அந்த உரையாடல் நீதிமன்றத்திலோ, ஊடகத்தின் முன்போ வரவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலை சங்கரராமன் கொலை வழக்கைப் பற்றி பலர் பல விதமான கருத்துக்கள் கூறிவந்தனர். வழக்கு நடந்த காலகட்டத்தில் சாட்சிகள் பலர் முன்னுக்கு பின் முரணாக பேசினர். மொத்தம் 81 சாட்சிகளும் அப்படி இருந்ததுதான் வியப்பான ஒன்று.

எப்படி 81 சாட்சிகளுமே மாறினார்கள் என்பதற்கு காரணமில்லை. காவல்துறை எந்த இடத்தில் கோட்டை விட்டது என்று பதிலில்லை. வழக்கில் குற்றவாளி என்று கருதப்பட்ட 26 பேர்களுமே குற்றவாளிகள் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டனர்.

வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருமே விடுதலை செய்யப்பட்டனர். அப்படியென்றால் சங்கரராமன் எப்படி இறந்தார் என்ற கேள்விக்கு காவல்துறை மீண்டும் ஆரம்பத்தில் இருந்துதான் விசாரணையை தொடங்க வேண்டும்.

2004-ல் சங்கராமன் கொலை தொடங்கப்பட்டதும் பல வழக்குகள் பூதமாக கிளம்பத் தொடங்கின.

2002-ல் ஜெயேந்திர சரஸ்வதி மீது தொடரப்பட்டுள்ள ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்குதல் வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

இவர் காஞ்சி காமாட்சி கோயிலுக்கு சொந்தமான தங்கம் தொலைந்ததைப் பற்றி கேள்வி கேட்டிருந்தார். தன்னை கொலை செய்த முயற்சித்ததாக காவல்துறையினரிடம் ஒரு புகார் கொடுத்திருந்தார்.

எழுத்தாளர் அனுராதா ரமணன், ஜெயேந்திரர் தன்னிடம் ஆபாசமாக பேசியதாகக் கூறியதாக அவுட்லுக்கில் ஒரு கட்டுரை வந்தது. இவரது சிஷ்யர் விஜயேந்திரருக்கு நடிகை சொர்ணமால்யாவுடன் தொடர்பு இருப்பதாக இன்னொரு சர்ச்சை கிளம்பியது.

இந்த வழக்கு தொடங்கப்பட்ட பிறகு காஞ்சி காமகோடி பீடத்தின் பெருமை சரிவை சந்திக்க தொடங்கியது என்பதை மறுக்க முடியாது. தமிழ்நாட்டில் ஆன்மிக சக்தி என்பதை விட மறைமுகமான அரசியல் சக்தியாக இருந்தவர்களை மக்கள் வெறுக்கத் தொடங்கினர்.

**காஞ்சி காமகோடி பீடம்**

ஆதிசங்கரரால் கி.மு.482-ம் ஆண்டு தொடங்கப்பட்ட மடம். மடத்தின் தலைவர் 'சங்கராச்சாரியார்' என்ற பெயரால் கௌரவிக்கப்படுவார்கள். ஆதிசங்கரர் தொடங்கி விஜயேந்திர சரஸ்வதி வரை மொத்தம் 70 சங்கராச்சாரியார்கள், காஞ்சி காமகோடி பீடத்தின் மடாதிபதிகளாக இருந்திருக்கிறார்கள்.

காஞ்சி காமகோடி பீடத்தை ஆதிசங்கர் நிறுவியதாகக் கூறப்படுவது தவறான தகவல். ஆதிசங்கரர் கி.பி.8-ம் நூற்றாண்டை சேர்ந்தவர். புத்த மதம் இந்தியாவில் வளரத் தொடங்கிய காலத்தில்தான் ஆதிசங்கர் தன் திருப்பணிகளை செய்யத் தொடங்கினார். ஆனால், இதை காஞ்சி காமகோடி பீடம் மறுக்கிறது.

ஆதிசங்கரர் புத்தர் காலத்திலே வாழ்ந்தவர். ஆதிசங்கரர் தனது சீடர்களுக்காக சிருங்கேரி, பூரி, துவாரகை, பத்ரிநாத் முதலிய இடங்களில் மடங்களை நிறுவிய பிற்பாடு தனக்கென்று ஒரு மடம் நிறுவுவதற்காக காஞ்சியை தேர்வு செய்தார். அவர் இமயமலையில் இருக்கும் கேந்திரநாத்தில் மோட்சமடையவில்லை, காஞ்சியில்தான் மோட்சம் அடைந்தார். ஆகையால் காஞ்சி மடம் மற்ற மடங்களைவிட உயர்ந்த மடம் என்று இவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால், இதை வரலாற்று ஆசிரியர்களும், மற்ற மடாதிபதிகளும் திடமாக மறுத்தனர்.

காஞ்சி காமகோடி பீடத்தின் தோற்றம், சர்ச்சையில்தான் தொடங்குகிறது. ஆனால், காஞ்சி மடத்தில் இருப்பவர்கள் தங்கள்

மடத்தில் இருந்த அத்தனை ஆச்சாரியர்களின் பெயர்களையும், வாழ்ந்த காலத்தையும் பதிவு செய்து கூறுகிறார்கள். இந்து மரபின் ஞானமும் கர்மமும் கலந்த இடமாக காஞ்சி பீடத்தை கருத்துகிறார்கள்.

சர்ச்சைகளும், செல்வாக்கும் கொண்ட காஞ்சி காமகோடி பீடத்தில் 69-வது ஆச்சாரியராக ஜெயேந்திர சரஸ்வதி தேர்வு செய்யப்பட்டார்.

ஜெயேந்திர சரஸ்வதியின் இயற்பெயர் சுப்ரமணியன். இவரது தந்தை ரயில்வேயில் எழுத்தராகப் பணிபுரிந்தவர். தன் மகனுக்கு வேதத்தில் அதிக ஈடுபாடு இருந்ததால், சங்கர மடத்தில் வேதம் படிக்க 68-வது சங்கராச்சாரியாரான சந்திரசேகரேந்திர சுவாமிகளிடம் அழைத்து சென்றார். அவரும் தன் வேத பாடசாலையில் சேர்த்துக்கொண்டார். ஆறு ஆண்டுகள் அங்கு வேதங்கள் பயின்றார்.

வேதம் கற்பதிலும், அதில் காட்டும் ஈடுபாடு, கடவுள் வழிப்படுதல் போன்ற விஷயங்களில் ஜெயேந்திரர், சந்திரசேகரேந்திர சுவாமியை கவர்ந்தார். தனக்கு அடுத்து ஆசிரமப் பொறுப்பை ஏற்றுக்கொள் வதற்கு சரியான நபர் கிடைத்துவிட்டதில் மகாப் பெரியவர் மகிழ்ந்தார்.

சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், மார்ச் 22, 1954 அன்று, ஜெயேந்திர சரஸ்வதியை காஞ்சி காமகோடி பீடத்தின் அடுத்த பீடாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்.

### காணாமல் போனார்

ஆகஸ்ட் 23, 1987 அதிகாலை. காஞ்சி காமகோடி பீடத்தில் இருப்பவர் கள் அனைவருமே பதறினர். பீடாதிபதியான ஜெயேந்திரர் சரஸ்வதி திடீரென்று காணாமல் போனார். எங்கு சென்றார். எதற்காக சென்றார். யாருக்கும் புரியவில்லை. மூத்த சங்கராச்சாரியாரிடம் சொல்ல வில்லை. சீடர்களுக்கும் தெரியவில்லை. யாரிடம் சொல்லாமல் எங்கு யாத்திரைக்கு சென்று இருப்பார் என்று குழம்பினர்.

சங்கராச்சாரியார் இல்லாத மடம் இருக்கக் கூடாது என்பதால், ஜெயேந்திரர் சரஸ்வதிக்கு அடுத்து இருக்கும் 18 வயது நிரம்பிய விஜயேந்திர சரஸ்வதி 70-வது சங்கராச்சாரியாராக நியமிக்கப்பட்டார். இன்னொரு பக்கம் ஜெயேந்திர சரஸ்வதியை தேடிக்கொண்டு இருந்தனர்.

யாத்திரைகூட சென்று இருக்க வாய்ப்பில்லை. அவரது புனித தண்ட மும், கமண்டலமும் நிராகரிக்கப்பட்டு இருந்தன. ஆச்சாரியர்கள் யாத்திரைக்கு செல்லும்போது அவரது தண்டமும், கமண்டலமும்

எப்போதும் கையில் எடுத்துச்செல்வது வழக்கம். அதை ஆஸ்ரமத்தில் வைத்துவிட்டு யாரும் யாத்திரைக்கு சென்றதில்லை. அதனால், ஜெயேந்திரரை யாராவது கடத்தியிருப்பார்களா என்ற சந்தேகம் வேறு எழுந்தது. இப்படி சம்பவம் நடந்த பிறகு ஊடகங்களில் அவரைப் பற்றிய செய்தி எல்லாம் வந்தது. குடியரசுத் தலைவராக இருந்த வெங்கட்ராமன் இந்த விஷயத்தில் நேரடியாக கவனித்தார்.

ஆனால், பயந்ததுபோல் அவரை யாரும் கடத்தவில்லை. தலைக்காவிரியில் இருப்பதாக செய்திகள் வெளியானது. அடுத்த ஒரு வாரத்தில் திரும்பி வந்தார்.

எங்கு சென்றீர்கள் என்று கேட்டபோது, ஆழ்ந்த தியானத்துக்காக மடத்தை விட்டு வெளியேறியதாகச் சொன்னார். ஆனால், தியானத்திற்காக செல்பவர் எதற்காக அவரது புனித தண்டத்தையும், கமண்டலத்தையும் விட்டுச் செல்ல வேண்டும். இந்த செயலை பூரி மற்றும் துவாரகை சங்கராச்சாரியார்கள் கண்டித்தனர்.

ஜெயேந்திரர் ஆசிரமத்தை விட்டுப்போனதைவிட தண்டத்தை காஞ்சி மடத்தில் விட்டுவிட்டு சென்றது மிகப்பெரிய சர்ச்சையை கிளப்பியது. பல பத்திரிகைகள் பலவிதமான செய்திகள் வெளியிட்டன.

'தாழ்த்தப்பட்ட ஏழை மக்களைப் புறக்கணிப்பது இந்து மதத்துக்கோ, இந்தியாவுக்கோ நல்லதல்ல என்ற உண்மையை பல ஆண்டுகளுக்கு முன்பே நான் உணர்ந்துகொண்டேன். அவர்களுடைய சிரமங்களை யாத்திரைகளின்போது கண்கூடாகப் பார்த்தேன். அவர்களை அரவணைக்க வேண்டும். இருட்டில் அவர்களை வைத்திருப்பது சரியல்ல என்று மனம் சொல்லிகொண்டேயிருந்தது...'

-இப்படி ஒரு பேட்டியை 1987-ல் ஆனந்த விகடனில் ஜெயேந்திர சரஸ்வதி கொடுக்க தொடங்கினார்.

'நான் மெட்ராஸுக்கு வந்தபோதெல்லாம், சேரிகளில் இருப்பவர்கள் என்னைத் தங்கள் பகுதியில் உள்ள கோயில்களுக்கு வருமாறு கூப்பிடுவார்கள். நான் போவேன். பரமாச்சாரியாருடன் இதுபற்றி பேசிக்கொண்டிருந்தபோது, நான் சேரிக்குப் போனேனா இல்லையா என்பது இருக்கட்டும், அங்கே கோயில் இருக்கிறது. கோயில் வழிபாடு என்று வரும்போது, எல்லோருக்கும் பொதுதான். அந்தக் கோயிலுக்குப் போகும்போது சேரி வழியாகத்தான் போக வேண்டியிருக்கிறது என்று சொன்னேன். அது மாத்திரமல்ல, பரமாச்சாரியாரிடம் இதைப்பற்றி நான் பலமுறை பேசியிருக்கிறேன்.

வெள்ளைக்காரர்கள் பலர் பரமாச்சார்யார் அருகிலே அமர்ந்து பேசுகிறார்கள். அவர்கள் எல்லாம் மாற்று மதத்தவர்கள்தானே! இவர்களுடன் நெருங்கிப் பழக முடியும் என்றால், இந்து மதத்தவர் களுடன் நெருக்கமாகப் பழகலாமே?' என்று கேட்பேன். பரமாச் சார்யார், 'நான் அவர்களை வரவேண்டாம் என்று சொல்லவில்லயே! அவர்களிடமும் விசுவாசமாகவே இருக்கிறேன்' என்று பதில் சொல்வார். உண்மையில் பரமாச்சார்யாருக்கு அரிசனங்கள் மீது நிறைய ப்ரீதி உண்டு. ஆனால், சில வழக்கங்களை சுலபத்தில் மாற்ற முடியாத நிலை.

'நம்முடைய இந்தியா; நமது கலாசாரம்' என்ற ஒருமைப்பாட்டு எண்ணம் எல்லோருக்கும் வர வேண்டும். இதற்காக, அக்டோபர் மாதம் 2-ம் தேதி, எனது சிந்தனைக்கு வடிவம் கொடுக்க இருக்கிறேன். சொல்லப் போனால், இன்னொரு விதத்தில் இது ஒரு விடுதலை இயக்கமே! வெற்று அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டை மீட்கும் இயக்கம்!' - இவ்வாறு ஜெயேந்திரர் கூறினார்.

தனது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நாடெங்கும் உத்வேகத்தை உருவாக்க விரும்பினாராம். அதற்காகவே காஞ்சி புரத்தை விட்டு திடீரென மறைந்தாக தனது பேட்டியில் கூறினார்.

'என்ன, இந்த அளவு பரபரப்பு எதிர்பார்க்கவில்லை. பெரிய ஸ்தாபனத்தில் உள்ளவர் திடீரென்று மறைந்துபோனால், காரணம் என்னவாக இருக்கும் என்று திவிரமாகச் சிந்திப்பார்கள்; சீர்தூக்கிப் பார்த்து எழுதுவார்கள் என்று நினைத்தேன். அதையும் தாண்டி, 'எங்கே போனார், எப்படிப் போனார்?' என்றெல்லாம் அனாவசியமாக அலசி, பிறகு மட்டரகமான முறையிலும் செய்திகள் வந்ததுதான் சற்று அதிகம். இதையெல்லாம் எதிர்பார்க்கவில்லை! என்ன லட்சியத் துக்காகப் போயிருக்க முடியும் என்று யாரும் எண்ணிப்பார்க்கவில்லை என்பது வருத்தமான விஷயம்' என்றார்.

பிறகு தலைக்காவிரியில் தங்கியிருந்ததைப் பற்றிச் சொன்னார்.

'தலைக்காவிரி அருகில் உள்ள இரண்டு ஊர்களில் தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் யாரும் இதுவரை தலைக்காவிரியில் குளித்தது இல்லை. புனிதமான இடம்; இங்கே வராதீர்கள்' என்று மேல்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களைத் தடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களும் பயந்துகொண்டு, இதில் குளிக்க முயன்றதில்லை. ஊர் பெரியவர்களை அழைத்துப்

பேசினேன். 'நீங்கள் எங்களிடையே இருக்கிறீர்கள். அவர்கள் குளிக்கச் சம்மதிக்கிறோம்' என்றார்கள். தொழிலாளர்களை அழைத்துக் காவிரியில் குளிக்கச் செய்தோம். இவ்வளவு அருகில் இருந்தும் அன்றுதான் முதல்முறையாக காவிரியில் குளித்தார்கள், பாவம்! பிறகு, நான் இருந்த இடத்துக்கு அழைத்து, விபூதி பிரசாதம் கொடுத்தேன். சாப்பிடுவதற்குப் பொங்கல் தரப்பட்டது. அவர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைந்தார்கள். இதையெல்லாம் இங்கே நியூஸாக யாரும் போடவில்லை!'

நீங்கள் தண்டம் எடுத்துச் சொல்லாதது பற்றி பெரிய சர்ச்சை எழுகிறதே என்று நிருபர் கேட்டார்.

'அந்த சர்ச்சை அனாவசியமானது! தண்டத்தை மடாதிபதிகள் கையில் சதா எடுத்து வர வேண்டும் என்பது இல்லை. வேறு சில மடங்களில், தண்டத்தை மடாதிபதியே கையில் எடுத்து வருவதில்லை. சிஷ்யர் ஒருவர் தன் கையில் வைத்திருப்பார். எங்கள் மடத்தில்கூட நான் மடத்துக்கு வருவதற்கு முன்பு, பரமாச்சார்யாரின் தண்டத்தை ஒரு பையன் கூடவே எடுத்து வருவான். பூஜை செய்யும்போதுதான் தண்டத்தை வாங்கிக்கொள்வார். அது மட்டுமல்ல, இந்த தண்டத்துக்கே ஏதாவது தப்பு நேர்ந்துவிட்டது, யாராவது தொட்டுவிட்டார்கள் என்றால், வேறு தண்டம் மாற்றவேண்டியிருக்கும். புதிய தண்டம் கைக்கு வர நாலைந்து நாள் ஆகும். அப்போது இவர்கள் என்ன சொல்வார்களோ! அதுதவிர, ஒரு நிலை வரும்போது, ஒரு பக்குவம் என்று வரும்போது எதுவும் அவசியமில்லை என்று ஆகிவிடும்.'

இப்படி ஒரு பேட்டியை இருபத்தைந்து வருடம் கழித்து வாசிக்க நேர்ந்தவர்களுக்கு கேள்விகள் எழும். இத்தனை வருடங்கள் ஜெயேந்திரர் எத்தனை முறை சேரி பக்கம் சென்றிருக்கிறார், மாற்று மதத்தினர் எத்தனை பேரை அருகில் உட்காரவைத்து பேசியிருக்கிறார், மதம் மாற்றம் தடை சட்டத்திற்கு இவர் ஏன் எந்த கருத்தும் கூறவில்லை என்று கேள்விகள் நீண்டுகொண்டே போகிறது.

அன்றைய தேதியில் ஆசிரமத்தை விட்டுப்போன சர்ச்சையை மறைப்பதற்காக இப்படி ஒரு பேட்டி கொடுத்தாரா? உண்மையில் அவர் மனதில் இப்படி எண்ணம் இருந்து செயல்படுத்த முடிய வில்லையா? என்ற கேள்விகளுக்கு பதில் இல்லை.

அந்த பேட்டியில் அக்டோபர் 2 அன்று, ஜெயேந்திர சரஸ்வதி அனைத்து இந்து இயக்கங்களையும் இணைத்து அரசியலுக்கான

பாதையை உருவாக்க போவதாகக் கூறியிருந்தார். அதை மூத்த சங்கராச்சாரியார் ஏற்கவில்லை. அதன் கருத்து வேறுபாட்டால் தான் வெளியேறினார் என்ற திராவிடக் கழகத்தினர் கருத்து கூறினர்.

ஜெயேந்திரருக்கும், மூத்த ஆச்சாரியாருக்கும் கருத்து வேறு இருப்பதுபோல் இரண்டு பேருமே காட்டிக்கொள்ளவில்லை. ஆனால், காஞ்சி பீடம் ஜெயேந்திர சரஸ்வதி காலத்தில்தான் வான் அளவுக்கு புகழை அடைந்தது.

காஞ்சி மடத்தின் சங்கராச்சாரியாராக ஜெயேந்திர சரஸ்வதி தேர்வான பிறகுதான் அதன் பெருமை உலகம் முழுக்கப் பரவியது. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து உதவிகள் வரத் தொடங்கியது. 'காஞ்சி காமகோடி பீடம்', 'காஞ்சி காமகோடி ஸ்தாபனமாக' மாறியது.

பொதுவாக ஒரு கட்சிக்கு ஒரு தலைவர் மட்டும்தான் இருப்பார்கள். ஆனால், காஞ்சி பீடத்தில் ஒரு பீடாதிபதி என்ற விதிமுறை இல்லை. ஒரு சங்கராச்சாரியார் இருக்கும்போதே தனக்கு அடுத்த சங்கராச்சாரியாரை நியமிக்கலாம். அதனால், மூத்த சங்கராச்சாரியார் பீடத்தில் இருந்து விலகிவிட வேண்டும் என்பதில்லை. அவரும் இருப்பார். இளைய பீடாதிபதியும் இருப்பார்.

ஆசிரமத்தை விட்டுச் சென்ற பிறகு இளைய சுவாமியான விஜயேந்திர சரஸ்வதி பொறுப்பேற்றுக்கொண்டார். ஜெயேந்திரர் திரும்பி வந்ததும், இருவருமே காஞ்சி மடத்திற்கு சங்காராச்சாரியாராக இருந்தனர்.

பாரதிராஜா இயக்கிய 'வேதம் புதிது', இந்தியா முழுக்க பேசப்பட்ட படம். பல விருதுகள் பெற்ற படம். ஆனால், அப்படிப்பட்ட படத்தை முதலில் வெளியிட சென்சார் போர்டு சான்றிதழ் வழங்க யோசித்தனர். காரணம், இந்த படத்தில் அவர் கூறிய கருத்து 'பிராமணர்களுக்கு எதிராக இருப்பதாக' சென்சார் போர்டு நினைத்ததுதான்.

ஒரு துளி ஆபாசமும், வன்முறையும் இல்லாத படத்திற்கு சென்சார் போர்டு சான்றிதழ் வழங்க யோசித்தற்கு ஒரு காரணம் கூறியது. அதை கேட்டதும் ஒரு படைப்பாளியான பாரதிராஜாவுக்கு கோபம் வருவது இயல்புதான்.

சென்சார் போர்டு சான்றிதழ் வாங்க வந்த பாரதிராஜாவிடம், 'நீங்கள் எதற்கும் காஞ்சிபுரத்திற்கு ஒரு தடவை சென்று வாருங்கள்' என்றனர். சென்சார் போர்டுக்கு பிறகு திரைக்குப் போக வேண்டிய படத்தை

காஞ்சிபுரத்தில் இருப்பவருக்கு எதற்குக் காட்ட வேண்டும் போன்ற கேள்வியை இயக்குநர் பாரதிராஜா கேட்டார்.

'அவர் என்ன சென்சார் போர்டு மெம்பரா? இல்லை விநியோகஸ்தரா?' என்று கேட்கத் தொடங்கினார். ஒரு வழியாக படம் வெளிவந்து வெற்றிபெற்றது தனிக்கதை.

1998. திமுக பா.ஜ.க. கூட்டணி இருந்த சமயம். செங்கல்பட்டு அரக்கோணம் 63 கிலோமீட்டர் பிராட்கேஜ் திறப்பு விழாவை காஞ்சிபுரத்தில் நடத்த திட்டமிட்டனர். தென்னக ரயில்வே, இரண்டு சங்கராச்சாரியாரையும் சிறப்பு விருந்தினர்களாக அழைத்திருந்தது.

இந்த முடிவை அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி எதிர்த்தார். 'காஞ்சி சங்கராச்சாரியர்களை அழைக்கும்போது, அதே உள்ளூரில் இருக்கும் கிறிஸ்துவ, இஸ்லாமிய பிரமுகர்களையும் அழைக்க வேண்டும்' என்றார். ஆனால், மத்தியில் இருந்த பா.ஜ.க. அரசு மறுத்தனர். பா.ஜ.க.வை சேர்ந்த வேலாயுதம் உள்ளூர் பிரமுகர்களை அழைப்பது வழக்கத்தில் உள்ளது தான். இதில் எந்த மத நோக்க மில்லை என்றார். ஆனால், கிறிஸ்துவ, இஸ்லாமிய பிரமுகர்களை அழைப்பதைப் பற்றி எந்தக் கருத்தும் கூறவில்லை.

அப்போதைய போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த பொன்முடி அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதாக இருந்தது. பொன்முடி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளமாட்டார் என்று கருணாநிதி கூறினார். ஆனால், பா.ஜ.க, கூட்டணிக் கட்சியைவிட சங்கராச்சாரியாருக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தது.

சர்ச்சைகளை தவிர்க்க இரண்டு சங்கராச்சாரியார்களுமே நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லை என்று அறிவித்தனர்.

ஒருவர் சினிமா, அரசியல் இரண்டிலும் தனது அதிகாரத்தை செலுத்த முடியுமென்றால், அதிகாரத்தில் சுலமாக அமரலாம். சங்கர மடத்திற்கு இரண்டு இடத்திலும் அதிக செல்வாக்கு இருந்தது என்பதற்கு இந்த இரண்டு சம்பவங்கள் உதாரணம்.

இப்படிப்பட்ட செல்வாக்கு சரியத் தொடங்கியது சங்கராமன் கொலை வழக்கில் இருந்துதான். ஆனால், அதற்கு முன்பே பல சர்ச்சைகள், வழக்குகள் ஜெயேந்திரர் மீது இருந்து வந்தது. இந்த வழக்கு மூலம் அந்த வழக்குகளும் பூதமாக கிளம்பத் தொடங்கியது.

மூத்த ஆச்சாரியார் நூற்றாண்டை கொண்டாடும் விதமாதமாக 100 கிலோ தங்கம் வைத்து ஆசிரமத்தை அலங்கரிக்க திட்டமிட்டார். அந்த குழுவின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமான் இருந்தார். அந்த குழுவில் இருந்த ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் மக்களிடம் இருந்து நன்கொடை வாங்கலாம் என்று கருத்து கூறினார்.

மக்களிடம் இருந்து வாங்கிய நன்கொடையில் 17 கிலோ வரை தங்கம் வாங்கினர். 85 கிலோ தங்கம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய அன்றைய பிரதமர் நரசிம்ம ராவிடம் இருந்து சிறப்பு அனுமதி பெற்றனர்.

சுங்கத்துறையினர், எந்தவித வரிப் பணத்தையும் பெற்றுக் கொள்ளாமல் அத்தனை தங்கத்தை கொண்டு செல்ல அனுமதித்ததாக திராவிட கழகத்தினர் விமரிசனம் செய்தனர்.

ஆரம்பத்தில், தங்கத்தை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஜெயேந்திரர் கேட்க, அதற்கு ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் மறுத்திருக் கிறார். அப்போதே ராதாகிருஷ்ணன் மீது கோபம் அடைந்தார்.

'சொர்ணவிமான அறக்கட்டளை' என்ற பெயரில் தங்கம் அலங்கரிக் கும் பணியில் ஈடுப்பட்டனர். அதில், மேலாளராக சுதர்சன ஐயர் செயல்பட்டார். தங்க அலங்கரிப்பு முடிந்த நிலையில் ராதாகிருஷ்ணன் பார்வையிடும்போது தங்கத்திற்கு பதிலாக வெண்கலத்தை பூசியிருப்பதாக கூறினார். சில இடங்களில் கருப்பாகத் தொடங்கியது.

தங்கம் முறையாக பயன்படுத்தப்பட்டதா போன்ற கேள்விகளை ராதாகிருஷ்ணன் கேட்டார். இந்த சமயத்தில் ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் வீட்டில் இரண்டு மூன்று ஆட்கள் புகுந்து அவரைத் தாக்கினர். அதிர்ஷ்டவசமாக காயங்களோடு தப்பினார்.

மந்தைவெளி காவல் நிலையத்தில் மேலாளர் சுதர்சன ஐயர் மீதும், ஜெயேந்திர சரஸ்வதி மீதும் புகார் கொடுத்தார். அதில், சங்கரமடத்தில் கணக்கு வழக்குகள் முறையாக பாரமரிக்கப்படுவதில்லை என்று கூறியிருந்தார்.

இப்படி ஒரு வழக்கு இருப்பதே தெரியாமல் இருந்த நிலையில் சங்கராமன் கொலை வழக்கு வந்தவுடன் இந்த வழக்கும் தனி கவனம் பெற்றது.

அதே சமயத்தில் எழுத்தாளர் அனுராதா ரமணன், 'ஜெயேந்திரர் சரஸ்வதி தன்னிடம் தவறாக நடந்துகொண்ட விவரத்தை கூறினார்.

1992-ல், சுபமங்களா பத்திரிகை ஆசிரியர் பொறுப்பில் இருந்து விலகி வலையோசை என்ற பத்திரிகையில் ஆசிரியர் பொறுப்பேற்றார். அந்த பத்திரிகை விற்பனை குறைவாக இருந்ததால், ஆன்மிக பக்கத்திற்கு ஜெயேந்திரர் பேட்டி போட்டால் நன்றாக இருக்கும் என்று நினைத்தார்.

தனது தோழி ஒருவர் உதவியுடன் ஜெயேந்திர சரஸ்வதியை சந்தித்தார். அனுராதாவுடன் வந்த தோழி, ஜெயேந்திரருடன் நெருங்கி அமர்வதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். அதன் பின் அனுராதா ரமணனிடம் ஆபாசமாக பேசினார்.

ஒரு பெண்ணாக இதுபோன்ற பிரச்னைகளை பலமுறை சந்தித்திருகிறார். ஆனால், ஜெயேந்திரர் மகான் என்று நினைத்தவருக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. அந்த இடத்தை விட்டு வந்துவிட்டார். ஆனால், அவரை அழைத்து சென்ற தோழி மூலம் தொந்தரவு வரத் தொடங்கியது.

1993-ல் தினமலரில் ஒரு தொடர் எழுதிக்கொண்டு இருந்தார். அப்போது 28-வது வாரத்தில் ஜெயேந்திரரைப் பற்றி கட்டுரை எழுதினார். அந்த கட்டுரை பிரசுரமாகாமல், அந்தத் தொடரும் அப்படியே நின்றுவிட்டது.

### இவர் கீழ் இயங்கும் மருத்துவமனைகள்/பள்ளிகள்

காஞ்சி சங்கர மடம் மற்றும் அதன் கிளை மடங்கள்
ஸ்ரீ காஞ்சி மஹாசுவாமி வித்யா மந்திர்
காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனை, சென்னை
மற்றும் பல...


# 8

## பாபா ராம்தேவ்

யாருய்யா இந்த ஆளு அரசுக்கு எதிரா பேசுறது? சாமியாருங்க எப்போதும் அரசியல்வாதிகளுக்கு ஆதரவாத்தானே இருப்பாங்க? இவர் மட்டும் இப்படி? அதுவும் ஊழலை ஒழிக்கணும்னு சொல்லுறாரே? ஏதோ மந்திரம் கிந்திரம் பண்ணி இவரே அதை ஒழிக்கலாமே என்று பலர் பேசிக்கொண்டனர். முதன் முதலில் ஊழலுக்கு எதிராக குரல் கொடுத்த சாமியார் இவராக தான் இருக்கும் என்று பெருமையாக பேசிக் கொண்டனர்.

காந்தியவாதி அன்னா ஹசாரே தன்னந் தனியாக ஊழலை ஒழிக்க உண்ணாவிரதம் இருக்கும்போது, அவரின் கொள்கைக்கு ஆதரவாகப் பேசியவர் பாபா ராம்தேவ்.

இவரும் ஊழலுக்கு எதிராக உண்ணா விரதம் இருந்தார். காவல்துறையினர் உண்ணாவிரதக் கூட்டத்தில் அவரை



அப்படியே தூக்கிச் செல்லும்போது மக்களின் அனுதாப அலை அவர் மீது அதிகம் பாய்ந்தது. குறிப்பிட்ட மாநிலம் வரை இருந்த பாபா ராம்தேவ்வின் பெயர், அகில இந்தியளவில் பரவத் தொடங்கியது. நம்ம பிரச்னைக்காக போராடும் சாமியார் என்று பொது மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரத் தொடங்கியது.

ஆனால், முழுசாக பாராட்டத்தான் சிலருக்கு மனசு வரவில்லை. காரணம், காங்கிரஸ் ஊழலை எதிர்த்து பேசுபவர், பா.ஜ.க. ஆட்சியில் நடந்த ஊழலை விமரிசனம் செய்யவில்லை. ஒருவேளை பா.ஜ.க. மறைமுக ஆதரவோடு செய்கிறாரோ என்று பலர் பேசத் தொடங்கினார். எதுவாக இருந்தாலும், ஊழலுக்கு எதிராக பேசிய யோகா வல்லுநர் ராம்தேவ் இந்தியா முழுவதும் பிரபலமானவராக மாறினார்.

பாபா ராம்தேவ்வின் இயற்பெயர் ராமகிருஷ்ண யாதவ். ஹரியாணாவில் இருக்கும் அலிபூர் கிராமத்தில் ராம் நிவாஸ் யாதவ்வுக்கும், குலாபூ தேவிக்கும் மகனாகப் பிறந்தார்.

பள்ளிப்படிப்பை முழுசாய்கூட முடிக்கவில்லை. எட்டாம் வகுப்போடு பள்ளிப் படிப்பை நிறுத்திக் கொண்டார். அதன்பிறகு யோகாவிலும், சமஸ்கிருதத்திலும் ஆர்வம்கொண்டு குருகுல முறையில் படிக்கத் தொடங்கினார். திருமணமே வேண்டாம் என்று சன்னியாசியாக வாழ முடிவெடுத்து, காவியுடையில் வலம் வரத் தொடங்கினார். தன் பெயரை 'பாபா ராம்தேவ்' என்று மாற்றிக்கொண்டார்.

ஜித் மாவட்டத்தில் உள்ள கல்வா குருக்குலத்தில் பலருக்கு இலவசமாக யோகா சொல்லிக் கொண்டுத்தார். யோகாவுக்கு அடுத்து புத்தகங்கள் படிப்பதில் தனது நேரத்தை செலவித்தார். அரபிந்த கோஷ், யாகிக் சதன் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், படைப்புகளையும் விரும்பி படிப்பார்.

மேலே சொன்னதெல்லாம் படித்தப் பிறகு இவர் நிஜமாகவே மகான் என்று நினைக்கத் தோன்றும். தவறில்லை. ஒரு வேளை நிஜமாகவே நல்லவராகக் கூட இருக்கலாம். ஆனால், இவரும் கார்ப்பரேட் சன்னியாசி என்பதில் மட்டும் சந்தேகமில்லை.

**திவ்யா யோக மந்திர் டிரஸ்ட்**

இதுதான் பாபா ராம்தேவ் கார்ப்பரேட் உலகில் அடி எடுத்து வைக்க பயன்படுத்திய பெயர். யோகா பயிற்சி மற்றும் யோகா மூலம் நோய்களை குணப்படுத்தும் தொண்டு நிறுவனம்.

இன்றைய தேதி சாமியார்களும், மருத்துவர்களும் தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ள ஏதாவது ஒரு தனியார் தொலைக்காட்சி சேனல் தேவை. மக்கள் காலையில் தொலைக்காட்சி போடும்போது தங்கள் முகமும், அறிவுரையையும் கேட்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதன் கீழ் அவர்களது தொடர்பு எண்ணும், பதிவு செய்யும் எண்ணும் இருக்கும். அவர்களின் மருத்துவ நிலையத்தின் விளம்பரம் அல்லது தொண்டு நிறுவனத்தின் விளம்பரம் தவறாமல் அந்த காலை நிகழ்ச்சியில் இடம் பெறும்.

அப்படி பாபா ராம்தேவ்வுக்கு கிடைத்த தொலைக்காட்சி ஆஸ்தா டி.வி.. காலையில் நமது சுகி சிவம் ஸ்டைலில் பேசிவிட்டு, மக்களுக்கு எளிய யோகா பயிற்சியை சொல்லித் தருவார். இதனால் அவரிடம் யோகா பயிற்சியை கற்றுக்கொள்ள பலர் சேர்ந்தனர். குறிப்பாக, அமிதாப் பச்சன், ஷில்பா ஷெட்டி போன்ற பிரபலங்கள்கூட இவரிடம் யோகா பயிற்சி எடுத்துக் கொண்டனர்.

ஷில்பா ஷெட்டி யோகாவுக்கான ஒரு சி.டி. வெளியிட்டது நினைவிருக்கிறதா! நாற்பது வயது கடந்தும் தன் உடலை சிக்கென்று வைத்திருப்பதற்கு யோகாதான் காரணம் என்று அடிக்கடி கூறுவார். ஷில்பா ஷெட்டியின் யோகா குரு பாபா ராம்தேவ்தான்.

நியூயார்க் டைம்ஸ் 'இந்தியாவில் யோகா சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கும் இந்தியன்' என்று புகழ்ந்தனர். அதனால், வெளிநாட்டில் இருந்துகூட யோகா கற்பதற்கு இவரது பயிற்சி மையத்திற்கு வந்தனர்.

வெளிநாட்டவர்கள் இந்தியாவுக்கு வந்து இவரிடம் யோகா பயிற்சி எடுக்க வந்தார்களோ அப்போதே இவர் பாஸ்போர்ட், விசாவெல்லாம் வாங்கி வைத்தார். அடுத்து தன்னை வெளிநாட்டில் பயிற்சி எடுக்க அழைப்பார்கள் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று யோகா பயிற்சி வகுப்புகள் எடுத்தார். யோகா சார்ந்த சொற்பொழி வாற்றினார். பாபா ராம்தேவின் செல்வாக்கு உலகம் எல்லாம் பரவத் தொடங்கியது. உண்மையைச் சொல்வதென்றால் தனது செல்வாக்கை பரப்பினார்.

வெளிநாட்டில் தனது யோகா அமைப்புக்கு ஒரு கிளையைத் தொடங்கிவிட்டால் இன்னும் பல மாணவர்கள் சேர்வார்கள் என்று கணக்குப் போட்டார். அதற்கு தோதாக ஸ்காட்லாந்து வாழ் இந்தியர்களான சாம், சுனிதா தம்பதியின் நட்பு கிடைத்தது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு ஸ்காட்லாந்தில் செட்டிலான இந்தியக் குடும்பம். ராம்தேவ் தனது யோகா மையத்தை விரிவுப்படுத்த 2 மில்லியன் (20 லட்சம்) பவுண்ட் நன்கொடையாகக் கொடுத்தனர். ஒரு பவுண்ட்டின் மதிப்பு இந்திய ரூபாய்க்கு நூறுக்கு மேல் இருக்கும். எத்தனை கோடி என்று நீங்களே கணக்கு போட்டு பார்த்துக் கொள்ளுங்கள்.

## பாதாஞ்சலி யோக்பீத்

பாபா ராம்தேவ் கார்ப்பரேட் உலகில் எடுத்துவைத்த இரண்டாவது அடி இது. பெரிய அளவு பணம் நன்கொடையாகக் கிடைத்ததால், வாமனன் நிலத்தில் ஒரு அடியையும், இன்னொரு அடியை வானத்தில் வைத்து அளந்ததுபோல் தனது இரண்டாவது அடியை எடுத்து வைத்தார் ராம்தேவ்.

உத்ராகண்ட் மாநிலத்தில் இருக்கும் ஹரித்துவாரில் தனது பாதாஞ்சலி யோக்பீத் யோகா ஆராய்ச்சி மையத்தை உருவாக்கினார். தினமும் ஆயிரக் கணக்கானவர்கள் இங்கு வந்து யோகாவைப் பற்றி தெரிந்து கொள்கிறார்கள். பாதாஞ்சலி யோக்பீத்துக்கு இங்கிலாந்திலும் ஒரு கிளை இருக்கிறது. அதை லட்சக்கணக்கில் பவுண்டுகளாக நன்கொடை வழங்கிய சாம், சுனிதா தம்பதி கவனித்துக் கொள்கிறார்கள்.

செப்டம்பர் 2012-ல், ஹாட்வர்ட் பல்கலைக்கழகம் பாபா ராம்தேவுடன் சேர்ந்து தங்கள் பல்கலைக்கழகத்தில் யோகாவை ஒரு பாடமாகக் கொண்டு வர முன்வந்தார்கள். யோகா பயிற்சி மட்டுமல்லாமல் யோகா மூலம் நோய்களை எப்படி குணப்படுத்த முடியும் போன்றவற்றை எல்லாம் பாடத் திட்டத்தில் கொண்டு வந்தனர்.

ஒரு கார்ப்பரேட் நிறுவனத்தின் வளர்ச்சிபோல பாபா ராம்தேவின் யோகா பயிற்சி மையம் யோகா ஆராய்ச்சி மையமாகி வெளிநாட்டில் பாடத் திட்டத்தில் யோகாவை சேர்க்கும் அளவிற்கு வளர்ந்தது.

முதல்ல ஹீரோ, அப்புறம் அரசியல்ம். அடுத்தது சி.எம். ஒரு நடிகனின் கனவு மட்டுமல்ல. சமீபகாலமாக சாமியார்களின் கனவாக அரசியல் இருக்கிறது. அரசியலில் நேரடியாக இயங்குவது தெரியவில்லை என்றாலும், மறைமுகமாக தங்கள் பலத்தைக் காட்ட விரும்புகிறார் கள். பாபா ராம்தேவ் மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்.

தனது முதல் அரசியல் பிரவேசமாக ஊழலுக்கு எதிராக குரல் கொடுத்தார்.

2011-ல் விக்கிலீக்ஸ், ஸ்விஸ் வங்கியில் இந்தியர்கள் பலர் பணம் வைத்திருப்பதாக தகவல் கூறியது. அதனால், ஊழலை ஒழிக்க லோக்பால் மசோதா கொண்டு வர வேண்டும் என்று அன்னா ஹசாரே குரல் கொடுத்தார். அதற்காக அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி, பலனில்லாமல் உண்ணாவிரதம் எல்லாம் இருந்தார்.

பாபா ராம்தேவும் ஊழலுக்கு எதிராக பேசினார். வெளிநாட்டில் இருக்கும் இந்திய கருப்புப் பணம் அனைத்தும் இந்திய அரசுக்கு சொந்தமானது. அந்த கருப்புப் பணத்தை மீட்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். மொரீஷியஸ் வழியாக இந்திய கருப்புப் பணம் செல்கிறது. அங்கிருந்து மீண்டும் இந்தியா வில் முதலீடு செய்கிறார்கள். இந்த கருப்புப் பணம் இந்தியர்களுக்கு எதிராகக் கூட பயன்படுத்தப்படலாம் என்று கூறினார்.

ஊழலுக்கு எதிராக பேசுவதோடு இல்லாமல் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க நெருக்கடி கொடுக்கத் தொடங்கினார்.

பிப்ரவரி 27, 2011 புதுதில்லியில் இருக்கும் ராம்லீலா மைதானத்தில் ஊழலுக்கு எதிரான மாநாடு நடத்தினர். அதில், ராம்தேவுடன், அவரது நண்பரான ஆச்சாரியா பாலகிருஷ்ணா, அன்னா ஹசாரே, அரவிந்த் கெஜ்ரிவால் போன்றவர்கள் கலந்துகொண்டனர். கருப்புப் பணத்தால் இந்தியா எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்று ஒவ்வொருவரும் தங்கள் கருத்தைக் கூறினர்.

ஜூன் 4, 2011. சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார். கருப்புப் பணத்திற்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கும் வரை தனது உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளப் போவதில்லை என்று அறிவித்தார்.

காலை தனது 65,000 சீடர்களுடன் உண்ணாவிரதத்தை புதுதில்லி ராம்லீலா மைதானத்தில் தொடங்கினார். மதியத்துக்குள் மைதானத்தை தாண்டி மூன்று கிலோ மீட்டர் அளவுக்கு கூட்டம் வரத் தொடங்கியது.

மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு, கருப்புப் பணத்தை மீட்க நடவடிக்கை எடுப்பதாகவும், உண்ணாவிரதத்தை கைவிடக் கோரினர். ஆனால், ராம்தேவ் தனது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார். மாலையில் ராம்லீலா மைதானத்தில் கூட்டம் பெருகுகிறது. போலீஸ், கூட்டத்தை கலைந்து செல்ல சொல்லியும் யாரும் செல்லவில்லை.

வேறு வழியில்லாமல், இரவு ஒரு மணிக்கு பத்தாயிரம் காவலர்கள் மைதானத்தில் ராம்தேவையும், அவருடன் இருந்தவர்களையும்

தூக்கிச்சென்றனர். போலீஸ், தடுக்க நினைத்த கூட்டத்தினரை லத்தியால் அடித்து விரட்டினர். ஊடகங்கள் இதை வீடியோ படம் எடுப்பதை போலீஸ் தடுத்தது.

வீடியோ பதிவை தடுக்க மின்விளக்குகளை அணைத்தனர். ஜெனரேட்டர் மூலம் எரிந்த விளக்குகளை அணைக்க, ஜெனரேட்டர் மீது தண்ணீர் புகையை தெளித்தனர். இருந்தாலும், ராம்தேவை தூக்கிச் செல்வதை ஊடகங்கள் வீடியோ பதிவு செய்தனர். கூட்டத்தில் கலைந்து செல்லாதவர்களை பஸ்ஸில் ஏற்றி பஸ் நிலையத்திலு, ரயில் நிலையத்தில் இறக்கிவிட்டனர். ஒரு சிலர் தொலைந்துவிட்டதாக ராம்தேவ் குற்றம் சாட்டினார்.

அடுத்த நாள் போலீஸ் தாக்குதலை எல்லா கட்சிகளும் கண்டித்தனர். இந்திய அரசு பாஸிச அரசாக மாறிவருகிறது என்று விமரிசனம் செய்தனர். ஜாலியன் வாலாபாக், நெருக்கடி நிலை சம்பவங்களோடு ஒப்பிட்டு பேசினர். கருப்புப் பணத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதோ இல்லையோ பாபா ராம்தேவ் அடுத்த நாள் ஊடகத்தின் நாயகனாக மாறினார்.

இந்த சம்பவத்திற்கு பிறகு கருப்புப் பணத்தை மீட்க போராடும் கூட்டங்களில் கலந்துகொண்டார். கருப்புப் பணத்தை உருவாக்குவதை எப்படி தடுக்க வேண்டும் போன்ற வழிகளை வகுத்து கூறினார்.

ஆகஸ்ட் 14, 2012. டெல்லியில் இருக்கும் அம்பேத்கர் மைதானத்தில் கருப்புப் பணத்திற்கு எதிராக ஆறு நாள் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்தார். அப்போது, 2014 தேர்தலில் ‘காங்கிரஸை அகற்றுங்கள். இந்தியாவை காப்பாற்றுங்கள்’ என்று கூறினார்.

சராசரி குடிமகனுக்கு இருக்கும் கோபம் தான் பாபா ராம்தேவுக்கு வந்தது என்று சொல்லலாம். நமக்காகத்தான் இவர் போராடுகிறார் என்று பேசலாம். மற்ற சாமியார் எல்லாம் யாகம், வேண்டுதல் என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது இவர் அரசியல் ரீதியாக கருப்புப் பணத்தை மீட்கிறார் என்று பாராட்டலாம். இவரை கட்டுப்படுத்த காங்கிரஸ் பாபா ராம்தேவை கிண்டத் தொடங்கியது.

ராம்தேவ் வருமான வரியை சரியாக செலுத்தவில்லை என்று முதலில் குற்றம் சாட்டினர். பிறகு, ராம்தேவ் அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட மருந்துகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார் என்று விசாரணை நடத்தினர். பாதாஞ்சலி யோக்பீத் இடத்தை

கட்டும்போது பொது இடத்தை ஆக்கிரமித்ததாக வழக்கு பதிவு செய்தனர்.

அவரது நண்பனான ஆச்சார்யா பாலகிருஷ்ணா, போலி பாஸ்போர்ட் வைத்திருப்பதாகவும், அவர் ஒரு நேபாள குற்றவாளி என்றும், 200-க்கும் மேற்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களுடன் அனுமதியில்லாமல் வியாபாரத் தொடர்பு வைத்திருப்பதாகவும் குற்றம் சாட்டினர். ராம்தேவையும், அவரைச் சேர்ந்த ஆச்சாரியா பாலகிருஷ்ணாவையும், சி.பி.ஐ. பல குற்றங்களுக்கு விசாரணை நடத்தியது.

போலி பாஸ்போர்ட் வழக்கில் ஆச்சாரியா பாலகிருஷ்ணா விடுவிக்கப்பட்டார். இருந்தாலும் சி.பி.ஐ., ராம்தேவின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது.

அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தினால் சராசரி குடிமகனே பாதிக்கப்படும்போது, பெரிய யோகா மையத்தை நிர்வகிப்பவரை அரசு குற்றம் கண்டுபிடிப்பது பெரிய விஷயம் இல்லை. இது போன்ற தவறுகளை ராம்தேவுக்கு தெரியாமல் கூட நடந்திருக்கலாம். இல்லை என்றால் அரசின் பழி வாங்கும் நடவடிக்கையாகக்கூட இருக்கலாம். ஆனால், கருப்புப் பணத்திற்கு எதிராக போராடும் முன்பே ராம்தேவ் பல சர்ச்சைகளில் சிக்கியவர். எந்த சர்ச்சையையும் பழி வாங்கும் நடவடிக்கை என்று சொல்லி ஒதுக்க முடியாது.

கருப்புப் பணத்திற்கு எதிராக பேசும் பாபா ராம்தேவ் 2005-ல் தனது திவ்ய யோகா மந்திர் டிரஸ்ட்டில் வேலை செய்பவர்களுக்கு குறைவான சம்பளம் தந்து வந்தார். அப்போது, தன் ஊழியர் கணக்கில் அரசுக்கு செலுத்த வேண்டிய பிராவிடண்ட் பண்ட் கட்டவில்லை. ஊழியர் காப்பிட்டு திட்டத்திற்கும் பணம் செலுத்தவில்லை.

தங்களின் சம்பளத்தை உயர்த்தக் கோரி போராட்டம் நடத்தியவர்களை டிரஸ்ட்டில் இருந்து பணி நீக்கம் செய்தார். ஆனால், தொழிலாளர் சங்கங்கள் நடத்திய போராட்டத்திற்கு பிறகு பணி நீக்கம் செய்த ஊழியர்களை மீண்டும் சேர்த்துக் காண்டார்.

திவ்ய யோகா மந்திரில் உடல் ஆரோக்கியத்திற்கு கொடுக்கும் மருந்தில் மனித உறுப்புகள், மிருக உறுப்புகள் வைத்து தயாரிப்பதாக சர்ச்சை எழுந்தது. பிருந்தா காரத், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர். ராம்தேவ் தயாரிக்கும் ஆயுர்வேத மருந்தில் மிருக எலும்புகள் இருப்பதாகக் கூறினார். ஜனவரி 2006-ல், திவ்யா மருந்தகத்தில் (திவ்யா

யோகா மந்திரின் மருந்தகம்) மருந்து வாங்கி அதை பரிசோதனை செய்தார். அதில், மிருக மற்றும் மனித நச்சுப் பொருட்கள் பயன் படுத்தியது உறுதியானது.

பிருந்தா காரத் ஊடகத்தின் முன் வெளிச்சம் போட்டு காட்டினார். ஆனால், இதை திவ்யா யோகா மையம் மறுத்தது.

பல அரசியல் தலைவர் பிருந்தா காரத்துக்கு கண்டனம் தெரிவித்தனர். பா.ஜ.க. சார்பாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால், திவ்யா மருந்தகத்தில் வாங்கிய மருந்து சீட்டும், அதை பரிசோதனை செய்த சீட்டையும் காட்டினார். மருந்தை பிருந்தா காரத்தே வாங்கி ஏதாவது செய்திருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பினர்.

நான்கு சாம்பிள்கள் டெல்லியில் இருக்கும் பரிசோதனை மையத்திற்கு அனுப்பப்பட்டன. அங்கு நடந்த பரிசோதனையில் மிருகங்களின் டி.என்.ஏ. இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், ஊடகங்கள் வேறு மாதிரியான செய்திகளை வெளியிட்டது.

'தன் யோகா பயிற்சி மையத்திற்கு வரும் மக்களுக்கு மிருக நச்சுக்கள் கலந்த மருந்தைக் கொடுத்து அவர்களின் நம்பிக்கைக்கு துரோகம் செய்கிறார்' என்று பிருந்தா காரத் வெளிப்படியாகவே ராம்தேவை விமரிசித்தார். இதற்கெல்லாம் ராம்தேவ் தரப்பில் இருந்து எந்த பதிலும் வரவில்லை.

யோகாவை பரப்ப ராம்தேவ் மேற்கொள்ளும் முயற்சியைப் பாராட்டலாம். தனது யோகா மையத்திற்கு வெளிநாட்டில் நூறு கிளை தொடங்கலாம். ஆயிரம் பல்கலைக்கழகத்தில் ஒப்பந்தம் போடலாம். ஆனால், யோகாவால் எய்ட்ஸ் நோயை சரி செய்ய முடியும் என்றொரு பிரசாரத்தை கையில் எடுத்து யோகாவை பரப்பத் தொடங்கியது யாராலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

எய்ட்ஸ் நோயை யோகாவால் கட்டுப்படுத்த முடியும். அதனால், பள்ளியில் செக்ஸ் கல்விமுறையை விட யோகா கல்வி வைக்க வேண்டும் என்று கருத்து கூறினார். ராம்தேவின் இக்கருத்து பல சர்ச்சையை கிளப்பியது. மாணவர்களுக்கு 'செக்ஸ் கல்வி' தருவது எய்ட்ஸில் இருந்து பாதுகாக்கவா? அல்லது சமூகத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவா? கேள்விக்கு பதில் தெரியாமல் ராம்தேவ் இது போன்ற கருத்துக்கள் கூறுகிறார் என்று விமரிசனம் செய்தனர்.

இது போன்ற கருத்துகள் கூறக் கூடாது என்று இந்திய சுகாதாரத் துறையில் இருந்து கண்டக் கடிதம் வந்தது. பிறகு, தனது கருத்து, தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. என்னிடம் வரும் நோயாளிகள் யோகா பயிற்சிக்கு பிறகு உணர்ந்ததை நான் பகிர்ந்துகொண்டேன் என்றார்.

2009-ல் டெல்லி உயர் நீதிமன்றம் ஓரினச் சேர்கையாளருக்கு எதிரான 377-வது சட்டப் பிரிவை நீக்க உத்தரவிட்டது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு இந்த சட்டப் பிரிவின்படி பத்து வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கலாம்.

இன்று, உலகம் முழுக்க ஓரினச் சேர்க்கையாளர்கள் இருக்கிறார்கள். பல நாடுகள் ஓரினச் சேர்க்கை திருமணத்தை அங்கீகரிக்க தொடங்கிவிட்டனர். இந்தியாவில் இந்த சட்டப் பிரிவை நீக்கம் முடிவு செய்யப்பட்டது.

அதற்கு, பாபா ராம்தேவ் 'இந்த தீர்ப்பு குற்றங்களுக்கும், மனநிலை பாதிக்க அதிகம் வழி வகுக்கும். இந்திய குடும்ப முறைகள் அழித்துவிடும். இயற்கைக்கு எதிரான உறவு முறை' என்றார்.

அதுமட்டுமில்லாமல், 'யோகா, பிராணாயாமம் செய்வது மூலம் இந்த உணர்வில் இருந்து விடுபடலாம்' என்று கூறினார். ஓரினச் சேர்க்கை யாளர்களுக்கான அமைப்புகள் அவரது கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தன.

ராம்தேவ் இலக்கு அரசியல் என்பது சந்தேகமில்லை. அரசியல் சார்ந்த கருத்துகள் கூறுவதும், அரசியல் சார்ந்த விஷயங்களில் ஆர்வம் காட்டுவதில் இருந்தே தெரிகிறது. ஆனால் அவருடைய நடவடிக்கை கள் காங்கிரஸுக்கு எதிராக இருப்பதாகவும், ஒருதலைப்பட்சமாக பேசுவதாகவும் விமரிசிக்கப்படுகிறது.

**இவர் கீழ் இயங்கும் நிறுவனங்கள்**

பாதாஞ்சலி யோக்பீத்
திவ்ய யோகா மந்திர் டிரஸ்ட்


# 9

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்

'வன்முறை இல்லாத, மனஇறுக்கம் இல்லாத உலகே எனது லட்சியம்' ரவிசங்கர்.

எல்லா சாமியார்களுமே மக்களின் பக்தியை மூலதனமாகக் கொண்டு தங்கள் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்குவதில்லை. ஒவ்வொருவரும் ரஜினியைப் போல் கையை மேலே உயர்த்தி 'ஆண்டவன் சொல்றான் அருணாச்சலம் முடிக்கிறான்' என்று சொல்லிக் கொடுத்ததை உங் களுக்கு சொல்கிறேன் என்று சொல்வ தில்லை. 'அந்த ஆண்டவனே நான்தான்' என்று மயங்க வைப்பதில்லை.

மனிதனின் பலவீனம் என்ன என்பதைத் தெரிந்து, அந்த இடத்தை தட்டினால் போதும் விழுந்துவிடுவான். இன்று பணம் சம்பாதிக்க அவசரத்தில் இருக்கும் சமுதாயத்தில் பலர் மன உலைச்சலுக்கும்



மன நெருக்கடிக்கும் உள்ளாகிறார்கள். அவர்களின் நெருக்கடிதான் இவருக்கு பணமாக மாறியது.

மன அழுத்தமும், வன்முறையும் இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, உலகம் முழுக்க சுற்றுபயணம் மேற்கொண்டு 'வாழும் கலை' என்ற பெயரில் பயிற்சி அளித்துவரு கிறார். இந்த பயிற்சி மட்டும் எடுத்துக்கொண்டால் வாழ்க்கையை எப்படி வாழலாம் என்று புரிந்துகொள்ள முடியும் என்று கூறுகின்றனர்.

எல்லோரும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறோம். ஆனால், உண்மையாக வாழ்கிறோமா? மற்றவர்களுக்கு உதவியாக வாழ்கிறோமா? என்ற கேள்வி வருகிறது. யார் மீதும் பொறாமை படாமல், வன்மம் இல்லாமல், நமது வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்வதுதான் வாழ்க்கை. அப்படி வாழ்வது மிகப் பெரிய கலை.

இப்படி ஒருவர் சொன்னால் ஒரு சிலருக்கு அவர்கள் வாழும் வாழ்க்கை மீது சந்தேகம் வரலாம். மன அழுத்தத்தோடு இருப்பவர்கள் நிஜம்தான் என்று அவர்கள் பேசுவதை கேட்க தொடங்கிவிடுவார்கள்.

நாம் வாழ்க்கையை சரியாக வாழ்வதில்லை என்று நினைப்பவர்கள், வாழ்க்கையை கொண்டாடுவதில்லை என்று நினைப்பவர்கள் தேடி வருவார்கள். நாமும் பயிற்சிக்கு சென்று முறையான வழியில் தியானம் செய்தால், எப்படி வாழ வேண்டும் என்பது புரிந்துகொள்ள முடியும் என்று தோன்றும். கொஞ்சம் தானே பணம் என்று செலவு செய்து பயிற்சி எடுக்க சேர்வார்கள். அப்படி வளர்ந்ததுதான் 'வாழும் கலை' மையம்.

அதை நிறுவியவர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்.

ரவிசங்கர், தமிழ்நாட்டில் உள்ள பாபநாசத்தில் மே 13, 1956-ல் பிராமண குடும்பத்தில் பிறந்தார். இவர் ஞாயிறு அன்று பிறந்ததால், 'ரவி' என்றும், 'ஆதிசங்கரர்' நினைவாக 'சங்கர்' சேர்த்து 'ரவிசங்கர்' என்று பெயர் வைத்தனர். பேரும் புகழும் பெற்ற பிறகு தன் பெயர் பக்கத்தில் அவரே 'ஸ்ரீஸ்ரீ' சேர்த்துக்கொண்டார். இவருடைய குரு மகரிஷி மகேஷ் யோகி.

ஒரு முறை வேதத்திற்கான மாநாடு ஒன்றை மகரிஷி ஏற்பாடு செய்திருந்தார். அதில், வேத அறிவியல் பற்றி பேசுவதற்கு ரவிசங்கருக்கு அழைப்பு விடப்பட்டது. அந்த மாநாட்டில் ரவிசங்கரின் பேச்சைக் கேட்ட மகரிஷி, அன்றில் இருந்து தன்னுடன் இருக்கும்படிக்

கேட்டுக்கொண்டார். மகேஷ் யோகி 'மகரிஷி சர்வதேச பல்கலைக் கழகம்' தொடங்கியபோது ரவிசங்கர் அவருடன்தான் இருந்தார். அவருடன் பல பயணங்கள் செய்தார்.

எண்பதுகளின் தொடக்கத்தில், ரவிசங்கர் சில பரிசோதனை முயற்சிகளை செய்து பார்த்தார். மற்றவர்களைவிட தன்னை தனித்து காட்டிக்கொள்ள இந்த பயிற்சிகள் உதவியாக இருக்கும் என்று நம்பினார். அந்த பயிற்சிக்காக பத்து நாள் பேசாமல் அமைதியாக கர்நாடகாவில் இருக்கும் ஷிமோகா என்ற இடத்தில் இருந்து பயிற்சி எடுத்தார்.

அப்போதுதான் ரவிசங்கருக்கு 'சுதர்ஷன க்ரியா' என்ற புதிய சிந்தனை உதயமானது.

ஒவ்வொரு உணர்வின் வெளிபாட்டாக காற்றை சுவாசிப்பதில் தெரியும். சுவாசிப்பதை நம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாலே நமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அமைதியின் மூலம் உணர்ந்தார். இந்த பயிற்சியின் பெயர் 'சுதர்ஷன் க்ரியா'.

இது உடலில் ஆற்றலைப் புகுத்தி, உடல், மனம் மற்றும் உணர்வுகளின் இயற்கையான தாள லயங்களைச் சமன் செய்யக் கூடியதாகக் கருதப்படுகிறது. இதன் பலன்களைப் பற்றி பல்வேறு தனி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று, 'சுதர்ஷன் க்ரியா' என்பது வாழும் கலை நிறுவனப் பயிற்சிகளின் ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது.

சுதர்ஷன் க்ரியா பயிற்சி மற்ற பயிற்சிகள்போல் இல்லை. இயற்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும். மரத்தில் இருந்து ஒரு இலை உதிர்ந்து புது இலை வருகிறதோ, ஒரு மனதில் தீய எண்ணங்களை அழிப்பதில் மூலம் அன்பு என்ற புதிய உணர்வு உதயமாகிறது என்பதை விளக்குகிறார்.

பெங்களூரில் 'வேத் விக்யான் மஹா வித்யா பீத்' என்ற பெயரில் அறக்கட்டளை தொடங்கினார். அங்கு இருக்கும் ஏழை மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் இலவச கல்வி வழங்கினார். 2000 மேற்பட்ட மாணவர்கள் இதில் பயனடைந்தார்கள்.

தொன்னூறில் இருந்து 'வாழும் கலை' என்ற அறக்கட்டளை பெயரில் பல தொண்டு காரியங்கள் செய்யத் தொடங்கினார். குழு சார்ந்த பல பயிற்சிகளையும் அளிக்கிறது.

- 1992-ல் சிறையில் இருப்பவர்களுக்கு மறுவாழ்வு குறித்தும், வாழ்க்கை உன்னதத்தைப் பற்றி உணர்த்தினார்.
- உலக அமைதிக்காக பாகிஸ்தான், இராக் போன்ற நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.
- தனதுச் சீடர்களை சுனாமி, கத்ரீனா போன்ற இயற்கை சீற்ற அழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ அனுப்பினார்.
- எய்ட்ஸ் விழிப்புணர்வு, பாலியல் வன்முறை போன்ற சமூக விஷயங்களில் ஈடுபடுத்தினார்.
- அன்னா ஹசாரேவுக்கு ஆதரவாக வலிமையான லோக்பால் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இவ்வளவு நல்லவராக இருப்பதால் இவரின் அறக்கட்டளைக்கு உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாட்டிலும் இருந்து நன்கொடைகள் வரத் தொடங்கின. பள்ளி, கல்லூரி என்று விசேஷ சொற்பொழிவாற்ற இவருக்கு அழைப்பு வந்தது. அதனால், ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு என்ற வருமானமும் பெருகியது. பிரச்னையும் வரத்தொடங்கியது.

வன்முறையில்லாத சமுதாயத்தை உருவாக்குவது தான் இவரது கொள்கை என்பதில் சந்தேகமில்லை. வன்முறையை எதிர்த்து தான் போராடுகிறார், அதற்காக மனதைக் கட்டுப்படுத்த பயிற்சி வகுப்பும் எடுக்கிறார் என்று சொல்லிக்கொள்கிறார். அதை எல்லாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், அதற்காக அரசுப் பள்ளி எல்லாம் நக்ஸல்பாரிகளை வளர்க்கிறது என்று சொன்னால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். ஒருமுறை ஜெய்பூரில் நடந்த நிகழ்ச்சியில் அப்படித்தான் ரவிசங்கர் கூறினார்.

இந்திய அரசு பள்ளிகள் நக்ஸல்பாரிகளுக்கு அடித்தளமாக இருக்கிறது என்று சொல்லிவிட்டார். அடுத்த நாள் பல கல்வியாளர்கள், அமைச்சர்களின் கண்டனங்களுக்கு ஆளானார். பிறகு, 'நான் எல்லா அரசுப் பள்ளியையும் குறிப்பிடவில்லை' என்று கூறி தன் கருத்தை தெளிவுபடுத்தினார்.

அதுவரை எந்த சர்ச்சையிலும் மாட்டிக்கொள்ளாமல் இருந்த ரவிசங்கர், முதல் முறையாக ஊடகத்தின் முன் மாட்டிக்கொண்டு தவித்தார்.

இதற்கு முன்பு ஒருமுறை ஊடகத்தின் தலைப்பு செய்தியாக இருந்திருக்கிறார். அதுவும் இவர் மீது நடந்த கொலை முயற்சியில்.

இன்றைய காலத்தில் யார் தான் கையில் ஆயுதம் ஏந்துவதில்லை. நீதிபதிகூட நீதிமன்றத்தில் அமைதியாக இருக்கச் சொல்லி கையில் சுத்தியலை ஏந்தவில்லையா? உலகத்திற்கு அகிம்சையை அறிமுகப்படுத்திய காந்திக்கு துப்பாக்கி தோட்டாவை பரிசளிக்க வில்லையா? இப்படிப்பட்ட காலத்தில், வன்முறையில்லாத சமூகத்தை உருவாக்க முடியும் என்று நம்புகிறவரை மட்டும் விட்டுவைக்குமா என்றுதான் பேசிக் கொண்டனர்.

அன்றைய தினம் பெங்களூர் ரவிசங்கர் ஆசிரமம் மட்டுமல்ல, பத்திரிகையாளர் முதற்கொண்டு அந்த விஷயத்தை பற்றிதான் பேசிக்கொண்டனர்.

'வாழும் கலை ரவிசங்கரை யாரோ சுட முயற்சி பண்ணாங்களாமே!!'

இத்தனைக்கும் ரவிசங்கருக்கு ஒன்று ஆகவில்லை. அதனால் என்ன? ஊடகங்களுக்கு அன்றைக்கு செய்தி கிடைத்தவிட்டது. இதை வைத்து ஓட்டினர்.

எப்போதும்போல தனது சீடர்கள், வழிபடுபவர்களோடு பேசிக் கொண்டுதான் இருந்தார். திடீர் என்று கூட்டத்தில் இருந்த ஒருவன் ரவிசங்கரை சுட முயற்சி செய்ய, அங்கு வழிப்பாட்டுக்கு வந்தவர் மீது காயம் ஏற்பட்டது. ரவிசங்கருக்கு ஒன்றும் ஆகவில்லை என்றாலும், அந்த இடத்தில் பதற்ற நிலை உருவானது.

சம்பவத்தைப் பற்றி கேட்கையில், தன்னை எதற்காக கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என்று தெரியவில்லை என்றும், தனக்கு எதிரி இல்லை என்றும் ரவிசங்கர் கூறினார். நிஜமாகவே இது தன் மீது தொடுத்த தாக்குதலா என்ற சந்தேகமாக இருக்கிறது என்றார்.

ஆனால், பத்திரிகையாளர் யூகங்களுக்கு என்றுமே அளவில்லை. ஒரு வேலை இதை மாவோயிஸ்ட் தாக்குதலாக இருக்குமோ என்று சந்தேகித்தனர். வன்முறைக்கு எதிராக பேசும்போது ஆயுதம் ஏந்திய நக்ஸல்பாரியை விமரிசித்திருந்ததால் அவர்கள் இப்படி செய்திருப்பார்களோ என்று யோசித்தனர்.

ரவிசங்கர் மீது நடத்திய தாக்குதலுக்கும், நக்ஸல்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமா என்று உள்துறை அமைச்சராக இருந்த

ப.சிதம்பரத்திடம் கேட்டனர். அதைப்பற்றி தெளிவாகத் தெரியவில்லை என்று பதிலளித்தார்.

பொதுவாக, ஆசிரமம் என்றால் ராமாயண காலத்து சிறு குடில், காந்தி காலத்து எளிய வீடு என்று ஞாபகத்துக்கு வரும். ஆனால், கார்ப்பரேட் சாமியார்களின் 'ஆசிரமம்' என்றால் பன்னாட்டு நிறுவனம் என்று அங்கீகரிக்கப்படாத பெயராக மாறிவிட்டது.

இவருடைய ஆசிரமம், ஐந்து மாடிக் கட்டடம். முழுக்க முழுக்க மார்பிள் கல்லால் கட்டப்பட்டது. லிப்ட், வரவேற்பறை என்று ஐ.டி. நிறுவனம்போல் இருக்கிறது. பெங்களூர் அருகே இருப்பதால் என்னவோ இப்படி கட்டியிருக்கிறார்கள் என்று கிண்டலாக விமரிசனம் செய்தனர்.

அந்த ஆசிரமத்தில் ஒரு தாமரை வடிவம் ஒன்று உள்ளது. பி.ஜே.பி. கட்சியின் தேர்தல் சின்னத்தை இவர் எடுத்துக்கொண்டது யதேச்சை யானதாக இருக்க முடியாது என்று கருத்து கூறப்படுகிறது. ஆர்.எஸ்.எஸ். அமைப்போடு ரவிசங்கருக்கு உள்ள நெருங்கிய தொடர்பு மற்றும் பொது மேடைகளில் வி.எச்.பி. தலைவர்களோடு மேடையில் இடம்பெறுவது போன்ற விஷயங்களால் இவர் ஒரு கட்சி அல்லது மதம் சார்பாக நடந்துகொள்கிறார் என்ற விமரிசனமும் எழுகிறது.

சுதர்ஷன கிரியா பயிற்சிக்கு காப்புரிமை வாங்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. வன்முறையில்லாத சமுதாயம் உருவாக்க வேண்டும் என்று நினைப்பவர் எதற்காக தனது பயிற்சிக்கு காப்புரிமை வாங்க வேண்டும்.

வன்முறையை இவர் மட்டும்தான் ஒழிக்க வேண்டுமா? இவரிடம் பயிற்சி பெற்று தனியாக ஆசிரமம் நடத்தி, அவர்கள் மூலம் வன்முறையை ஒழிக்கக் கூடாதா? அந்த எல்லோரிடமும் பரவினால் தானே வன்முறையை ஒழிப்பதற்காக முறையை கையாள முடியும் என்ற கேள்விகள் எழுகிறது.

வாழும் கலையில் ஆரம்ப பயிற்சியை ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார். அதாவது, எட்டு முதல் பதிமூன்று வயது உள்ளவர் களுக்கு ஒரு பயிற்சி, பதின்ம வயதில் (14 18) இருப்பவர்களுக்கு ஒரு பயிற்சி, பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு (எஸ் ப்ளஸ்) என்ற பெயரில் வகுப்பு திட்டங்கள் உண்டு.

அதற்கு மேல் பயிற்சி பெற நினைப்பவர்கள் தியானத்தின் கலை, அமைதியின் கலை போன்ற பயிற்சிகள் இருக்கிறது. நேரம், வசதிக்கு தகுந்தாற்போல் பயிற்சி எடுத்துக்கொள்ளலாம்.

இப்படி படிக்கும்போது எதோ கல்லூரியின் பாடத் திட்டங்களை படிப்பதுபோல் இருக்கும் . ஆனால், 'வாழும் கலை' என்ற பெயரில் பல சொற்பொழிவாற்றி, பெரிய பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களின் சிறப்புப் பயிற்சியாளராக இருக்கிறார் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்.

வாழ்வதை கற்பதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்யத் தயாராக இருப்பவர்கள் இவரைத் தேடி வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இவர் இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாட்டுகளிலும் பல பயிற்சிகள் எடுக்கிறார். இவருக்கு வெளிநாட்டில் அதிகம் சீடர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

அந்தக் காலத்தில் சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்து, தங்கள் அனுபவத்தை வருங்கால சந்ததிகளுக்கு கூறினார்கள். இதற்கெல்லாம் பயிற்சி தேவையா என்று தோன்றும். ஆனால், இன்று எல்லோர் கையிலும் பணம் வந்துவிட்டது. பணமே வாழ்க்கையாக இருக்கிறது. இப்படி எல்லாம் சொல்லி பேசினால்தான் அவர்கள் பணம் சம்பாதிக்க முடியும். ரவி சங்கரை மட்டும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

தியானம், யோகம் என்று சொல்லி வாழ்வியல் கலை பற்றி சொல்லிக்கொடுத்தவர்கள் எல்லோரும் செல்வந்தர்களாகி விட்டார்கள். அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள் பெரும்பாலும் எந்த நிலையில் இருந்தார்களோ அதே நிலையில்தான் இருக்கிறார்கள்.

**இவர் கீழ் இயங்கும் நிறுவனங்கள்**

வாழும் கலை அறக்கட்டளை (Art of Living)
International Association for Human Values (IAHV)
என்ற சமூக சேவை அமைப்பு

# 10

## கணபதி சச்சிதானந்தா

'என்னை யார் என்று கேட்டால், மற்றவர்கள் யோகி, டாக்டர், நோயை குணப்படுத்துபவன், வேதம் கற்றவன், மந்திரவாதி, குழப்பமானவன் என்று சொல்லுவார்கள். ஒவ்வொருவரும் அவர்கள் சொல்லும் பார்வையில் சரியானது. என்னைக் கேட்டால், நான் ஆன்மிக வியாபாரி அல்ல என்பதை மட்டும் சொல்வேன்' கணபதி சச்சிதானந்தா.

எல்லா சாமியார்களுக்கு மக்களை கவர ஒரு விஷயம் தேவைப்படுகிறது. அதை வைத்து அவர்களை தங்கள் பக்கம் திருப்ப முடியும். அவர்களிடம் நன் கொடை வாங்க முடியும். தங்களை வளர்த்துக்கொள்ள முடியும்.

சாமியார்கள் பெருகிவிட்ட சூழ்நிலை யில் மற்ற சாமியார்களோடு தன்னை வித்தியாசப்படுத்திக்கொள்ள ஒரு



விஷயமாவது இருக்க வேண்டும். அப்போதுதான் சாமியார்களுக்குள் தங்களை வேறுபடுத்தி காட்டிக்கொள்ள முடியும். அதை வைத்து மக்களை தன் பக்கம் இழுக்க முடியும்.

மக்களும் சுலபமாக சாமியார்களை அடையாள காண முடியும். இல்லையென்றால் எந்த சாமியார் எதிலே ஸ்பெஷல் என்று சொல்ல முடியாமல் இரண்டு பேரும் ஒரே மாதிரிதான் என்ற கருத்து வந்தால் அவ்வளவுதான். மக்கள் தேடி வருவது பாதிக்கப்படலாம். எந்தத் தொழிலிலும் பத்தோடு பதினொன்றாக இருக்கலாம். ஆனால், சாமியார்களுக்கு, தங்களுக்கென்று ஒரு தனித்துவம் இருக்க வேண்டும்.

கணபதி சச்சிதானந்தா சுவாமிஜி மற்ற சாமியார்களைப்போல் கடவுள், பக்தியை மட்டும் கொடுக்காமல், இசையையும் சேர்த்து கொடுப்பதால், இவருக்கென்று தனி பக்தர்கள் கூட்டம் சேர்ந்தது.

இவர் மே 26, 1942-ல் கர்நாடக மாநிலத்தில் இருக்கும் கனகபுரா மாவட்டம் மெகேடடு என்ற இடத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் சத்ய நாராயணா.

மற்ற பிள்ளைகளைப் போலவே இவரும் பள்ளிக்குச் சென்று பள்ளிப்ப டிப்பை முடித்தார். ஆனால், பள்ளி படிப்பு தனக்கு எதுவும் சொல்லி தரவில்லை என்ற வெறுமை அவர் மனதில் இருந்தது.

கடவுள் அருளால் பஜனை கற்றுக்கொண்டார். முக்காலமும் அறிந்துகொள்ளும் ஞானம் இவருக்கு இருந்தது. இதனால், தன்னைத் தேடி வருபவர்களின் துன்பத்தை எளிதாக போக்கினார். இவை எல்லாவற்றிருக்கும் மேலாக, தான் கூறியதை மக்களை நம்பவைத்தார்.

தங்கள் துன்பத்தை போக்கிக்கொள்ள வந்தவர்கள் பலர் இவரது சீடர்களாகவே மாறிவிட்டனர். தன்னைத் தேடி வருபவர்களுக்கு பஜனை மட்டுமில்லாமல் யோகாவும் சேர்த்து சொல்லிக்கொடுப்பார்.

1966-ல் மைசூருக்கு சென்றார். இங்கு இருந்துதான் தனது ஆன்மிகத்தையும், மருத்துவத்தையும் பரப்ப வேண்டும் என்று முடிவு செய்தார். அவதூட தத்தா பீடம் என்ற ஆசிரமத்தை மைசூரில் தொடங்கினார். ஆரம்பக் காலத்தில் ஓலை வீட்டாக இருந்த இவரது ஆசிரமம் மக்கள் வெள்ளத்தால் வந்த நன்கொடையில் எப்படி இருக்கும் என்பதை நீங்களே புரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, 'ராகராகினி வித்யா' முறையில் பலவிதமான இசையோடு ஆசனங்களையும், நோய் குணமாக்கும் முறையையும் பயன்படுத்தினார்.

இவருடைய ஆசிரமத்தில் மகாசிவராதிரி அன்று நடக்கும் பூஜை மிகவும் பிரசித்திப் பெற்றது. குறிப்பாக, இவர் முன் நெருப்பு கூட தனது சக்தியை இழந்துவிடுமாம். இவருடைய ஆசிரமம் எல்லோரையும் வரவேற்கும். நாத்திகவாதிகள், இவரை நம்பாதவர்கள், பிற மதத்தினர் என்று எந்த பாகுபாடில்லாமல் இங்கு வரலாம்.

இங்கு உணவு இலவசம். மருத்துவம் இலவசம். இந்த ஆசிரமம் இரண்டு பள்ளிகளை எடுத்து நடத்துகிறது. இவ்வளவு செய்கிறார் நல்ல சாமியார்தானே என்று நீங்கள் நினைக்கலாம். இது உண்மையாகக்கூட இருக்கலாம். இதுவரை இவர் சொல்லிக்கொள்ளும் அளவில் எந்த சர்ச்சையிலும் சிக்கவில்லை. வெளிநாட்டில் இருந்து அதிக பணம் வருகிறது என்ற புகார் இல்லை. தத்தா பீடம் என்ற பெயரில் பல யோகா மையம் வைத்திருக்கிறார்.

இந்தியா முழுக்க இவருடைய 'தத்தா யோக' மையம் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடத்தில் இருக்கிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, மலேசியா போன்ற நாடுகளில்கூட இவரது தத்தா யோகா மையம் இருக்கிறது. அதனால், இவரும் ஒரு கார்ப்பரேட் சாமியார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், சாமியார்கள் பலரைப் பார்த்து பழக்கப்பட்ட நமக்கு எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குமோ என்ற சந்தேகத்தோடுதான் எல்லா சாமியார்களையும் அணுக வேண்டியதாக இருக்கிறது. உழைத்து முன்னேற ஆயிரம் வழிகள் உலகில் இருக்கும்போது எதற்காக சாமியார்களை நாம் தேடி போக வேண்டும் என்று கொஞ்சம் யோசித்தால், சாமியார்கள் வளருகிறார்களோ இல்லையோ நாம் வாழ்க்கையில் வளரலாம்.

**தத்தா பீடத்தின் கீழ் இயங்கும் பள்ளிகள்**

வேத பாடசாலை
(பழமையான முறையில் வேதங்கள் கற்றுத் தரப்படுகிறது. குருக்குல முறையில் கற்க வேண்டும். ஆந்திராவில் பீதாபுரம் என்ற பகுதியில் யஜூர் வேத பள்ளி நடத்தப்படுகிறது).

மாற்றுத்திறனாளிகளுக்கான வக்தேவி பள்ளி
(மாற்றுத்திறன் குழந்தைகளுக்காக கர்நாடகாவில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்து இப் பள்ளி நடத்தப்படுகிறது).

# 11

## டி.ஜி.எஸ்.தினகரன்

*'மகனே! மக்கள் மனதில் நான் அன்பை விதைத்தேன். அவர்கள் அதை உணர வில்லை. அதனால், என் அன்பையும், பாசத்தையும் உன்னிடம் பொழிந் துள்ளேன். அந்த அன்பைக் கொண்டு உடைந்த இதயத்தையும், காயம்பட்ட உடலையும் குணப்படுத்து. நீ கடவுளின் சக்தியாக தெரியப்படுவாய்' ஏசு தன்னிடம் கூறியதாக டி.ஜி.எஸ். தினகரன் கூறியது.*

வாழ்க்கையே வெறுத்துவிட்டது. எது செய்தாலும் திருப்தியில்லை. தொடங்கிய இடத்திலே இருப்பது போன்ற உணர்வு.

உடல்நலம் சரியில்லாத அம்மா. வேலையும் கிடைக்கவில்லை. எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது என்று தன்னை தானே நொந்துகொண்டார். எதாவது ஒரு தடங்கல் அவர் வாழ்க்கையில் வந்துகொண்டே இருந்தது.



இந்த கட்டத்தில் விரக்தியின் உச்சத்திற்கே அவர் சென்றுவிட்டார். தற்கொலை செய்துகொள்ளலாம் என்ற முடிவு செய்தார். என்ன தோன்றியதோ தெரியவில்லை. தற்கொலை செய்துகொள்வதற்கு முன் தனது மாமாவிடம் பேசச் சென்றார்.

'எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது?'

'கண்களை மூடி ஆண்டவனை பிராத்தனை செய். அவர் அருள் புரிவார்'

'அவரால் என் அம்மாவை குணப்படுத்த முடியுமா? எனக்கு வேலை வாங்கி தர முடியுமா?'

'உன்னுடைய எல்லா கேள்விகளுக்கும் இறைவனிடம் பதில் இருக்கிறது' என்றார்.

தன் வீட்டுக்கு வந்து கதவை மூடி, ஏசுவை நினைத்து ஜபம் செய்தார்.

'ஆண்டவரே! என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னித்து அருள் புரியுங்கள்' என்று கதறி அழுதார்.

அப்போது, தேவன் ஏசு அவர் முன் தோன்றி 'உன் துன்பங்கள் எல்லாம் விலகும்' என்றார். அன்றில் இருந்து தேவன் ஏசு அவருடன் உரையாடினார். அவருக்கு ஏசு தேர்வெழுதினார். அவருக்காக வங்கியில் வேலை வாங்கிக் கொடுத்தார். தற்கொலை செய்துகொள்ள நினைத்தவரை வெற்றியாளராக ஏசு மாற்றினார்.

இப்படி ஏசுவைப் பற்றி மத பிரசாரம் செய்து, வாரந்தோறும் தொலைக்காட்சியில் தோன்றி தனக்கென்று ஒரு சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கியிருக்கிறார் டி.ஜி.எஸ்.தினகரன். மூன்று தலைமுறைகளாக இறைவனை பற்றி பிரசாரம் செய்வதை தொழிலாக நடத்தி வருகின்றனர்.

சாமியார்கள் என்கிறபோது மதச்சார்பில்லாத தொழிலாக உள்ளது. ஆனால் குறிப்பிட்ட மதத்தில் பிறந்தவர்கள், அந்த மத, இன மக்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறுகிறார்கள். சாமியார்களுக்கே ஜாதி, மத, இன பேதம் இல்லாதபோது, கார்ப்பரேட் சாமியார்களுக்கும் இந்த வேறுபாடுகள் கிடையாது.

எல்லா மதங்களிலும் பாவத்திற்கு தண்டனை இருக்கிறது. தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறை திருத்திக்கொள்ள நினைப்பவர்களுக்கு

இன்னொரு வாய்ப்பு தேவைப்படுகிறது. அந்த வாய்ப்பு மற்ற மதம் அல்லது கடவுள் அனுமதிக்கிறதோ இல்லையோ என்று தெரியாது. ஆனால், கிறிஸ்தவ மதம் அனுமதிக்கிறது. ஒரு பாவத்தை காட்டி பயமுறுத்த, கிறிஸ்தவம் மட்டும்தான் பாவ மன்னிப்பு கொடுத்து அரவணைக்கிறது. அதனாலே கிறிஸ்தவத்திற்கு மதம் மாறியவர்கள் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவ மதத்தில் அருள் வழங்குகிறோம், உங்களுக்காக பிரார்த்திக்கிறோம் என்று சொல்லிச்சொல்லி பெரும் பணக்காரர் களானவர்கள் பலர். காலை அல்லது இரவு எதாவது ஒரு தொலைக்காட்சியைப் போட்டீர்கள் என்றால் யாரோ ஒருவர் கையில் பைபிளோடு கண்களை மூடி ஜபிப்பார். ஆண்டவனிடம் ஆசிர்வாதத்தை பெற்றுத் தருவார். எப்படி இப்படி ஒருவரால் தொடர்ந்து பிரார்த்திக்க முடியும். தொடர்ந்து உச்சஸ்தாதியில் பேச முடியும். நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஆனால், இவர்கள் யாருக்காக பிரார்த்திக்கிறார்களோ அதை அந்த மக்கள் உணர்ந்தார்களா? உணர்ந்ததாக சொல்லப்படுபவர்கள் நிஜமான வர்களா என்று சந்தேகம் மாற்று மதத்தினரிடம் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

அதைப் பற்றி இவர்கள் கவலைப்படவில்லை. நன்கொடையோடு, உங்கள் பிரார்த்தனை கடிதம் எழுதினால் உங்கள் பெயரில் பிரார்த்தனை நடக்கும். தொலைக்காட்சியில் உங்கள் கடிதம் வாசிக்கப்படும். அவ்வளவுதான்.

இவர்கள் பிரார்த்தனையில் இறைவனின் அருளால், கடிதம் எழுதியவர்களுக்கு பிரச்னை தீர்ந்ததோ இல்லை இதுபோன்ற கார்ப்பரேட் சாமியார்கள் பணக்காரராக இருக்கிறார்கள்.

டி.ஜி.எஸ்.தினகரன், கிறிஸ்தவ மதப் பிரசாரங்களில் பணம் சம்பாதிப்பதில் முன்னோடி. அவர் மகன் பால் தினகரன், அவரது பிள்ளைகள் என்று இறைவனை பிரார்த்திப்பதில் படை எடுத்து இருக்கிறார்கள். கோயம்பத்தூரில் காருண்யா பல்கலைக் கழகம் நடத்தி வருகிறார்கள்.

1935-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த இவர், பாளையம்கோட்டை செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்தார். 1955-ல் மெட்ராஸ் பல்கலைக்கழத்தில் பி.எஸ்சி., பட்டம் பெற்றார்.

படித்து முடித்ததும் பேங்க் வேலை. ஏசு மீது அதிக ஈடுபாடு உடையவர். ஆரம்பத்தில் சிறு சிறு மத பிரசார நிகழ்ச்சி, போதனை எல்லாம் செய்து வந்தார். அதன் பின் தன் வேலையை விட்டு விட்டு முழு நேரம் ஏசுவை பற்றி பிரசாரம் செய்ய முடிவெடுத்தார். 'ஜீஸஸ் கால்ஸ்' என்ற அமைப்பை தொடங்கினார்.

ஏசுவைப் பற்றி இவரது பிரசாரத்தால் 'ஜீஸஸ் கால்ஸ்' அமைப்பு வளர்ந்தது. வருமானமும் பெருகியது. இந்தியாவில் முதன்முதலாக தொலைக்காட்சியை பயன்படுத்தி மதப்பிரசாரத்தை செய்தவர் இவர்தான். இவரை முன்னோடியாக வைத்து மற்ற மதத்தினரும் தொலைக்காட்சியில் மதப்பிரசாரம் செய்ய தொடங்கினார்.

தனது மதப்பிரசாரத்தில் மகன் பால் தினகரனையும் சேர்த்துக் கொண்டார். 2008-ல் இவர் இறக்கும்போது, ஜீஸஸ் கால்ஸ் இந்தியா முழுக்க இருபதுக்கும் மேற்பட்ட கிளைகள் இருந்தது. அமெரிக்கா முதற்கொண்டு பல்வேறு நாடுகளில் இவரது கிளைகள் இருக்கிறது.

இவர்களை விமரிசிக்க அதிகம் மெனக்கட தேவையில்லை. மதப் பிரசாரத்தில் மேடையில் இவர்கள் செய்யும் வேலைகள் சிலருக்கு கேலி கூத்தாகவே மாறிவிட்டது.

இவர்கள் நடத்தும் ஆசீர்வாத கூட்டம், அற்புத கூட்டத்தில் குருடனுக்கு கண்பார்வை வர வைப்பது, நோய்களை குணப்படுத்து வதை காட்டுவதும் பகுத்தறிவாளர்கள் மட்டுமல்ல இறைவனை வழிபடுபவர்களால்கூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இவர்களைப்போல் டி.வி.யில் மத பிரசாரம் செய்பவர்கள் பல கடுமையான விமரிசனங்களை சந்தித்துக்கொண்டு இருக்கிறார்கள். கிறிஸ்துவ மதத்தை சேர்ந்த ஜான் பெக் ஆர்தர், டி.வி. மதப் பிரசாரங்களை 'தங்கள் சொந்த லாபத்திற்காக கிறிஸ்துவ மதத்தையும், ஏசுவையும் பயன்படுத்திக்கொள்கிறார்கள். பலவீனமான மக்களை மேலும் பலவீனமாக்குகிறார்கள்' என்றார்.

சில சமயம் ஏசுவோடு உரையாடுவதாகக் கூறுவது அபத்தத்தின் உச்சம். ஆனால், இவர்களை நம்பி பிரார்த்தனை செய்யும் மக்கள் இருக்கிறார்கள். பிரார்த்தனைக்காக பணத்தை அனுப்புகிறார்கள்.

இறைவனை நேரில் பார்ப்பது உண்மையா பொய்யா என்று ஏசுவுக்கு தான் வெளிச்சம். ஆனால், ஏசுவின் பெயரால் மூன்று தலைமுறைக்கு

சொத்து சேர்ந்திருக்கிறது என்பது மட்டும் உண்மை. அவர்களால் மறுக்க முடியாது.

ஆரம்பத்தில் பிரார்த்தனைக்கு கடிதம் எழுதியவர்கள் இப்போது மின்னஞ்சல் அனுப்பி பிரார்த்தனைக்கு விண்ணப்பம் போடுகிறார்கள். மணி ஆர்டரில் பணம் அனுப்பியது போய் இணையத்தில் பணத்தை நன்கொடையாக பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

தொழில்நுட்ப வளர்ச்சியில் தினகரன் குடும்பத்தினர் பல விதத்தில் பிரார்த்தனை, நன்கொடை பெருகிறார்கள். ஆனால், இன்னும் மாறதது இறைவனிடம் இவர்கள் வேண்டுவது மட்டும் தான். அதை நம்பும் மக்கள்தான்.

**இவருக்கு கீழ் இயங்கும் நிறுவனங்கள்**

காருண்யா பல்கலைக்கழகம்
ஜீஸஸ் கால்ஸ்

# 12

## சாகீர் அப்துல் கரிம் நைக்

*'ஒவ்வொரு இஸ்லாமியனும் தீவிரவாதி தான். ஆம்! சமூகத்தில் நடக்கும் அநியா யங்களை எதிர்த்துக் கேட்பதில் தீவிரமாக இருக்கும் தீவிரவாதி.' - சாகீர் நைக்.*


*'சாகீர்! வா விளையாட போகலாம்'*

*'இல்லை. நீங்கள் செல்லுங்கள். நான் குரான் படிக்க வேண்டும்'*

*'தொழுகையின்போதுதான் குரான் படிக்கிறாயே!'*

*'குரானில் பல நுணுக்கமான விஷயங்கள் இருக்கிறது. அல்லாவை புரிந்துகொள்ள குரான் ஒன்றுதான் சிறந்த வழி' என்றார் சாகீர்.*

*உண்மையில் குரான்தான் இவருக்கு எல்லாம். அதைப் பற்றி பேசாமல் இருக்க முடியாது. அல்லா நாமத்தை உச்சரிக்கா மல் இவரால் இருக்க முடியாது. கடவுள் நம்பிக்கை அதிகமுடையவர்.*



எல்லாம் நல்ல விஷயம். ஆனால், மதத்திற்கு ஆதரவாக பேசுகிறேன் என்று ஏதாவது பேசி சர்ச்சையில் சிக்கிக்கொள்வார். அவருக்கு எதிராக பல விமரிசனங்கள் வரத் தொடங்கிவிடும்.

தான் பேசியதை எப்படி நியாயப்படுத்த வேண்டும் என்று சிண்டை பிய்த்துக்கொண்டு இருப்பவர். ஒரு கட்டத்தில் விமரிசனங்களை புறக்கணிக்கவே தொடங்கிவிட்டார். ஆனால், பொது மேடையில் பேசும் போதும் தனது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. மற்ற மதத்தினரைவிட இஸ்லாமியர்கள்தான் இவரின் பேச்சுக்கு அதிக கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

கடவுள் பெயர், மதப் பிரசாரம் செய்து சம்பாதிப்பது போன்ற விஷயங்கள் இந்து, கிறிஸ்தவத்தில் மட்டுமல்ல, இஸ்லாமிய மதத்திலும் இருக்கிறது. குரானின் பெருமையை சொல்லுவதும், நபிகள் நாயகத்தின் கொள்கையை எடுத்துரைக்கவும் பலர் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களைப் போலவே டி.வி.யில் தங்கள் மதக் கொள்கையை பிரசாரம் செய்பவர்கள் இஸ்லாமியத்தில் இருக்கிறார்கள். அவர்களில் மிக முக்கியமானவர் சாகீர் நைக். முழு பெயர் சாகீர் அப்துல் கரிம் நைக்.

அக்டோபர் 18, 1965 அன்று மும்பையில் பிறந்தார். மருத்துவம் படித்தவர். 1987-ல் இஸ்லாமிய மத பிரசாரகரான அஹ்மத் தீதத் என்பவரை சந்தித்தார். அவரின் பேச்சாலும் அதிகம் ஈர்க்கப்பட்டார். அவரைப்போல தானும் மதப் பிரசாரம் செய்பவராக இருக்க வேண்டும் என்று விரும்பினார். 1991-ல் இஸ்லாமிய பிரசாரத்தில் தன்னை ஈடுப்படுத்திக்கொண்டார். ஒவ்வொரு இஸ்லாமிய இளைஞனும் இஸ்லாமிய மதத்தைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். தன் கல்வியோடு மதத்தையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவர்.

இஸ்லாமியத்துக்கு எதிரான விமரிசனங்களை நீக்குவதை தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்டவர். ஒவ்வொரு மத நூல்களை, மதங்களை பற்றியும் தெரிந்துகொண்டு குரானை ஒப்பிட்டு பேசுவார். ஒவ்வொரு மத தலைவர்களோடு அவரவர் மதங்களைப் பற்றி விவாதம் நடத்தும்போது, கேட்பவர்களுக்கு இரண்டு மதங்களை பற்றிய தெளிவு கிடைத்தது. அடுத்தவர்கள் மதத்தின் மகத்துவத்தையும் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால், இது போன்ற கூட்டங்கள் மதத்தை புரிந்துகொள்ளும் நோக்கத்தை விட வணிக நோக்கம் அதிகமாக இருக்கிறது என்ற விமரிசனம் அதிகமாக எழுந்தது.

ஜனவரி 21, 2006-ல் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரோடு பெங்களூரில் 'இந்து, இஸ்லாமில் கடவுள்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்த உரையாடல் எந்த அளவுக்கு முக்கியமான பதிவோ, அந்த அளவுக்கு வணிக நோக்கமும் இருந்தது என்று கூறினர். சாகீர் நைக் கூறும் உலக அரசியல் பற்றிய கருத்துக்கள் சில சமயம் பத்தாம்பசலித்தனமாக இருக்கும்.

குறிப்பாக, அமெரிக்காவில் நடந்த இரட்டை கோபுர தாக்குதல், இஸ்லாமியர்களை விரோதிகளாக காட்டுவதற்காக ஜார்ஜ் புஷ்ஷே தங்கள் கட்டடத்தை வெடிக்க வைத்தார் என்று கூறினார். அமெரிக்கா, தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்று சொல்லிக்கொண்டு செய்த கொடுமைகளை பார்த்தால் ஜார்ஜ் புஷ் அப்படி செய்திருந்தாலும் செய்திருப்பார் என்ற சந்தேகம் வரத் தொடங்கியது.

ஒருமுறை யூடியூப் வீடியோ ஒன்றில், 'ஒசாமா பின்லேடன் இஸ்லாமியத்தை பின்பற்றுகிறார். அவர் இஸ்லாமை எதிர்க்கும் தீவிரவாதிகளுக்கு தீவிரவாதி. நான் அவருக்கு ஆதரவாக இருப்பேன். ஒசாமாவை எதிர்ப்பவர்கள், இஸ்லாமியத்தை எதிர்ப்பவர்கள்' என்று கருத்து கூறியிருந்தார். இதனால், பலரின் கண்டனத்துக்கு ஆளானார். குறிப்பாக, இஸ்லாமியர்களே கண்டனம் தெரிவித்தனர்.

லக்னோ இஸ்லாமிய அமைப்பு இவரின் பேச்சுக்கு எதிராக பத்வா போட்டனர். ஆனால், இதைப் பற்றியெல்லாம் சாகீர் கவலைப்படவில்லை. தனது சொற்பொழிவு பயணத்தை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறார். இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட 'பவர்புல் 100 இந்தியர்கள் 2010' என்ற பட்டியலில், இவருக்கு 89-வது இடம் கிடைத்தது. 'இஸ்லாமிக் பர்சனாலட்டி ஆப் தி இயர் 2013' என்ற விருதை துபாய் பிரதமரிடம் இருந்து பெற்றிருக்கிறார். ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு சென்று இருக்கிறார். அதே சமயம், இவரது பேச்சால் இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளில் இவருக்கு அனுமதி மறுக்கப்பட்டு இருக்கிறது.

**இவரது கீழ் இயங்கும் நிறுவனங்கள்**

இஸ்லாமிக் இன்டர்நேஷனல் ஸ்கூல்
இஸ்லாமிக் ரிசர்ச் பவுண்டேஷன்
பீஸ் (Peace) டி.வி. - துணை தயாரிப்பாளர்

மாறிவரும் வாழ்க்கைச் சூழல், உணவு முறைப் பழக்கம் போன்ற வற்றால் மனிதர்களுக்கு உடல் அளவிலும் மனத்தளவிலும் எத்தனையோ பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில், பெரும்பாலானவர்கள் அறிவியல் மற்றும் மருத்துவ முறையில் நிவாரணம் வேண்டி மருத்துவர்களைத் தேடிச் செல்கின்றனர். மற்றவர்கள், ஆன்மிகவாதிகளைத் தேடிச் செல்கின்றனர்.

ஒருகாலத்தில், ஆதிசங்கரர், சங்கராச்சாரியார், சாய்பாபா, குருநானக் என எத்தனையோ துறவிகள், தங்களுடைய ஆன்மிக அனுபவங்களை மக்களை நல்வழிப்படுத்தவும், நெறிப்படுத்தவும் பயன்படுத்தினர். அப்படி மக்களுக்குச் செய்யும் 'சேவை'யை, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று அவர்கள் நினைத்துச் செயல்படுத்தினர். இவர்களைத் தொடர்ந்து வந்த சிலர், எதையும் இலவசமாகக் கொடுத்தால் மக்கள் உதாசீனப்படுத்திவிடுவார்கள், மக்கள் மத்தியில் 'நிற்க' முடியாது என்று நினைத்து, மக்களுக்கான சேவையில் கொஞ்சம் மசாலாவைச் சேர்த்துக் கொண்டதன் விளைவு, 'கார்ப்பரேட்' சாமியார்கள் என்ற முத்திரை.

இன்று உலக அளவில் எத்தனையோ ஆன்மிகவாதிகள், மக்களுக்கான உண்மையான சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் புத்தகத்தில், இந்தியாவில் செயல்பட்ட, செயல்பட்டுக்கொண்டிருக்கும் சில ஆன்மிக வாதிகளைப் பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு சாதாரண நிலையில் இருந்து இன்று பெரிய பெரிய ஆசிரமங்களையும், கல்வி நிலையங்களையும், மருத்துவமனைகளையும் வைத்துக்கொண்டு, மக்களுக்கான சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் பின்னணியில் உள்ள மர்ம முடிச்சுகளை அலசி ஆராய்ந்துள்ளார், நூலாசிரியர் குகன்.

₹ 90

மதி நிலையம்

MN 438